ISSN 2792-1026

# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

Sky Tamil Media Network (Pvt)Ltd
பதிவு இல: PV 00249082

+94776391188 www.skytamilmedia.com skytamil.lk@gmail.com

மாதந்தோறும் இதழ் - 21 04 ஜுலை 2022 @skytamil.lk





சிறந்த ஆளுமையுடையவர்களை கௌரவிக்கும் நோக்கில்
துணிந்தெழு விருது 2022



உலகத்தில் மிகப்பெரிய நூலகம் துபாயில் திறப்பு



கத்தாரிலுள்ள செயற்கை கிராமம் உங்களுக்கு தெரியுமா?



கத்தாரில் நடைபெற்ற தமிழ்மகன் அவார்ட்ஸ் 2022

## யார் இந்த கரீம் டைம் ?

கரீம் டைம் உருவானது எப்படி..?

KAREEM TIME ENTERTAINMENT

# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

@skytamil.lk

மாதந்தோறும் | இதழ் - 21 | 04 ஜூலை 2022




## உலகத்தில் மிகப்பெரிய நூலகம் துபாயில் திறப்பு

07 பக்கம்

08 பக்கம்

## சிறந்த ஆளுமையுடையவர்களை கௌரவிக்கும் நோக்கில் துணிந்தெழு விருது 2022






## கத்தாரிலுள்ள செயற்கை கிராமம் உங்களுக்கு தெரியுமா?

23 பக்கம்

32 பக்கம்

## யார் இந்த கரீம் டைம் ?

கரீம் டைம் உருவானது எப்படி..?







## சமாதான நகரமும் எமது பாடசாலையும் பண்டாரவளை சேர் ராசிக் பரீட் மகா வித்தியாலயத்தின் அண்மைக்கால வளர்ச்சிப் படிகள்... (ஒரு சுருக்கப் பார்வை)

55 பக்கம்

# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்


**பிரதம ஆசிரியர்:**

ஜே.எம்.பாஸித்

**இணையாசிரியர்:**

நுஸைலா பதுர்தீன்
றொஸான் முஹம்மட்
அஸ்வர் ரிஸ்வி

**நிர்வாக குழு:**

பாதிமா முனீரா
ஆர்.எம்.சப்ராஸ் - ஊடகவியலாளர்
CMU. தாரிக் முஹம்மத்
குலசிங்கம் கிலசன் - ஊடகவியலாளர்
முஹம்மட் ஹாசில் - ஊடகவியலாளர்
பஹ்ரியா பாயிஸ்
ஜவ்சன் அஹமட் - ஊடகவியலாளர்
ஷிஹானா நௌபர்
பாத்திமா சகியா

**ஆசிரியர் குழு :**

ஆதம்பாவா முஹம்மது சாஜித்
எம்.பஹ்த் ஜுனைட் - ஊடகவியலாளர்
கமறுன் நிஸாம்டீன்
எம்.ஏ.எப்.முபஸ்ஸிரா
மஜினா உமறு லெவ்வை
பாத்திமா பின்த் சம்சுதீன்
அகீப் நஸீர்
அஸ்மிா நிசாம்
ஷகீனா ஷாகிர்

**ஆலோசகர்கள் :**

கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல்
கவிஞர் நஜ்முல் ஹுசைன்
ரஷீத் எம். பியாஸ் (நளீமி)
வசீமுல் அக்றம் - சட்டத்தரணி
பிஸ்ரின் முஹமத் - ஊடகவியலாளர்
ரினூசா நௌஷாட் - ஊடகவியலாளர்
ஜெஸீம் ஏ. ஹமீட் - ஐக்கிய இராஜ்ஜியம்


இறைவனின் அருளாளும், துணிந்தெழு
வாசகர்களின் ஆதரவுடனும், சஞ்சிகை
ஆசிரியர் குழுவினரின் விடா முயற்சியுடனும்,
புதிய மாறுதல்களுடன் வீறுநடை போட்டுக்
கொண்டிருக்கிறது எமது துணிந்தெழு சஞ்சிகை.
புகழனைத்தும் இறைவனுக்கே

துணிந்தெழு சஞ்சிகை வளர்ச்சிக்கு
உறுதுணையாக இருக்கும் எல்லாம்வல்ல
இறைவனுக்கும், வாசகர்களுக்கும், சஞ்சிகை
ஆசியர்குழாமிற்கும் நெஞ்சார்ந்த நன்றிகள்.

தங்களது படைப்புகளும் எங்களது சஞ்சிகையில்
இடம்பெற வேண்டும் எனில் கீழ் குறிப்பிட்ட
ஈமெயில் மற்றும் வட்சப் இலக்கத்திற்கு
அனுப்பி வையுங்கள்

+97431060249 | 0757000791
skytamil.lk@gmail.com
www.skytamilmedia.com



**ஜே.எம்.பாஸித்**
**பணிப்பாளர்**
**ஸ்கை தமிழ் மற்றும்**
**துணிந்தெழு சஞ்சிகை**

+94776391188

விரைவில்...

GET IT ON Google Play | Available on the App Store

#Thuninthelu #skytamil.lk skytamil.lk skytamil.lk

Scan QR Code




# பூணூல் இலக்கிய விமர்சனம்



ஜவ்சன் அஹமட்
(துணிந்தெழு சஞ்சிகை குழு உறுப்பினர்.)

"நீதி புகட்டும் நல்ல நூல்கள் நல்ல மனிதர்கள் போன்றது யுகங்கள் மாறினாலும் அதன் நீதிக்கருத்துகள் அழிவதில்லை." (கவிப்பொய்கை ஜவ்சன் அஹமட்)

வாசகர்களே இதோ உங்களிடம் மூன்று எழுத்தாளர்களின் மூன்றுவிதமான கவிதை நூல்களைப் பற்றிய இலக்கிய விமர்சனத்தை எழுதி ஒப்புவிப்பதில் அகம் மகிழ்கிறேன். இந்த மூன்று நூல்களும் இலை மறை காயாக எம்மிடையே காணப்படும் இளம் எழுத்தாளர்களின் முதல் படைப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் இந்த மூன்று நூல்களையும் ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பு மற்றும் துணிந்தெழு சஞ்சிகை நிறுவனம் உலக மகளிர் தினத்தை ஒட்டி 08.03.2022 இரவு 7.00 மணிக்கு வெளியீடு செய்து வைத்தது, இணையத்தில் மின் இதழ்களாக வெளியீடு செய்யப்பட்டு பின்னர் அவை அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டன. இப்புத்தகங்கள் உயிர்ப்பெற சகல உதவி ஒத்தாசைகளையும் ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பு மற்றும் துணிந்தெழு சஞ்சிகை பிரதானி ஜே.எம் பாஸித் அவர்கள் அழகாகவும், நேர்த்தியாகவும் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

நூல்கள்.
01. இளங்காத்து :- யோகராசா கவிதா (கவி நிலா)
02. ஈரம் காயாத எழுத்துகள் :-
தௌபீக் முஹம்மது நவீத்
03. நினைவுப் பரிசு:-நியாஸ் பாத்திமா சனூசியா

அம் மூன்று நூல்களைப் பற்றிய நயம் இதோ.

01. அன்றைய தினம் முதலாவது வெளியீடு செய்யப்பட்ட இளங்காத்து என்ற இந் நூலை கவிதாயினி யோகராசா கவிதா அவர்கள் எழுதி இருந்தார். இவரை கவி நிலா என்ற புனைப்பெயரில் அறிமுகம் செய்வதுண்டு. இப்புத்தகமானது அழகிய அட்டைப்படத்துடன் வடிவமைப்பு செய்யப்பட்டு நேர்த்தியான 59 பக்கங்களை கொண்டு காணப்பட்டது. மேலும் இதன் பக்க அமைப்புகள் சிறப்பாகவும் புகைப்படங்கள் கவிதையோடு ஒத்துப்போகக்கூடியதாகவும் துல்லியமாக காட்சி தருகிறது.

முதல் பக்கத்தை புரட்டுகையில் அணிந்துரையை காணக்கிடைத்தது இதனை எழுதி இருந்தார் பதுளை சரஸ்வதி மத்திய கல்லூரி ஆசிரியரும், அன்னாமலை சக்தி அறநெறி பாடசாலை அதிபருமாகிய பேரானந்தம் ஹோவி அவர்கள். அவர் கவிதை எழுதுதல், வாசித்தல், அதை இரசித்தல் என்பன விசேட திறமை என்பதை சொல்லிவிட்டு நூலாசிரியரை பாராட்டி ஊக்கப்படுத்திய பின்னர் தன்னுரையை முடித்திருந்தார்.

பின்னர் வாழ்த்துரையை ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகை பிரதானி ஜே.எம் பாஸித் அவர்கள், நூல் பற்றிய சிறு அறிமுகத்தோடு ஆரம்பித்து கவிதாயினி யோகராசா கவிதா அவர்களை ஊக்கப்படுத்தி பிரார்த்தனைகளுடன் முற்றுச் செய்திருந்தார்.

அதன் பின்னராக என்னுரை எனும் தலைப்பில் கவிதாயினி யோகராசா கவிதா அவர்கள் நூல் பற்றிய குறிப்போடும் அதன் மையக்கருத்து என்னவென்பதையும் சுருக்கமாக கூறி பின்னர் தன்னை ஈன்றெடுத்த அன்னைக்கு இந்நூலை சமர்ப்பணம் செய்திருந்தார்.

பொருளடக்கம் பார்ப்பது நல்லதென எண்ணி நகரலானேன்




50 தலைப்புகள் என் கண்ணெதிரே தோன்றின. சற்று உற்று நோக்கி பார்க்கையில் அத்தனை தலைப்புகளும் என் அடி மனதை வருடி மெய் சிலிர்க்கச் செய்ய மெதுவாக நகர்ந்தேன்.

முதல் கவிதை நான் எழுதும் கவிதை உனக்கு புரியாது என்ற தலைப்பில் தன் கவிதை தனக்கே சொந்தம் பிறருக்கு புரியாது என்பதையும் அது புரியாவிடின் திணிக்கவும் மாட்டேன் என்பதையும் மையப்படுத்தி எழுதி இருப்பதை நான் கண்டு கொண்டேன்.

பின்னர் இயற்கை, வாழ்கையின் தேடல், மழலை என பல்வேறு பட்ட 50 தலைப்புகளில் கவிதைகளைக் காணக்கிடைத்தது. எழுத்துப் பிழைகள் இல்லாமல் நம் இலேசான மொழிநடையில் சிறப்பான இலக்கிய நடையுடனும் எழுதப்பட்டிருந்த அத்தனை கவிதைகளும் உள்ளத்தில் பெரும் மாற்றங்களையும் வைராக்கிய எண்ணங்களையும் விதைத்தது என்று தான் சொல்ல வேண்டும். ஏராளமான கவிதைகளில் உள்ள சொற்பதங்கள் என்னை பெரிதும் ஈர்த்தது என்று தான் சொல்ல வேண்டும்.

13 வது கவிதையாகிய "ஏழையின் கல்வி" அதன் வரிகள் கண்ணீரை வரவழைத்தது. "ஒரு கைபிடி உணவைக்கூட பகிர்ந்து கொடுக்க யாருமில்லை" 38 வது கவிதையாகிய "உன் நியாபகம் வருதே" என்று தலைப்பிட்ட கவி வரிகளில் "சிறு பிரிவிற்க்கு பின் வரும் காதலின் நேசங்கள் ஒரு போதும் வற்றுவதில்லை" 41 வது கவிதை வரிகளில் "விழிகள் கண்ணீரில் கசியும் நேரம் நீ அலை பேசியை அணைத்திட்ட நேரம்" 49 வது கவிதையில் கடலின் அதிசயங்கள் பற்றிச் சொல்லும் அத்தனை வரிகளும்.

இவைகள் இது போன்ற இன்னும் பல வரிகள் பெரிதும் என்னை யோசிக்க வைத்தது அது மட்டும் இன்றி வாழ்க்கையில் அனுபவித்த உணர்வினை இரை மீட்ட உதவியது எனலாம். மேலும் கவிதைகளை நோக்குமிடத்து அதிகளவான கவிதைகள் காதல் சம்பந்தப்பட்டவையாக காணகிடைத்தன. அவ்வாறின்றி பொதுப்படையான கவிதைகளாக நாம் எழுதும் கவிதைகள் அமைந்தால் நன்றாக இருக்கும் என்பது என் கருத்து, அது மட்டுமின்றி சில இடங்களில் வெளிப்படையாக கருத்துக்கள் சொல்வது போன்ற உணர்வுகளை கண்டேன். அப்படி இல்லாமல் கவிநடையோடு எழுத முயற்சி செய்யுங்கள். கவி நயம் மாறுபடாமல் அதன் ஓசை, சந்தம், எதுகை, மோனை என்பன இன்னும் ஆழமாக கவனிக்கப்பட வேண்டும் என்பதையும் சொல்லிக் கொள்கிறேன். இறுதி அட்டைப்படத்தில் நூலாசிரியை கவிதாயினி யோகராசா கவிதா அவர்கள் பலருக்கு நன்றி கூறி எழுதிய நன்றி உரை காணப்படுகிறது.


02. அன்றைய தினம் வெளியீடு செய்யப்பட்ட இரண்டாவது நூல் புல்மோட்டையை தாயகமாக கொண்ட மருத்துவ பீட மாணவன் இளம் எழுத்தாளர் தௌபீக் முஹம்மது நவீத் எழுதிய ஈரம் காயாத எழுத்துகள்.

இந் நூலும் இணையத்தில் இலவசமாக தரவிறக்கம் செய்யும் வகையில் வெளியிடப்பட்டாலும் அதன் வரிகளின் ஈரங்களை புத்தகத்தை வாசிக்கின்ற போது உணர்வுபூர்வமாக உணர முடிகிறது. அதன் படி நூலசிரியர் சிறந்த பெயரை தெரிவு செய்தமை நன்கு புலப்படுகிறது. பின்னர் பலரது வேண்டுதலின் படி இந் நூல் அச்சிடப்பட்டது அதுவும் அந் நூலின் வெற்றியின் வெளிப்பாடு எனலாம். இதன் முழு பதிப்புரிமை நூலாசிரியர், ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகைக்கு உரித்தானது.

இப்புத்தகங்கள் மொத்தமாக 34 பக்கங்களை கொண்டது. அதில் 26 பக்கங்கள் 26 விதமான கவிதைகளை கொண்டது. முதல் 7 பக்கங்களுள் அட்டைப்படம் தனித்தன்மை வாய்ந்ததாகவும் எழுச்சி மிக்கதாகவும் காணப்பட்டது. இரண்டாம் மூன்றாம் பக்கங்களைப் புரட்டி புத்தகம் பற்றிய சிறு குறிப்பு அறியக்கிடைத்தது. அடுத்தபடியாக புத்தகங்களின் நிலைப்பாட்டையும் அதன் ஆசிரியரின் சொற் செறிவையும் அறியும் வண்ணம் அணிந்துரை காணப்படுகிறது, இப் புத்தகத்திற்கு அணிந்துரை வழங்கி இருந்தார் புல்மோட்டை முஸ்லிம் தேசிய பாடசாலை அதிபர் என். எம். ஏ. வஹாப் அவர்கள். அதிபர் தொடர்ந்து புத்தகம் எழுதுவது சமூகத்தின் புரட்சி என்பதையும் நூலாசிரியர் தமது பாடசாலை பழைய மாணவர் என்ற செய்தியையும் சொல்லி நூலாசிரியரின் திறமையை வாழ்த்துவதோடு பிராத்தனை செய்வதையும் காணக் கூடியதாக இருக்கிறது.

அடுத்தபடியாக என்னுரை என்று நூலாசிரியர் தனது கன்னி நூலின் கன்னி உரையினை எழுதி இருந்தார் அதில், தான் இந்த நூலை தன் வாழ்வின் முக்கிய நிகழ்வுகளின் செதுக்கல் என்கிறார். பின்பு பழைய நிகழ்வுகளின் இரை மீட்டல் என்பதாகவும் சொல்லி இருக்கிறார். மேலும் நூலாசிரியர் இந் நூலை தன் பொற்றோருக்கு சமர்ப்பணம் செய்த முறை மிக வித்தியாசமாகவே இருக்கிறது.

புத்தகங்கள் வாசிக்கப்படும் முன்னர் கவனிக்கப்பட வேண்டிய முக்கிய அம்சங்களில் ஒன்று பொருளடக்கம், இப் புத்தகத்தை பொறுத்தவரையில் 07 வது பக்கம் 26 தலைப்புக்களை பொருளடக்கத்தில் காணக்கிடைத்தது. அதில் உள்ள ஒவ்வொரு தலைப்புகளும் வித்தியசமான தொனிப்பொருளோடு காணப்பட்டது எனலாம். அது மட்டுமின்றி புரட்டி படிக்க வேண்டும் என்ற ஆசையை தூண்டும் விதமாகவும் அமைந்திருந்தது.




பக்கம் புரட்டுகையில் தாய்மையோடு ஆரம்பமாகிய வரிகள் அவர் தன் தாய்மீது கொண்ட பற்றுதலையும், அன்பையும் உணர்த்துகிறது . அக் கவிதையின் இறுதி வரிகளான "பாரில் சொந்தங்கள் பல சூழ்ந்தும் தீங்கு என்றதை சிறிதும் எண்ணாமல் அன்பை ஊட்டும் ஜீவன் தாய்" என்ற வரிகள் என் மனதில் உறவுகள் தந்த காயங்களை உணரச் செய்ததுடன் தாயவளின் அரவணைப்பையும் நினைவூட்டியது.

தொடர்ந்தும் ஒவ்வொரு கவிதைகளாக படிக்க முயன்றேன் பக்கம் புரட்டலானேன் என்னை கவிஞர் பல வருடங்கள் பின்னோக்கி நகரும் விதமாக ஆக்கிவிட்டார் "சிறு பிராயம்" எனும் கவி வரிகள் மூலமாக. அடுத்த கவிதையாக பெண்கள் படும் அவஸ்தைகளையும் சிரமங்களையும் சொல்லும்படியான தீட்டைப்பற்றி அமைந்திருந்தது அந்த வரிகள் கவிஞர் பெண்கள் மீது கொண்ட கண்ணியம் கலந்த மரியாதையை விளங்கிக் கொள்ளும் விதத்தில் இருந்தன.

அக் கவிதையில் "மங்கையோடு தொடர்ந்தது மாதவிடாய்" என்ற இறுதி இரு வரிகள் மனித குலத்திற்க்கு பெரும் பாடம் புகட்டிச் செல்கிறது எனலாம். இப்படியாக பெரும் எதிர்பார்ப்புகளுடன் பக்கம் புரட்டி படிக்கலானேன் அத்தனை வரிகளும் அதன் தலைப்புகளும் மிக நேர்த்தியாகவே இருந்தது. நான் விரும்பிப் படித்த கவிதைகளாக தாய்மை, ஏழ்மை, பாடசாலை நாட்கள், போதை, மரணம், பட்டமரம் எனலாம் அதன் வரிகளும் சிறப்பு என்பேன். நூலாசிரியரின் மொழி ஆளுமையும் சொற்பதங்களை உபயோகிக்கின்ற முறையும் அவர் தமிழ் மீது கொண்ட பற்றுதலையும் ஆழத்தையும் நன்கு புலப்படுத்துகிறது.

இப் புத்தக சிந்தனைக்கு பின்னால் ஒழிந்து காணப்படும் அவரின் தூர நோக்கு, சிந்தனை, முயற்சி என்பன அவரின் தலைப்புக்களை கவனிக்கின்ற போது அழகாக புலப்படுகிறது. இறுதியில் நூலாசிரியர் தௌபீக் முஹம்மது நவீத் அவர்களால் நன்றி உரை எழுதப்பட்டிருந்தது அதில் அவர் பலருக்கு நன்றிகளை சொல்லி இருந்தார் அதில் பெற்றோர் நண்பர்கள் ஆசிரியர்கள், உறவினர்கள் அடங்கலாக இருந்தது. மேலும் இக் கவிதைகளில் அழகிய பாங்கு காணக்கிடைத்தது. அது மட்டுமல்லாமால் ஓசை நயமும் சிறப்பாக கையாளப்பட்டுள்ளது. இருந்தும் ஆசிரியர் இன்னும் தன்னை பட்டை தீட்ட வேண்டிய தேவைப்பாடு காணக்கிடைத்தது,

சொற்களை கையாளும் முறை, சொற்களை புணருகின்ற யுக்தி, எதுகை மோனை போன்ற விழுமியங்களை கவனிக்கின்ற நேரத்தில் இன்னுமின்னும் எழுத்து துறையிலும் கவி ஆளுமையிலும் உச்சத்தில் மிளிர முடியும்.

அன்று நேரம் சென்றது கூட தெரியவில்லை பல ஆளுமைகளின் விரிவுரைகளைக் கேட்டபடி அடுத்த நூல் அறிமுகம் செய்யப்பட்டது pdf வடிவத்தில் பின்னர் அது ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பினால் அச்சிட்டு விற்பனை செய்யப்பட்டது அப்போதுதான் அந்த நூலை வாசிக்க கிடைத்தது.

03. இந் நூலின் பெயர் நினைவுப்பரிசு இளம் கவிதாயினி நியாஸ் பாத்திமா சனூசியா அவர்களால் எழுதப்பட்டது. காலத்தால் அழியாத பல கவித்துளிகளை சுமந்த இந்த நூல் மொத்தமாக 36 பக்கங்களை கொண்டதுடன் 25 கவிதைகளும் இடம்பெற்றிருந்தது. இதுவும் ஸ்கை தமிழ் மற்றும், துணிந்தெழு சஞ்சிகையின் வெளியீடு. இதன் அட்டைப்படம் புத்தகத்தின் தலைப்பை மையப்படுத்தி அழகாக வடிவமைக்கப்பட்டிருந்தது.

புத்தகத்தின் அணிந்துரையினை அநுராதபுரம் முக்கிரியாவ முஸ்லீம் வித்தியாலய ஆசிரியர் வசீம் அக்ரம் அவர்கள் வழங்கி இருந்தார். அவர் இந்த நூலின் கவிதைகளின் நிலைப்பாட்டை சொல்லி தன்னையும் பழைய நினைவுகளை நோக்கி இவ் வரிகள் அழைத்துச் சென்றது என்ற செய்தியுடன் மாணவியின் திறமையை பாராட்டி மகிழ்ந்தார்.

அடுத்தாக நூலாசிரியர் என்னுரை வழங்கி இருந்தார் அதில் 'வாய்ப்புகள்தான் வரலாற்றிற்கு அடித்தளம்' என்ற வாசகத்தோடு இப் புத்தகத்தின் நிலை பற்றியும் நினைவுப்பரிசு என்று தான் பெயர் வைத்ததற்கான காரணத்தினையும் அழகாக ஆணித்தரமாக எடுத்துரைத்திருப்பதைக் காணக்கிடைக்கிறது.

தொடர்ந்து "மீட்டப்படாத சில நினைவுகளைத் தூசி தட்டி நினைவுப்பரிசு எனும் இப்புத்தகத்தின் மூலம் காலத்துக்குள் கூட்டிப்போக ஆசைப்படுகிறேன்" என்ற செய்தியையும் நூலாசிரியர் சொல்லி இருப்பதை அவதானிக்க முடிகிறது. நூலாசிரியரை முன்னேற்றிய பெற்றோர்கள், உறவினர்கள், ஆசிரியர்களுக்கு சமர்ப்பணம் செய்த முறைமை சிறப்பாக அமைந்திருந்தது. கவிதைகள் பசுமையான பழைய நினைவுகளை இரை மீட்டித்தரப்போகிறது என்ற எதிர்பார்ப்போடு பக்கங்களைப் புரட்டி படிக்கலானேன். ஒரே வார்த்தையில் சொல்வதாயின் தன்னகம் கொண்ட சொற்களை கொண்டு கவிதாயினி அவர்கள் கோர்வை செய்த வரிகள் ஒவ்வொன்றும் அருமை அத்தனையும் அற்புதம்




என்பேன். மேலும், முதல் கவிதை "மழை நாள்" இது வசன நடை கவிதையாக இருந்தாலும் படிக்கும் வாசகர்களை பத்து பதினைந்து வருடங்கள் தன் வாழ்கையில் பின் நகர்த்திச் செல்லும் என்பதில் ஐயமில்லை என்பதை உணர்ந்தவன் நான்.

பள்ளி நாளில் மழையில் நானைந்த நினைவுகளையும் காகித கப்பல் விட்டு அதன் அசைவுகளை கண்டு கொட்டும் மழையில் நனைந் நினைவுகளையும் கண் எதிரே தோன்ற வைத்தது.

அடுத்த பக்கம் புரட்டி அடுக்கடுக்காய் கவிதைகள் படிக்கலானேன் "முட்டாள் இராச்சிகள்", "விதிக்குள் விடை", "கன்னக்குளியும் தெத்துப்பல்லும்" இப்படியான தலைப்புகளுடன் கவிதாயினி என்னை என் சிறு வயதுவரை அழைத்துச் சென்ற அனுபவத்தை உணரந்தேன் மகிழ்ந்தேன். சிறிய கவிதைகளாவும் இலேசு மொழி நடையில் அமைந்த கவிதைகளாகவும் இருந்தமையினால் கவனமாக படித்து முடித்ததில் மன அமைதியை உணர்ந்தேன்.

தொடர்ந்து...
ஒன்பதாவது கவிதை 'புதைக்கப்பட்ட உண்மை' எனும் தலைப்பில் கிராமப்புறத்தில் பருவ வயதில் பள்ளி நாளில் குமரிகள் எதிர் கொள்ளும் பிரச்சினையை சொல்வதுடன் அவர்களின் வறுமை, தொடர்ந்து படிக்க விடாது அவர்களை திருமணம் செய்து வைப்பது பற்றியும் அவர்களின் ஏக்கம் பற்றியதாகவும் இருந்தது.

கண்கள் கலங்கிய படி அடுத்த கவிதை நூலகத்தின் பயனையும் அது கொடுத்த அறிவையும் பறை சாற்றி நின்றது கவிதாயினி அவர்கள் "கற்பகதரு" என வாசிகசாலையை உவமானம் காட்டி இருப்பதை அவதானிக்க முடிகிறது. கற்பகதரு என்பதை நோக்குமிடத்து பூவுலகத்துக் கற்பகத்தருவாக அழைக்கப்படுவது பனை மரம்.

காரணம் நுனியிலிருந்து நிலத்தின் கீழுள்ள வேர் வரையிலும், முளைவிட ஆரம்பித்ததிலிருந்து, வெட்டி வீழ்த்தப்பட்ட பின்னரும் நெடுங்காலத்துக்குப் பயன்தருவதால் பனை மரத்தை கற்பகத்தரு என முன்னோர்கள் அழைத்தனர்.

இருபத்தி இரண்டாது இடம்பெற்ற கவிதை "பத்திரிகை நண்பன்" இதில் இடம் பெற்ற "என் வருங்காலத்தின் காந்தக் கதவுகளை கண் எதிரே திறந்து விட்டாய்" என்ற வரிகள் ஏதோ ஒரு உளவியல் மாற்றத்தை தந்தது என்பேன். அது மட்டுமின்றி பள்ளி நாட்களில் பிரதி வாரங்களில் விஜய் பத்திரிகை வாங்கி வாசித்து மகிழ்ந்த நினைவுகளை நினைத்துப் பார்க்க செய்தது எனலாம். தொடர்ந்து படிக்கையில் என்னை பெரிதும் கவர்ந்த கவிதைகளாக "மலை நாட்டு மல்லிகை", "வெறுக்கப்படாத விருப்பங்கள்", "கல்லூரி நாட்கள்", "இதுவும் அழகிதான்" எனபவற்றை சொல்ல முடியும். அவைகளின் வசன அமைப்புகளும் சொற்பிரயோகங்களும் வித்தியாசமான போக்கில் காணக்கிடைத்தது இவை பெரிதும் வாசகர்களை கவர்ந்துவிடும் என நம்புகிறேன்.

இறுதி அட்டைப்படத்தில் கவிதாயினி நியாஸ் பாத்திமா சனுசியா அவர்களால் எழுதப்பட்ட நன்றி உரையினை வாசிக்க கிடைத்தது அதில் அவர் பெற்றோர்கள் ஆசிரியர்கள் நண்பர்கள் வெளியீட்டாளர்கள் என பலருக்கும் தன் ஆத்மார்த்தமான நன்றிகளை சொல்லி இருந்தார்.

இன்னும் கவிதாயினி அவர்களின் முயற்சி தேவைப்படுகிறது சிறந்த சொல் ஆளுமை உள்ளது அதை இன்னும் பன் மடங்காக்க வேண்டிய தேவைப்பாடும் உள்ளது. மேலும் பொருத்தமான தலைப்பையும், தலைப்பிற்க்கு உகந்த உடலையும் தெரிவு செய்ய வேண்டிய கட்டாயம் உள்ளது என்பதை கவனத்தில் கொள்ளுங்கள்.

அன்பு வாசகர்களே! இம் மூன்று புத்தகங்களும் மூன்று விதமான அனுவங்களையும் பல விழுமியக் கருத்துகளையும் எனக்களித்தது. அதை வாசித்து நான் அடைந்து கொண்ட அனுபவங்களை உங்களோடு பகிர்ந்து கொண்டேன் நீங்களும் இவை மூன்று நூல்களையும் வாசிப்பதற்க்கு பரிந்துரை செய்கிறேன்.

அதிகம் வாசிப்பு பழக்கத்தை எடுத்துக்கொள்ளுங்கள் சிறு துணுக்குகள் முதல் பெரும் காப்பியங்கள் வரை பக்கம் புரட்டுங்கள் புத்தகங்களை நேசியுங்கள் உங்கள் வீடுகளில் சிறு நூலகங்களை உருவாக்குங்கள்.
மனிதன் என்ற வகையில் தவறுகள் நிகழ்வதுண்டு அப்படியாயின் மன்னித்து விடுங்கள்.



# உலகில் மிகப்பெரிய நூலகம் துபாயில் திறப்பு


## அமீரகத்தில் புத்தக வடிவிலான நூலகம் இதன் சிறப்பு அம்சங்கள் என்னென்ன??

துபாய் க்ரீக் கரையில் புத்தக வடிவில் அமைக்கப்பட்ட முகமது பின் ரஷித் நூலகம் திறக்கப்பட்டுள்ளது. ட்விட்டரில், அமீரகத்தின் துணைத் தலைவரும், பிரதமரும், துபாய் ஆட்சியாளருமான ஷேக் முகமது பின் ரஷித் அல் மக்தூம், 1 பில்லியன் டாலர் மதிப்பிலான இந்த திட்டத்தில் ஒன்பது முக்கிய நூலகங்கள் உள்ளன என்றார்.

இந் நூலகமானது 2022 ஜூன் 16 ஆம் திகதி பொதுமக்கள் பார்வைக்காக திறந்து வைக்கப்பட்டது. இதை “Beacon of Knowledge” (அறிவின் கலங்கரை விளக்கம்) என்று அழைத்த அவர், ஏழு மாடி கட்டிடத்தில் ஒரு மில்லியனுக்கும் அதிகமான புத்தகங்கள் மற்றும் ஆறு மில்லியன் ஆராய்ச்சி ஆய்வறிக்கைகள் உள்ளன என்றார்.

“இன்று நாங்கள் எங்கள் புதிய தலைமுறையினருக்காக ஒரு கலாச்சார மற்றும் அறிவுசார் கட்டிடத்தை தொடங்குகிறோம், இதன் மூலம் வாசிப்பை மேம்படுத்துதல், அறிவை மேன்படுத்துதல் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் விஞ்ஞானிகளுக்கு ஆதரவளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளோம்”.

“மனித மனதை ஒளிரச் செய்வதே எங்கள் குறிக்கோள்” என்றும் ஷேக் முகமது தனது ட்விட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார். புனித குர்ஆனை வைத்திருக்கப் பயன்படுத்தப்படும் பாரம்பரிய மர புத்தக பலகையான சுநாட வடிவத்தில் வடிவமைக்கப்பட்ட நூலகம் அல் ஜடாப்பில் கட்டப்பட்டுள்ளது. ஷேக் முகமது பின் ரஷீத் இந்த திட்டத்தை முதன்முதலில் 2016ல் அறிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.




இது MENA (Middle East and North Africa) பகுதியில் உள்ள மிகப்பெரிய கலாச்சார மையம் மற்றும் நூலகமாகும். அதன் ஏழு தளங்கள் முழுவதும், முகமது பின் ரஷித் நூலகம் குறிப்பிடத்தக்க உள்ளடக்கத்தைக் கொண்டுள்ளது. இதில் அரபு மற்றும் வெளிநாட்டு மொழிகளில் 1.1 மில்லியனுக்கும் அதிகமான அச்சிடப்பட்ட மற்றும் டிஜிட்டல் புத்தகங்கள், 6 மில்லியனுக்கும் அதிகமான ஆய்வுக் கட்டுரைகள் சுமார் 73,000 Music Scores, 75,000 வீடியோக்கள் சுமார் 13,000 கட்டுரைகள் மற்றும் 5,000 க்கும் மேற்பட்ட வரலாற்று அச்சு மற்றும் டிஜிட்டல் இதழ்கள் உள்ளன.

இதன் சிறப்பு அம்சமாக கிட்டத்தட்ட 500 அரிய சேகரிப்புகளையும் கொண்டுள்ளது.

துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

ஸ்கை தமிழ் ஊடாகத்தினால்
தெரிவு செய்யப்பட்ட 2022ஆம் ஆண்டின்
சிறந்த ஆளுமையுடையவர்களுக்கான

# துணிந்தெழு விருது 2022




**கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் அவர்களுக்கு கலை மற்றும் இலக்கியத்துறையில் அர்ப்பணிப்பாக சேவையை வழங்கியமைக்காக இவ்விருது ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பின் ஊடாக வழங்கி கௌரவிக்கப்பட்டது..**

# அவர்களை பற்றிய சிறிய விளக்கம்

“மின்னும் தாரகைகள்“ என்னும் இலங்கை முஸ்லிம் பெண் எழுத்தாளர்களைப் பற்றிய ஆய்வு நூல் ஒன்றை சிரேஷ்ட ஊடகவியலாளர் முன்னாள் அரசாங்க தகவல் திணைக்கள அதிகாரியுமான கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் அவர்கள் பெண் எழுத்தாளர்களின் நலன் கருதி வெளியிட்டிருந்தார். சிறந்த படைப்பிலக்கிய மற்றும் ஊடக பங்களிப்புக்களை வழங்கியமைக்காக துணிந்தெழு ஆளுமை விருதினை பெற்றுக் கொண்டார்.

கொழும்பு திறந்த பல்கலைக் கழகத்தில் பொதுசனத் தொடர்புத்துறை சான்றிதழும், தொலைக்கல்வி நிறுவனத்தின் பொதுசனத்துறை டிப்ளோமா பட்டமும், கொழும்பு பல்கலைக்கழகத்தில் பத்திரிகைத்துறை டிப்ளோமா பட்டமும் பெற்றுள்ளார். கணினித் துறையிலும் பல பயிற்சிகளைப் பெற்றவர்.

அரசாங்க தகவல் திணைக்களத்தின் கொழும்பு மாவட்ட தகவல் அதிகாரியாக பதவி உயர்வு பெற்ற இவர் கொழும்பு மாவட்ட செயலக தகவல் பிரிவுக்குப் பொறுப்பதிகாரியாகவும் சுமார் பத்தாண்டு காலம் கடமை புரிந்தார்.

உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டுக்காக எழுதப்பட்ட “இலங்கை முஸ்லிம் பெண்களின் ஊடகப் பங்களிப்பு“ என்ற இவரது ஆய்வுக் கட்டுரை என்பனவும் நூலுரு பெற உள்ளன.

2006ஆம் ஆண்டு கலாசார அமைச்சினால் கலாபூஷணம் அரச விருதினை பெற்றுக் கொண்டார்.

“திதுலன தாரக்கா“ எனும் சிங்கள மொழியிலான நூல் அண்மையில் வெளிவந்தது குறிப்பிடத்தக்கது.

இவர் சேவையை பாராட்டி இவ் விருதினை வழங்கி வைப்பதில் ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகை பெருமிதம் கொள்கிறது.




**ஊடகத்துறையில் பயணித்துக் கொண்டிருக்கும் ரஞ்சனி ராஜ்மோகன் அவர்களுக்கு கலை மற்றும் ஊடகத் துறையில் அர்ப்பணிப்பான சேவையை வழங்கியமைக்காக ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகை ஊடக வலையமைப்பின் ஊடாக துணிந்தெழு விருது (2022) வழங்கி கௌரவிக்கப்பட்டது.**

## அவர்களை பற்றிய சிறிய விளக்கம்

ரஞ்சனி ராஜ்மோகன் அவர்கள் தொலைக்காட்சிகளில் தமிழ் அறிவிப்பாளராக, செய்திவாசிப்பாளராக, டப்பிங் கலைஞராக, ஒரு சிறந்த நடிகையாக இன்னும் பல துறைகளில் மிக நீண்டகாலமாக தனக்கென ஒரு இடத்தினை இன்றுவரை தக்கவைத்துக் கொண்டிருக்கிறார்.

1989ஆம் ஆண்டு இலங்கை ரூபாவாஹினி தொலைக்காட்சியின் ஊடாக நாடகத்துறைக்குள் பிரவேசித்த இவர் இருபதுக்கும் மேற்பட்ட தமிழ் தொலைக்காட்சி நாடகங்களிலும், 25க்கும் மேற்பட்ட மேடை நாடகங்களிலும், 30க்கும் மேற்பட்ட சிங்கள நாடகங்களிலும் நடித்துள்ளார்.

ஊடகத்துறையில் தனக்கென ஒரு தனியான இடத்தைப் பெற்றுள்ள இவர் தொடர்ச்சியாக 2007, 2008, 2009ஆம் ஆண்டுக்கான சிறந்த செய்தி வாசிப்பாளருக்கான விருதை பெற்றுள்ளதோடு 2009ஆம் ஆண்டு சிறந்த தொகுப்பாளர், சிறந்த செய்தி வாசிப்பாளரென இரண்டு விருதுகளையும் பெற்றுள்ளார்.

மீண்டும் 2016ஆம் ஆண்டு சிறந்த தொலைக்காட்சி அறிவிப்பாளருக்கான விருதினையும் இவர் பெற்றுள்ளார்.

இவரின் சேவையைப் பாராட்டி ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகை இவ்விருதினை வழங்கி வைப்பதில் பெருமிதம் கொள்கிறது.




ஊடகத்துறையில் பயணித்துக் கொண்டிருக்கும் ரினோசா நௌஷாட் அவர்களுக்கு கலை மற்றும் ஊடகத் துறையில் அர்ப்பணிப்பான சேவையை வழங்கியமைக்காக ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகை ஊடக வலையமைப்பின் ஊடாக "துணிந்தெழு விருது (2022)" வழங்கி கௌரவிக்கப்பட்டது.

## அவர்களை பற்றிய சிறிய விளக்கம்

CGC Talk Shop என்ற youtube சேனல் மூலம் உலகம் பூராவும் பிரல்பயம் அடைந்துள்ளார். CGC ஊடகம் மூலம் பல வறிய மாணவர்களுக்கு அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்துள்ளார்.

இளைஞர்களை ஒன்றிணைக்கவும் ஊக்குவிக்கவும் திறம்படுத்தவும் பேச்சால் முடியும் என்பதால் பல ஊக்குவிப்பு பேச்சுக்களை பேசியுள்ளதுடன் தற்பொழுது யூடியூப் தளத்தில் நேர்காணல்கள் செய்திகள் என பல விடயங்களை செய்து வருகிறார். மக்கள் பலரும் அவருக்கு ஆதரவை வழங்கி வருகின்றனர்.

ஊடகத்துறையில் உள்ள ஈடுபாட்டினால் 2012 ஆம் ஆண்டு இலங்கை தொலைக்காட்சி பயிற்சி கல்லூரியில் Dip in Media Studies கற்கை நெறி முடித்த கையோடு தொலைக்காட்சி நிறுவனத்தில் பணிபுரிந்தார்.

U TV யில் தொலைக்காட்சியில் கடந்த 2015 ஆம் ஆண்டு முதல் 2021 வரை தயாரிப்பாளராகவும் நிகழ்ச்சி வழங்குநராகவும் கடமையாற்றி வந்தார்.

2019 ஆம் ஆண்டு தொலைக்காட்சி அரச விருது வழங்கும் விழாவில் ஒரு புலனாய்வு தேடல் அறிக்கையில் தேசிய விருதுக்காக பரிந்துரைக்கப்பட்டார்.

இவரின் சேவையை பாராட்டி இவ் விருதினை வழங்கி வைப்பதில் ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகை பெருமிதம் கொள்கிறது.




**இலக்கியத்துறையிலும் கலைத்துறையிலும் பயணித்துக் கொண்டிருக்கக் கூடிய என். நஜ்முல் ஹுசைன் அவர்களுக்கு சிறப்பான முறையில் தன்னுடைய துறையில் பயணித்தமைக்காக ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகை ஊடக வலையமைப்பின் ஊடாக "துணிந்தெழு விருது 2022" வழங்கி கௌரவிக்கப்பட்டது.**

# அவர்களை பற்றிய சிறிய விளக்கம்

இவர் 1967ம் ஆண்டு "சுஜாதா" எனும் தமிழ்-சிங்கள கையெழுத்துச் சஞ்சிகையின் தமிழ் பகுதி ஆசிரியராக இலக்கிய பிரவேசம் செய்த நஜ்முல் ஹுசைனின் முதல் ஆக்கம 1968ம் ஆண்டு தென்னிந்திய குமுதம் சஞ்சிகையில் வெளியாகியது.

மரபுக் கவிதை, புதுக்கவிதை என்று எழுதிக் குவித்துள்ளார். "பனித்தீ", "இனிவரும் நாட்களெல்லாம்", "நஜ்முல் ஹுசைனின் நட்சத்திரக் கவிதைகள்" எனும் தலைப்பில் இவரது கவிதை நூல்கள் வெளிவந்துள்ளன.

பாடசாலை காலம் முதல் வானொலி முஸ்லிம் சேவையில் குரல் கொடுத்து வந்துள்ள இவர் "இளைஞர் இதயம்" எனும் நிகழ்ச்சியினை இலங்கை வானொலி முஸ்லிம் நிகழ்ச்சியில் நடாத்தி வந்துள்ளார். வானொலி, தொலைக்காட்சி கவியரங்குகளில் பங்கு பற்றி வருகிறார். இவரது மெல்லிசை பாடல்கள், இஸ்லாமிய கீதங்கள், வானொலி, தொலைக்காட்சிகளில் ஒலி, ஒளிபரப்பாகி வருகின்றன.

2011ல் மலேசிய கோலாலம்பூரில் இடம்பெற்ற உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டுக் கவியரங்கில் இலங்கை சார்பாக கவிதை பாட தேர்ந்தெடுக்கப்பட்ட என்.நஜ்முல் ஹுசைன் கவிக்கோ அப்துல் ரகுமான் தலைமையில் சிறப்புற கவிதை பாடி இலங்கை மண்ணுக்கு பெருமை சேர்த்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அரச விருதான கலாபூஷணம் விருது பெற்றுள்ள இவர் 2002ம் ஆண்டு இலங்கை அரசின் ஏற்பாட்டில் இடம்பெற்ற உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டின் போது "படைப்பாளர் விருது" வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இவரது கவிதை பங்களிப்புக்காக அகில இன நல்லுறவு ஒன்றியம் இவருக்கு "கவிமணி" பட்டம் வழங்கியது.

இவரது ஏகப்புத்திரி சட்டத்தரணி திருமதி நூருஸ் ஷப்னா சிராஜுதீன் இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவின் சட்ட அதிகாரியாக பணி புரிந்து வருகிறார்.




**ஊடகத்துறையிலும் இலக்கியத்துறையிலும் பயணித்துக் கொண்டிருக்கக் கூடிய சமீஹா சமீர் அவர்களுக்கு சிறப்பான முறையில் தன்னுடைய துறையில் பயணித்தமைக்காக ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகை ஊடக வலையமைப்பின் ஊடாக "துணிந்தெழு விருது 2022" வழங்கி கௌரவிக்கப்பட்டது**

## அவர்களை பற்றிய சிறிய விளக்கம்

இவர் கெபிடல் மஹாராஜா நிறுவனத்தில் 2001 ஆண்டு தொலைகாட்சி ஊடக துறையில் சாதரண பயிற்சியாளராக இணைந்து கொண்டார். பின்னர் 2003 ல் இருந்து 2006 வரைக்குமான காலப்பகுதியில் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பபாளராகவும்,2006 - 2007 வரையில் நிகழ்ச்சி நிர்வாகியாகவும், 2007 - 2011 நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு செயலாளராகவும் செயற்பட்டார். அத்துடன் 2011 - 2014 வரையில் நிகழ்ச்சி முகாமையாளராகவும் சக்தி தொலைக்காட்சியில் கடமை புரிந்தார்.

பின்னர் 2015 - 2018 காலப் பகுதியில் UTV யில் சிரேஷ்ட நிகழ்ச்சி பொறுப்பாளராகவும், 2019 - 2021 வரை பிறை தொலைக்காட்சியில் தலைமை நிகழ்ச்சி அதிகாரியாகவும் கடமை புரிந்தார்.

மேலும் இவர் கிழக்கிழங்கையின் முதல் முஸ்லிம் பெண் தொலைகாட்சி ஊடகவியலாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது. 21 வருடங்களாக தொலைக்காட்சி ஊடகவியலாளராக கடமை புரிந்து வருகின்றார்.

Sri Lanka Muslim media forum இன் நிறைவேற்று உறுப்பினர் ஊடக உறுப்பினராகவும் ஊடக பயிற்சி தலைமை அதிகாரியாகவும் செயற்படுகின்றார்.

ஊடகத்தில் நிறைய பெண்களை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் பல ஊடக பயிற்சி வகுப்புக்களை இலவசமாக நடாத்தியும் வருகிறார்.

இன்று சுயாதீன ஊடகவியளாளராக தனது ஊடக துறையில் பயணித்து கொண்டிருக்கிறார்.

இன்னும் Diploma in Journalism கற்கை நெறியை Colombo பல்கலைக்கழகத்தில் நிறைவு செய்திருந்தார். அதில் அவர் "அதி விசேட சித்தியும் பெற்றிருந்தார்.

தற்போதும் எழுத்து துறையிலும் பயணித்து கொண்டிருக்கிறார். பத்திரிகைகளுக்கு பல விழிப்புணர்வு கட்டுரைகளையும் எழுதி உள்ளார்.







சிறப்பு பேச்சாளராகவும், சமூக செயற்பாட்டாளராகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வரும் இந்தியாவை சேர்ந்த சகோதரி சுல்தானா பர்வின் அவர்களுக்கு சிறந்த ஆளுமை பெண்ணுக்கான 2022 துணிந்தெழு விருதினை ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பினூடாக வழங்கி இருந்தோம்.

அதற்கு சகோதரி சுல்தானா பர்வின் அவர்கள் தனது முகநூல் வாயிலாக காணொளி மூலம் மிகுந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்தியதுடன் நன்றியும் தெரிவித்திருந்தார்.

உங்களுக்கும் உங்கள் சேவைகளுக்கும் மனப்பூர்வமான நன்றிகள் சகோதரி அத்துடன் உங்கள் சேவை மென்மேலும் தொடர வாழ்த்துக்கள்!




# கலை மற்றும் சமூக செயற்பாட்டுக்காக கத்தாரில் பிரபல யூட்டியூபர் கரீம் டைம் அவர்களுக்கு துணிந்தெழு விருது 2022 வழங்கப்பட்டது.


Kareemtime
19m

இலங்கையை மையப்படுத்தி கத்தாரில் இயங்கி வரும் ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பு 2022ஆம் ஆண்டின் சிறந்த ஆளுமையுடையவர்களுக்கான துணிந்தெழு விருதினை தெரிவு செய்யப்பட்ட ஆளுமைகளுக்கு வழங்கி வருகின்றது.

அந்தவகையில் சிறந்த கலைஞராகவும் மற்றும் சமூக செயற்பாட்டாளராகவும் அர்ப்பணிப்பான சேவையை வழங்கியமைக்காக ஸ்கை தமிழ் ஊடகத்தின் பணிப்பளார் ஜே.எம்.பாஸித் மற்றும் முகாமையாளர் அஸ்வர் ரிஸ்வி ஆகியோர் துணிந்தெழு விருதினை எனக்கு வழங்கிவைத்தனர்.

சிறிது காலத்திற்குள் தனக்கென்று ஒரு நாமத்தை இலங்கை மற்றும்...
See more

சிறந்த ஆளுமையுடையவர்களை கௌரவிக்கும் நோக்கில், ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பு மற்றும் துணிந்தெழுவினால் 2022ஆம் ஆண்டிற்கான துணிந்தெழு எனும் விருது தெரிவு செய்யப்பட்ட ஆளுமையுடையவர்களுக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் இந்தியாவில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு தனக்கென தனித்துவமான இடத்தைப் பிடித்து தன் நடிப்பு திறமையால் உலகை திரும்பிப் பார்க்கச் செய்த தென்னிந்தியாவில் பிறந்து தொழில் நிமிர்த்தம் கத்தார் சென்று தனது திறமையால் உயரந்து வரும் கரீம் அவர்களுக்கு சிறந்த கலைஞராகவும் மற்றும் சமூக செயற்பாட்டாளராகவும் அர்ப்பணிப்பான சேவையை வழங்கியமைக்காக ஸ்கை தமிழ் ஊடகத்தின் பணிப்பளார் ஜே.எம்.பாஸித் மற்றும் முகாமையாளர் அஸ்வர் ரிஸ்வி ஆகியோர் துணிந்தெழு விருதினை வழங்கி கௌரவித்தனர்.



# இரத்த பந்தம்!



**எஸ்.எப்.ஸஹ்ரா**
முதலாம் வருடம் கலைப் பீடம்
கொழும்பு பல்கலைக்கழகம்.

அகீல் தலையைக் கவிழ்த்துக் கொண்டு யோசித்தவாறு இருந்தான். அக்பர் சாச்சாவின் நிலைமையை எண்ணி அவனுக்குள் இனம்புரியாத ஒரு வலி இருந்தது தன் தந்தையின் பேராசை காரணமாக சகோதரன் என்று கூட யோசிக்காமல் அக்பர் சாச்சாவின் குடும்பத்தாரை இந்தப் பெரிய வீட்டை விட்டு வாப்பா துரத்தியது அவனுக்கு இன்னும் நினைவிருக்கிறது அத்துடன் இல்லாது அவர்கள் இப்போது இருக்கும் சிறிய நிலப்பரப்பையும் தனக்கு சொந்தமாக்கிக் கொள்வதற்காக வேலி சண்டையை ஆரம்பித்திருக்கும் வாப்பா மீது கோபமும் ஆத்திரமும் ஏற்பட்டது.

ஆனால் அந்த காலத்தில் விட்டுக் கொடுத்தது அகிலின் வாப்பா அல்ல .அது அக்பர் சாச்சாவின் மனைவியின் சொத்து. அதிலாவது நிம்மதியாக இருக்க விடாமல் சதாவும் அவர்களை நச்சரிப்பதும் சண்டை பிடிப்பதும் அவனுக்கு வருத்தமாக இருந்தது. பாவம் அக்பர் சாச்சா மிகவும் நல்லவர். இரண்டு பெண் பிள்ளைகளும் ஒரு ஆண் பிள்ளைக்கும் தகப்பனான அவர் அந்தப் பெண் பிள்ளைகள் இருவரையும் திருமணம் செய்து கொடுப்பதற்காகவும் பாடசாலை செல்லும் தனது கடைசி மகனின் செலவுக்கு மாக மிகவும் பாடுபட்டு உழைத்து கொண்டிருப்பவர். இன்றைய காலத்தில் விலை போகும் சில மணமகன்களுக்கு ஆதனம் சீதனம் என்று கொடுக்கவேண்டும் அல்லவா ? "அல்லாஹ்வே அவரின் நிலைமையை இலகுவாக்க நீதான் அருள் புரியவேண்டும்" என்று மனதுக்குள் நினைத்து கொண்டான்.

அகீலின் வாப்பாவான உஸ்மான் ஹாஜி ஊருக்கு செலவழிப்பதாக காட்டிக் கொள்பவர். பெரிய பள்ளிக்கு ஜமாத் வந்தால் பெருமைக்காக சாப்பாடு கொடுப்பார். ஆனால் ஏழைகள் யாராவது கேட்டுப் போனால் அவர்களை விட ஏழையாகி விடுவார் .இந்தமாதிரி குணம் உடைய உஸ்மான் ஹாஜி பலமுறை ஹஜ்ஜும் உம்ராவும் போய் வந்தவர். ஆனால் அந்த பயணமானது தன் வியாபார விஷயங்களை முக்கிய படுத்திக் கொண்டுதான் தீர்மானிக்கப்படும். இப்போதைக்கு டவுனில் 5 கடைகளுக்கு சொந்தக்காரர் .காசு சொத்து என்று அவருக்கு அல்லாஹ் நிறைய பிரித்து செய்திருக்கிறான். ஆனால், இல்லாதவர்களுக்கு தர்மம் செய்யும் மனப்பான்மை அவருக்கு பிறவியிலிருந்தே இல்லாத பழக்கமாக இருந்தது பெயர் புகழுக்காக அள்ளி கொடுப்பவர். உண்மையான ஏழைகளுக்கு கிள்ளியும் கொடுக்க மாட்டார். அதாவது நான் எனக்கு எனது என்ற தன்னிலை கொள்கையுடையவர் உஸ்மான் ஹாஜி. அவர் தனது பிள்ளைகளுக்கு எந்தவித குறையும் வைத்ததில்லை.உம்மா இல்லாத குறையை நிவர்த்தி செய்து வைக்கும் முகமாக அவர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார். தற்போது கூட தனது மூன்றாவது மகளுக்கு திருமணம் செய்து கொடுக்கும் யோசனையில் இருக்கும் அவர் தனது வியாபார விடயங்களில் இன்னும் மும்முரமாக இருக்கிறார் .ஏனெனில் தன் இரண்டு மருமகன் மாரை விட இப்போது வரப்போகும் மணமகனுக்கு அதிகமாக சீதனம் கொடுக்கவேண்டும். இவ்வாறான திருமணங்களை தன் சகோதரிகளுக்கு செய்து கொடுப்பதில் அதுக்கு கொஞ்சமும் விருப்பம் இல்லை. எனினும் என்ன செய்ய ? வாப்பாவை போலவே தாத்தா மார்கள் தாங்களும் சொத்து சேர்க்க வேண்டும் என்ற

நாட்டத்தை யாரால் மாற்ற முடியும்? உம்மா மௌத்தாகி இன்றைக்கு எட்டு வருடங்கள் ஆகி விட்டதே என்று எண்ணி தனக்குத்தானே சமாதானம் சொல்லிக் கொள்வான். சீதனம் இன்றி ஒரு ஏழை பிள்ளையை மணமுடிக்க வேண்டும் என்ற நற்குணம் உடையவன் அகீல். அவனது உம்மாவின் ஆசையும் அதுவாகவே இருந்தது.ஆனால் வாப்பாவான உஸ்மான் ஹாஜிக்கு அதில் ஒரு துளி கூட விருப்பம் இல்லை. தன் பணக்கார நண்பரின் மகளுக்கே கொழுத்த சீதனத்துடன் அகீலை திருமணம் செய்து கொடுப்பது என்ற வைராக்கியத்துடன் இருக்கிறார்.

அகீல் சில பொழுதுகளில் சாச்சாவின் வீட்டுக்கு போவதுண்டு. அந்த சந்தர்ப்பங்களில் சாச்சா மிகவும் பயந்து போவார். தன் நானாவின் குணமறிந்த படியால் அகீலுக்கு ஏதாவது ஏசி விடுவாறோ என யோசித்துக் கொண்டிருப்பார். ஆனால் அவர்கள் அனைவரும் இவனின் வருகையில் சந்தோஷப்படுவார்கள். தன்னை சொந்த மகன் போல அவர்கள் எண்ணுவது அகீலுக்கு மனதுக்கு குளிர்ச்சியாக இருக்கும். அவன் போகின்ற சந்தர்ப்பங்களில் அவர்களின் வீட்டுக்கு தேவையான பொருட்களை கொண்டு செல்வான். பாடசாலை போகும் சாச்சாவின் சின்ன மகனுக்கும் சகோதரிகளுக்கும் தன்னால் முடிந்த அளவு தொகை காசு கொடுத்து விட்டு வருவான்

ஒரு சகோதரனாக அனைத்தையும் தானே செய்ய வேண்டும் என்ற ஆசை கொண்டவன் என்பது அவர்களுக்கும் தெரியும். வஞ்சகமில்லாத அவனை நினைத்து அவனது சுகவாழ்வுக்காக சதாவும் அவர்கள் இறைவனை பிரார்த்திப்பார்கள். ஆனால் அவர்களை அடிக்கடி போய் பார்த்துக் கொள்ள முடியாமல் இருந்தான் அகீல். ஏனெனில் அங்கு போவது தன் சகோதரிகள் அறிந்துவிட்டால் வாப்பாவிடம் கூறிவிடுவார்கள். இனி அந்த நாள் முழுவதும் வாப்பாவின் போதனை தொடர்ந்த வண்ணம் இருக்கும். நல்லெண்ணம் கொள்ளும்போது என் வாப்பா ஏன் இப்படி முட்டுக்கட்டையாக இருக்கிறார் என்று கவலை வரும். அதைவிட தன்னை புரிந்து கொள்ளாமல் நடக்கும் தன் சகோதரிகள் மீதும் கவலையாக இருக்கும். எனினும் தன் சகோதரிகளுக்கும் வாப்பாவுக்கும் அல்லாஹ் நேர்வழி காட்டவேண்டும் என்று ஐந்து வேளை தொழும் போதும் பிரார்த்தித்துக் கொள்வான் .

இன்று ஒரு விடயமாக வங்கிக்கு சென்றிருந்தான் அகீல். அவன் வந்ததை அறியாத அக்பர் சாச்சா வங்கி முகாமையாளர் இடம் பேசுவது இவனுக்கு தெளிவாக விளங்கியது .

"சேர், நாங்கள் இப்போது இருக்கும் வீட்டை விட்டு வேறு ஊர் பக்கமாக போக முடிவு எடுத்திருக்கிறோம். அதோடு கூட்டாளியின் மகன் ஒருவன் மூத்த மகளை நிகாஹ் செய்ய விரும்பி இருக்கிறான். சீதனம் அது இது என்று ஒன்றும் கேட்கல என்ட கொமறு பிள்ளைகளோடு



இதுக்குள்ள இருந்துகிட்டு நானா கூட வாக்குவாதம் படுவதும் சரி இல்ல தானே, அதுகளுக்கும் வாழ்க்கை அமைத்துக் கொடுத்தோம் என்றால் அதுக்கு பொறவு அல்லாஹ் நாம் இருந்திடுவோம், துரே"

" ஒகே மிஸ்டர் அக்பர், நான் உங்களுக்கு என்ன செய்யணும்?" "சார் ,எனக்கு ஒரு லட்சம் ரூபாய் கடனாக வேண்டும் .எப்படியாவது நான் அதை சம்பாதித்து தந்திடுவேன். தயவு பண்ணுங்க சார் "

"ஓம் மிஸ்டர் அக்பர் அதற்கான வசதியை செய்து விடலாம். ஆனால் வங்கிக்கென்று சில சட்ட திட்டங்கள் இருக்கு .ஆக குறைந்தது நான்கு லட்சம் ரூபாய் பெறுமதியான ஆதனமொன்றின் உறுதி பத்திரத்தை நீங்க வங்கிக்கு சமர்ப்பிக்கணும். அப்படி செஞ்சிட்டீங்க என்றால் அந்த டாக்யூமன்ட் பார்த்திட்டு கடன் வசதியை செய்து தரலாம் "

"என்னா சேர் !அந்தளவு சல்லி ஈக்கியதென்டால் நான் எதுக்கு இங்க வருவேன்? முடிஞ்சவரைக்கும் பாருங்க ப்ளீஸ் " "இதோ பாருங்க வங்கி என்பது தனி நபர் விருப்பத்திற்கு செயல்பட்ட நிறுவனம் இல்ல. முடிஞ்சா சொன்னத செய்யுங்க இல்லனா ஐ அம் வெரி சாரி "
"சார் ப்ளீஸ்" நோ நோ யூ கன் கோ"

இந்த சம்பவம் தான் நெஞ்சில் முள்ளாய் அகிலின் மனதை குடைந்து கொண்டிருந்தது. நம்மிடம் இவ்வளவு வசதி இருந்தும் குறிப்பிட்ட தொகையை கொடுக்க முடியாமல் இருக்கே. கரண்ட் எகவுன்ட் இருப்பதால் காசு எடுப்பதற்காக காசோலையில் வாப்பாவும் ஒப்பமிட வேண்டும் இது நடக்கிற காரியமா? நான் மட்டும்தான் காசோலையில் ஒப்பமிட வேண்டும் என்றால் ஒரு பிரச்சினையும் இல்லையே. எப்படி இதை சாத்தியப்படுத்தலாம் என்று எண்ணிக் கொண்டிருந்தான்.

கொடுக்கவேண்டும் என்று உண்மையான மனசு இருந்தும் அக்கீலுக்கு கொடுக்க முடியாத நிலை. எந்த கணக்கு வழக்கு என்றாலும் கரன்ட் எகவுன்ட் இருக்கும் காரணத்தினால் வாப்பாவுடன் கலந்தாலோசிக்காமல் அவனுக்கு முடிவெடுக்க முடியாது .அவன் தன் நண்பர்களிடம் கேட்டுப் பார்க்கலாம் என யோசித்துக் கொண்டிருக்கும் போது அவன் போன் அலறியது.

"ஹலோ சொல்லுங்க தாத்தா "

""தம்பி எங்க இருக்கீங்க? சீக்கிரம் வாங்க ஹொஸ்பிடல்ல இருந்து கோல் வந்திச்சி. வாப்பா ஆக்சிடெண்ட் பட்டு இருக்காங்களாம்" 'என்ன தாத்தா என்ன சொல்லுறீங்க ? இதோ வந்துடுறேன்" என்றவன் ஆக பதற்றத்துடன் பாதையில் வேகமாக நடந்து கொண்டிருந்தபோது எதிரில் சாச்சா தலைப்பட்டார் .
"என்ன மகன் முகம் எல்லாம் ஒரு மாதிரி கிடக்கு .சாப்பிட்டீங்களா? என்ன மவன் கண் கலங்கி இருக்கு .வாப்பா ஏதாச்சும் ஏசி விட்டாங்களா? என்று அன்பொழுக விசாரித்தார் .
" இல்ல சாச்சா வாப்பா ஆக்சிடன்ட் ஆகி விட்டாராம். தாதா இப்போதான் கால் பண்ணினாங்க, எனக்கு பயமாயிருக்கு" "யோசிக்க வேணாம் மகன். அல்லாஹ் இருக்கான் உடனே வீட்டுக்கு போவோம்" இருவரும் அவசர அவசரமாக நடந்து அகீலின் வீட்டை அடைந்தார்கள். வீட்டுக்குள் காலடி எடுத்து வைக்க சாச்சா தயங்கியபடி இருந்தார். அதையெல்லாம் கவனிக்க அகீலுக்கு நேரம் இருக்கவில்லை. அனைவரும் ஹாஸ்பிடலுக்கு சென்றிருப்பதாக பக்கத்து வீட்டு முனாஸ் நானா சொன்னார். உடனே இருவரும் ஹாஸ்பிடலுக்கு விரைந்தார்கள். அகீலின் முகத்தில் முத்து முத்தாக வியர்வை படிந்திருந்தது. அவனது உதடுகள் அல்லாஹ்விடம் மன்றாடிக் கேட்டுக் கொண்டே இருந்தன. அங்கு ஹாஸ்பிடலில் சேலை முனையால் வாயை பொத்தியபடி அழுது கொண்டிருந்தனர் தாதா இருவரும் .மச்சான் மாரும் உடனே அங்கு வந்திருந்தார்கள் .அது அவனுக்கு மிகவும் ஆறுதலாக இருந்தது. டாக்டரிடம் சென்று விசாரித்தபோது வாப்பாவுக்கு ரத்தம் வீணாக இருப்பதால் உடனடியாக இரத்தம் ஏற்ற வேண்டும் என்று சொன்னார்.

மச்சான் மாரும் தமக்குத் தெரிந்த நண்பர்களிடம் விசாரித்து சாதகமான பதில் கிடைக்கவில்லை என்று கூறினார்கள். அகீலுக்கு தூக்கிவாரிப்போட்டது. அவன் யோசித்துக் கொண்டிருந்தான். இதையெல்லாம் ஒரு ஓரத்தில் நின்று கேட்டுக் கொண்டிருந்த அக்பர் அவனிடம் "மகன், கொஞ்சம் வாங்களேன், இதோ பாருங்க மவன் நான் அதிகம் படித்தவன் இல்ல. ரத்தம் ஏத்தனும் என்டா ஏதோ ஏ குரூப், பீ குரூப் என்டு இருக்காமே, அதெல்லாம் எனக்கு தெரியாது ராஜா. என்ட ரத்தம் பொருந்துதா என்று பார்க்கச் சொல்லுங்க. சரி என்றால் ஒன்றும் யோசிக்க வானம்" அகீலுக்கு என்ன சொல்வது என்று புரியவில்லை. புரிந்து கொள்ள அவகாசமும் இல்லை .டாக்டரை அணுகி விஷயத்தை சொன்னால் உடனே அதற்கான ஏற்பாடு செய்யுமாறு டாக்டர் நர்சிடம் ஏவினார். இரத்தம் பரிசோதிக்கப்பட்டது. டாக்டரின் முகத்தில் சந்தோசத்தின் சாயல்கள்.

"மிஸ்டர் அகீல், யூ ஆர் லக்கி இரத்தம் பொருந்திடுச்சி, மிஸ்டர் அக்பரை அழைச்சிட்டு வாங்க" அனைவருக்கும் ஆச்சரியமும் சந்தோஷமுமாக இருந்தது. இரத்தம் ஏற்றிக் சுமார் நான்கு மணி நேரத்தில் உஸ்மான் ஹாஜியார் கண்விழித்தார். நா தழுதழுக்க டாக்டரை நோக்கி நன்றி சொல்ல முனைந்தார். "இல்ல ஹாஜியார் அல்லாட காவலா நீங்க இப்போ இப்படி இருக்க காரணம் ஒரு ஏழை மனிதர் தான் , உங்கள் மகன் இவரை அழைத்து வராவிட்டால் என்ன நடந்திருக்கும் என்று சொல்லவே கஷ்டமா இருக்கு. இறைவனின் நாட்டத்தால் அவரின் இரத்தம் உங்களுக்கு பொருந்திடுச்சி என்று அக்பரை காட்டினார் டாக்டர். கண்ணீர் ததும்பிய கண்களினூடே தன் தம்பி அக்பர் தயங்கியவராக அங்கிருப்பதைக் கண்டு நெஞ்சு வெடித்துவிடும் போலிருந்தது. நான் அக்பருக்கு எவ்வளவு அநியாயம் செய்திருக்கிறேன். இந்த ஏழை மனிதர்" எங்கள் அக்பர் சாச்சா" என்று பிள்ளைகள் டாக்டரிடம் சொல்லாத அளவுக்கு நான் எவ்வளவு தூரம் ஒதுக்கி வைத்திருக்கிறேன். கொமறு காரியத்துக்கு அவன் கஷ்டப்படுவது பார்த்தும் என்ட பணத்திமிரால அவமதிச்சிட்டேனே. யா அல்லாஹ் ! அதற்கான சரியான தண்டனை தந்து விட்டாய். அக்பர்ட இரத்தத்தை என்னில ஏத்தவச்சி அவனுடைய நல்ல புத்தியை தந்தாய். இனியாவது நான் மனுசனா வாழ்ற பாக்கியத்தை தந்தருள்வாயாக ! என்று எண்ணியவாறு தன் சகோதரனை அழைத்தார். அக்பர் அருகில் வந்து தலை குனிந்து நின்ற போது அவரை அழைத்து தன் நெஞ்சோடு அணைத்துகொண்டார். அந்த அணைப்பில் அவர் ஆயிரம் சந்தோசம் கண்டார் .இருவரும் மகிழ்ச்சியில் திளைத்திருந்தார்கள். "தம்பி ...தம்பி " என்று உஸ்மான் ஹாஜி அழுகையினூடே உச்சரித்தார் .அதைக் கேட்ட டாக்டரும் முதலில் அதிசயித்து பின் விடயத்தை நிதானித்தவறாக அறையை விட்டு வெளியேறினார்.

விஷயம் கேள்விப்பட்டு அக்பர் சாச்சாவின் மனைவி பிள்ளைகளும் அங்கு வந்திருந்தார்கள் அந்த நேரத்தில் சகோதரர்கள் இருவரும் இப்படி அன்பாய் இருப்பது கண்டு மிகவும் சந்தோஷப்பட்டனர். அகீலின் சகோதரிகளும் சாச்சாவின் குடும்பத்தாரிடம் மன்னிப்பு கேட்டு அவர்களுடன் ஒன்றித்தார்கள்.

தங்கள் குடும்பம் ஒன்று சேர்வதற்காய் தூய மனம் கொண்டு அகீல் செய்த பிரார்த்தனைகளை அந்த வல்ல அல்லாஹ் நிறைவேற்றி விட்டான்.

அல்ஹம்துலில்லாஹ்.
(தான் விரும்புவதை தன் சகோதரருக்கும் விரும்பாத வரை உங்களில் யாரும் ஈமான் கொண்டவராக முடியாது - அல் ஹதீஸ்)



# செல்லமகள்



ர.ரமேஷ்
திருப்பூர்

யப்பா யப்பா எங்க பள்ளிக்கூடத்துல எல்லாரையும் ஒரு வாரம் கழித்து சுற்றுலா கூட்டிட்டு போறாங்கப்பா ஒரு வாரம் சுற்றுலா வாமாம்ப்பா நானும் போகவாப்பா என்று கூறிக் கொண்டே தனது புத்தகப் பையை தூக்கி வீசிய படி ஓடி வந்தாள் செல்ல மகள் அருந்ததி..அருந்ததி குக்கிராமத்தில் வாழும் ஏழை விவசாயின் முருகனின் மகள் தவமிருந்து பெற்ற மகள்.

அவளின் தந்தையோ விவசாயி அவரின் வருமானம் அன்றாடம் உணவிற்க்கும் செலவுக்குமே சரியாக இருக்கும்.அவளின் அம்மா கலாமணி தன் பங்கிற்கு கிடைக்கும் சின்ன சின்ன வேலைகள் செய்தும் குடும்பத்தையும் கவனித்து வந்தாள். என்னடி பைய இப்படி வீசிட்டு போறவ என்று கேட்க காதில் விழாதது போல் சென்றாள் அருந்ததி.யப்பா பள்ளிக்கூடத்துல சுற்றுலா கூட்டிப் போறாங்கப்பா நானும் போகவா என்று குழந்தை போல அப்பாவிடம் கேட்க...

வீட்டிற்க்கு ஒரே மகள் செல்ல மகள் என்பதால் அப்பாவும் சுற்றுலா செல்ல எவ்வளவு ரூவா ஆகும் என்று கேட்க மகளோ ஆயிரம் ரூவா ஆகும்ப்பா என்று பிஞ்சு முகத்தில் புன்னகையுடன் கூறினாள்..முருகனோ சிறிது நேரம் யோசித்து பார்த்துக் கொண்டிருக்க. அவள் கூறியது கலாமணி காதில் விழ என்னாடி சொல்ற ஆயிரம் ரூவாவா கொஞ்சம் மனசாட்சியோட பேசுடி ஆயிரம் ரூவா இருந்த நம்ம வீட்ல மழை வந்த உள்ள தண்ணி வராம இருக்க சரி பன்னிருவன்.. உங்க அப்பனக்கு அப்ப அப்ப ஒடம்பு முடியாம போகுது என்னனு ஆஸ்பத்திரியில போய் பாத்துட்டு வந்துருவன். போட்டுக்க நல்ல துணி மணி வாங்கிருவேன். என்று அடுக்கிக் கொண்டே போனால் அம்மா... அதை கேட்ட செல்ல மகளுக்கு முகம் வாடியது. யாரிடமும் பேசமால் அமைதியாக இருந்தாள் அம்மாவோ சாப்பிட பலமுறை அழைத்தும் எதற்கும் செவி சாயிக்கவில்லை அருந்ததி. அவள் கண்களில் நீர் வர அதை கவனித்த முருகன் மகளை அழைத்து மடியில் அமரவைத்து. என் மக எதுக்கும் முகம் வாடி போகக்கூடாது. அழக்கூடாது எப்பவும் முகத்துல சிரிப்பு இருந்துகிட்டே இருக்கனும்.

நீ ஒன்னும் கவலைப்படாத ஆயிரம் ரூவா தான நான் பாத்துக்குறேன் கண்ணு நீ கண்டிப்பா சுற்றுலா போவ நான் ரூவா தாரேன் என்று சமாதானப்படுத்தி சாப்பிட வைத்தான் முருகன். மகிழ்ச்சியடைந்த அருந்ததி முருகனின் மடியிலேயே உறங்கிக் போனாள். மெல்ல அருகில் வந்த கலாமணி என்னங்க அவதா சின்னப் புள்ள விவரம் இல்லாம கேக்குற நீங்களும் சரி சொல்லி தூங்க வச்சுட்டீங்க அப்பறம் போற அப்ப இல்லனு சொன்ன மனசு உடைஞ்சு போயிருவா. வேணாமுங்க காலையில இப்ப வேணா இன்னொரு வருஷம் போவாய்யாமானு என்று சொல்ல. அடப் போடி கிறுக்கச்சி புள்ள இல்லாம தவமா தவமிருந்து கிடைச்ச புள்ள. ஆசையா வந்து அப்பன்கிட்ட கேக்குது அத போய் முடியாதுனு சொல்ல சொன்னா புள்ள தாங்கிக்குமா. அதும் இல்லாம பள்ளிக்கூடத்துல புள்ளைங்க எல்லாம் நாளைக்கு சுற்றுலா போய்ட்டு வந்தா அத பத்தியே பேசுங்க. கேக்குற நம்ம புள்ள ஏங்கி போய்யிற மாட்ட நானும் போயிருந்த எல்லாம் பாத்துருக்கலானு ஏங்கி தவிச்சு போய் நம்மகிட்ட வந்து சொல்லும். அப்படி சொல்லிறக் கூடாதுனு தான் நான்

பாத்துக்குறேன்னு சொன்ன என்று கூற. என்னமோ போங்க எனக்கு ஒன்னும் புரியல நீங்களும் உங்க புள்ளையையும் என்னமோ பண்ணிக்கோங்க என்று கூறிவிட்டாள் கலாமணி.... கவலைப்படாத மணி நம்ம வயல் இருக்கும் போது என்ன கவலை நல்லா விளஞ்சு நிக்குது அத அறுவடை செஞ்சா நல்ல லாபம் கிடைக்கும். அதுல வரத வச்சு புள்ளைய சுற்றுலா அனுப்பலாம்... என்று கூறிவிட்டு முருகனும் அப்படியே உறங்கிப் போனான்.. காலையில் அருந்ததி வழக்கம் போல் பள்ளிக்கு கிளம்ப மீண்டும் ஒரு முறை அப்பாவிடம் கேட்டாள்... யப்பா கண்டிப்பா என்ன சுற்றுலாக்கு அனுப்புவல்ல அப்பறம் முடியாதுனு சொல்லிற மாட்டயே என்று கேட்டாள்...

முருகனும் இல்லை புள்ள கண்டிப்பா உன்ன அனுப்புறன் இப்ப பள்ளிக்கூடத்துக்கு பாத்துப் போய்ட்டு வா என்று வழியனுப்பி வைத்தான் முருகன். அவளும் மிகவும் மகிழ்ச்சியாக பள்ளிக்கு சென்றால்... பள்ளி சென்ற அருந்ததி பள்ளி தோழிகளிடம் நானும் உங்களுடன் சுற்றுலா வருவேன் என்று கூறிக் கொண்டிருந்தாள்... என்றும் இல்லாத மகிழ்ச்சி அவளுக்கு... இன்னும் இரண்டு நாட்களில் அறுவடை பண்ணனும் இல்லனா முடியாது. என்று புலம்பிய படி வயல் பக்கம் சென்று பாப்போம் என்று புறப்பட்டான்... வயலை சென்று பார்த்தான். பயிரும் நல்ல செழிப்பாகா இருந்தது. பயிருக்கு என்ன செய்ய வேண்டுமோ அனைத்தும் செய்து விட்டு வீடு திரும்பினான். அவனும் வீடு வர செல்ல மகளும் பள்ளி முடிந்து வீடு வந்தாள்... யப்பா யப்பா எங்க இருக்கப்பா என்று கூவிக் கொண்டே வர எதிரே வந்தான் முருகன். எம்புள்ள இப்படிக் கூவிக்கிட்டே வரவ. யப்பா நீ சொன்னனு நான் பள்ளிக்கூடத்துல எல்லார்கிட்டயும் சொல்லிட்டன். நீ மட்டும் எனக்கு ரூவா தரல அப்புறம் நான் என்ன பண்ணுவேனு எனக்கே தெரியாது. என்று கூறிவிட்டு யப்பா நான் செல்வி வீட்டுக்கு போறன். பிறகு வரேன்னு சொல்லிட்டு அங்கிருந்து மறைந்தாள் அருந்ததி... புள்ளையின் மிரட்டலைக் கேட்ட முருகன் சிரித்தபடி ரசித்தான்...

வழக்கம் போல் அனைவரும் சாப்பிட்டு உறங்கினர்... கனவிலும் தன் பிள்ளை மிரட்டுவது போன்று கனவு கண்டு சிரித்துக்கொண்டிருந்தான் முருகன்... மறுநாள் காலை வயலுக்கு சென்று கொண்டிருக்கும் போது ஊரில் அனைவரும் பயிருக்கு புதிதாக தெளிக்கப்பட்ட மருந்தை பற்றி பேச முருகனுக்கு ஒன்றும் புரியவில்லை. அவன் நண்பனான செல்வத்திடம் அடேய் செல்வா என்னாச்சு என்ன நடக்குது இங்க என் எல்லாரும் இப்படி பேசிட்டு அப்படி இப்படியுமா ஓடிடக்கிட்டு இருக்காங்க என்னடா ஆச்சு. கொஞ்சம் சொல்லு என்று கேட்க... அடேய் முருகா நம்ம பயிருக்கு புதுசா ஒரு மருந்து வந்துச்சுனு அத வாங்கி தெளிச்சோம்ல அது உண்மை இல்லையா பொய்யான மருந்தாமாடா அதனால பயிரெல்லாம் வீணாப் போகுதா என்று கூற முருகனுக்கு ஒரு நிமிடம் இதயமே நின்று விட்டது. மயக்கம் போட்டு கீழே விழ செல்வம் தண்ணீர் தெளித்து மயக்கம் கலைத்து



விசாரித்தான்.என்னடா ஆச்சு என் உடம்பு எதும் சரியில்லையா என்று கேட்டான் செல்வம்... தலையில் அடித்த படி அடேய் நானும் அந்த மருந்த வாங்கி என் பயிருக்கு தெளித்து விட்டேன். என்று வாயிலும் வயித்துலையும் அடித்துக் கொண்டு வயலுக்கு சென்றான் முருகன். பெறும் அதிர்ச்சி அவன் பயிரெல்லாம் வீணாகி விட்டது.காரணம் தெளித்த மருந்தின் விபரீதம். என்ன செய்வதேன்று ஒன்று புரியாமல் அழுக ஆரம்பித்தான் முருகன். இத நம்பித்தானே எம்புள்ளைக்கு வாக்கு கொடுத்த இப்ப இப்படி ஆயிருச்சே நான் எங்க போய் சொல்லுவன்.. என்று கதறி அழுதுகொண்டிருந்தான் முருகன். அங்கு வந்த செல்வம் முருகனை சமாதானப்படுத்தி எல்லாம் சரி ஆகிடும் கவலைப்படாத முருகா சரி பண்ணிரலாம். என்று ஆறுதல் கூற அவனிடம் அனைத்தும் கூறினான் முருகன்... சரிப்பா நீ சொல்றதும் நியாயம் தான் ஆன இப்படி ஆகும்னு நாம என்ன கனவா கண்டோம். சரி விடுப்பா வேற ஏதா பண்ணலானு சொல்லிக்கொண்டு அவனும் போக.

மனமுடைந்த முருகன் வீட்டிற்க்கு சென்று நடந்தவற்றை எல்லாம் கலா விடம் கூறினான்.. அவளும் முருகனுக்கு ஆறுதல் கூற சரி விடுங்க சரி ஆயிடும் இனி அந்த மருந்த வாங்க வேணாங்க வேற எதாவது பண்ணலாம் என்று என்று சொன்னால்... ஆனா முருகனோ அது இல்லடி சரி பண்ணிக்கலானு எனக்கும் தெரியும் எம்புள்ள வந்து கேட்ட நான் என்ன சொல்லுவன் இன்னும் இரண்டு நாள்ல சுற்றுலா கூட்டி போக போறான்னு சொல்லிட்டு எவ்ளோ சந்தோசமா போன இப்ப வந்து கேக்கும் போது இப்படி சொன்ன எம் புள்ள மனசு ஒடஞ்சு போய்யிற மாட்ட அதுக்குத்தான் என்ன பண்றதுனு தெரில என்று இருவரும் பேசிக் கொண்டிருக்கும் போதே பள்ளி முடிந்து அருந்ததி வர மீண்டும் அதையே சொல்ல முருகனும் சரி புள்ள கண்டிப்பா போவயாம்மா. போய் விளையாடு புள்ள என்று சொல்ல அவளும் ஆனந்தமாக விளையாட சென்று விட்டாள்...

இரண்டு நாள்ல எப்படி ஆயிரம் ரூவா புரட்டுவனு

தெரியலையே.. என்று யோசிக்க ஆரம்பித்தான் முருகன். நாள் நெருங்க நெருங்க அருந்ததி அதைப் பற்றியே பேசிக் கொண்டிருக்க... திடீரென்று முருகன் பயிர் விடயமாக நான் வெளியூர் போற வர இரண்டு நாள் ஆகும். நான் போய்ட்டு வரேன் அதுவரைக்கும் நிலத்தை பாத்துக்கோங்கனு சொன்னான். யப்பா பள்ளிக்கூடத்துல் சுற்றுலா கூட்டிபோறாங்கன்னு சொன்னல நீ இப்ப போறன்னு சொல்ற நான் எப்படிப்பா போவனு செல்ல மகள் கேட்க நான் இரண்டு நாளைக்குள்ள வந்துருவ புள்ள கவலைப்படாத புள்ள. அப்பா வந்துருவேன் என கூறிக் கொண்டு தன் பயணத்தை தொடர்ந்தான் முருகன்... செல்வமமும் முருகனும் பக்கத்து ஊரில் உள்ள தொழிற்சாலையில் வேலை செய்தனர்.. இரண்டு நாட்கள் கடுமையாக உழைத்த முருகன் சரியான தூக்கமும் இல்லாமல் சாப்பாடும் இல்லாமல் தன் மகளுக்காக கடுமையாக உழைத்து ஆயிரம் ரூவா சம்பாரித்து விட்டான்..

ஆயிரம் ரூவா கிடைத்ததும் ஊருக்கு இருவரும் புறப்பட்டனர்.. முருகன் படும் கஷ்டங்களை எல்லாம் பார்த்து விட்டாள் அருந்ததியின் தோழி... வீட்டிற்க்கு வந்த முருகன் மனைவி கலா நலம் விசாரிக்க முருகன் தன் செல்ல மகளை தேடினான்.அவள் விளையாட சென்றதால் இப்பொழுது வரமாட்டாள் என்று கூறினாள் கலா. பயணம் செய்த களைப்பில் உறங்கிப் போக நன்றாக அயர்ந்து தூங்கிவிட்டான்..தன் வேலை முடிந்த அருந்ததி அப்பாவை பார்த்ததும் மகிழ்ச்சியடைந்தாள்..நாளை சுற்றுலா செல்ல வேண்டும் என்ன இவர் இப்படி தூங்குகிறார் என்று முருகனை எழுப்ப முயன்று தோற்றுப்போனாள். அப்பாவின் மீது கோபம் கொண்ட மகள் எதுவும் சாப்பிடாமல் அழுகையில் உறங்கிப் போனாள்... காலை பொழுது விடிந்தது முருகனுக்கு முன் மகள் எழுந்து கொண்டாள் ஒரு வழியாக அப்பாவை எழுப்பி இன்று நான் சுற்றுலா செல்ல வேண்டும் நான் கேட்ட ரூவா எங்கே என்று கேட்க முருகனும் எடுத்துக் கொடுத்தான். கலாவோ எதவும் கூறாமல் அமைதிக் காத்தாள்...

மிகுந்த மகிழ்ச்சியுடன் பள்ளி சென்றாள் அருந்ததி. சுற்றுலா செல்ல எல்லோரும் தாயராகிக் கொண்டிருக்க.அவளின் தோழி ஒருத்தி மட்டும் சுற்றுலாவுக்கு வரவில்லை. அவள் அருகில் சென்று கேட்டாள் நீ மட்டும் இன்னும் என் புறப்படாமல் இருக்கிறாய் வா போகலாம் என்று அழைத்தாள். அவளோ நான் வரல எங்கிட்ட அவ்வளவு ரூவா இல்ல நீ போய் வா என்று கூற அருந்ததியோ சிரித்தாள். என் சிரிக்கிற என்று வெகுளியாக கேட்க என்கிட்ட கூடதா ரூவா இல்ல எங்க அப்பா கிட்ட சொன்ன அவர் தான் கொடுத்தார். நான் கேட்ட என்னவேனா செய்வாரு எங்க அப்பா என்று பெருமை பட்டுக் கொள்ள. அவள் தோழியோ நீ இப்படி பெருமையா சொல்லுறதுக்கு உங்க அப்பா எவ்ளோ கஷ்டபட்டாருனு எனக்கு தான் தெரியும்... என்று அவர் இரண்டு நாட்கள் பட்ட கஷ்டத்தை மொத்தமாக அவள் கூற அருந்ததி கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது... வேகமாக வீட்டை நோக்கி ஓடினாள்.சுற்றுலாவுக்கு கொண்டு சென்ற பையை தூக்கி வீசினாள்.

சத்தம் கேட்டு திடுக்கிட்டு எழுந்த முருகன். எம்புள்ள என்னாச்சு இன்னும் நீ போகலையா இங்க இருக்குறவ. சீக்கிரம் போ அவுங்க எல்லா போய்டப் போறாங்க என்றான் முருகன்... எதுவும் கூறாமல் அமைதியாக நின்று கொண்டிருந்தாள். மீண்டும் முருகன் கூற ஓடி வந்து முருகனை கட்டி அணைத்தால் மகள். அப்படியொரு அழுகை முருகன் எவ்வளவோ கூறியும் அழுகை நிற்க்கவில்லை. யப்பா என்ன மனுச்சுருப்பா. நீ இந்த ஆயிரம் ரூவா சம்பாதிக்க எவ்ளோ கஷ்டப்பட்டனு எனக்கு தெரியும்ப்பா. நான் சுயநலமா இருந்துட்டன்ப்பா என்னோட ஆசை நடந்த போதும்னு இருந்துடன்ப்பா. உன் நிலைமை கொஞ்சம் கூட புருஞ்சுக்காம நான் சந்தோசமா இருந்துட்டா போதும்னு இருந்துட்டன்ப்பா என்ன மனுச்சுக்கப்பா. சுற்றுலா என்னப்பா சுற்றுலா நான் உன்ன சுத்துனா அதுதா எனக்கு இன்பச் சுற்றுலா. என் உலகமே நீதாம்ப்பா உன்ன சுத்துனா நான் உலகத்தையே சுற்றுலாப் போய்ட்டு வந்த மாதிரிப்பா என்று அழுகையோடு கூறினாள் அருந்ததி. இதைக் கேட்ட முருகனின் கண்களில் கண்ணீர். அப்படிலா இல்லா புள்ள உன் சந்தோசம் தான் எங்க சந்தோசம் புள்ள போய்ட்டு வா புள்ள என்று கூற இல்லப்பா நான் போகல உன்ன விட்டு நான் எங்கையும் போக மாட்டப்பா போனா எல்லாரும் சேர்ந்து போலாம் இல்லனா வேனாப்பா என்று கூறினாள். என் புள்ள இப்படி சொல்ற நீ சந்தோசமா போய்ட்டு வரத்தான நான் ரூவா கொடுத்த இப்ப இப்படி சொல்றவ... நீ இந்த ரூவா சாம்பாதிக்க எவ்வளவு கஷ் ப்பட்டனு எனக்கு தெரியும்ப்பா. அத மறந்துட்டு நான் எப்படிப்பா சந்தோசமா போவ. நீ கஷ்டப்பட்டு சம்பாதிச்சு நான் சந்தோசமா இருக்கவா வேணாம்ப்பா நம்ம எல்லாரும் சந்தோசமா இருப்போம்ப்பா என்று கூறினாள்...

இதைக் கேட்ட முருகன் நெகிழ்ச்சியில் உறைந்து போனான். முருகன் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருக்கேடுத்து ஓடியது.கலாவோ மகளை கட்டியணைத்து முத்த மழை பொழிந்தாள்.. எங்க அப்பா தான் இந்த ஊர்லயே ரொம்ப நல்லவர் என் அப்பாக்கு நிகரா யாரும் இல்லை எனக்கு கிடைத்த அப்பா யாருக்கும் கிடைக்க மாட்டாங்க. என்று உரக்கச் சொன்னால்... அனைத்தும் கேட்ட முருகன் தன் செல்ல மகளைக் கண்டு செய்வதரியாது மகிழ்ச்சிக் கடலில் மூழ்கிப் போனான்... செல்ல மகளைக் கண்டு பெருமை கொண்டான்...

முற்றும்......

துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்
@skytamil.lk
மாதந்தோறும் | இதழ் - 21 | 04 ஜூலை 2022

# கத்தார் மண்ணில் "தமிழ்மகன் விருது-2022" இல் "இணைய தமிழன்" விருது வென்றார் ஜனூஸ் சம்சுதீன்..!







நூருல் ஹுதா உமர்
சாய்ந்தமருது

கத்தார் மண்ணில் அல்-அரப் உள்ளக கலையரங்கில் (24.06.2022) இடம்பெற்ற பல்வேறு துறைகளில் கனதியான சாதனை படைத்த ஆளுமை மிக்க சான்றோரை பாராட்டும்" தமிழ்மகன் விருது-2022" விழாவின் போது இணைய வெளி நவீன சமூக ஊடக பரப்பில் ஆக்கபூர்வமான திறன்களை வெளிப்படுத்தியமைக்காக "இணைய தமிழன்" விருதினை பெற்றார் வியூகம் ஊடக வலையமைப்பின் பிரதானியும், இலங்கையின் தேசிய வானொலி மற்றும் தேசிய தொலைக்காட்சியின் அறிவிப்பாளரும், கவிஞருமான ஜனூஸ் சம்சுதீன் அவர்கள். சர்வதேச மட்டத்தில் கீர்த்தி பெற்றிருக்கும் ஜனூஸ் சம்சுதீன் அவர்களுக்கு எமது இதயமார்ந்த வாழ்த்துக்கள்..!

கத்தாரில் அல் அரப் ஸ்டேடியத்தில் வெகு விமர்சையாக இடம்பெற்ற இவ்விருது விழாவில் கத்தார் வாழ் அரபுலக பிரமுகர்கள், தென்னிந்திய சினிமா கலை நட்சத்திரங்கள், பல்துறை சார் ஆளுமைகள், கத்தார் வாழ் புலம்பெயர் மக்கள் என பெரும் திரளானோர் கலந்து சிறப்பித்தனர். ஜனூஸ் சம்சுதீன் இலங்கையின், கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள சாய்ந்தமருது எனும் ஊரில் பிறந்தார்.

ஜனூஸ் சம்சுதீன் இலங்கையின் தேசிய வானொலியாம் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம், மற்றும் தேசிய தொலைக்காட்சியாம் ரூபவாஹினி நேத்ரா டீவியின் பகுதி நேர அறிவிப்பாளர். மேலும், கவிஞர், எழுத்தாளர், இயக்குனர், நடிகர், சுயாதீன ஊடகவியலாளர், சமூக ஊடக செயல்பாட்டாளர் என பல்வேறு தளங்களில், களங்களில் தொடர்ச்சியாக இயங்கி கொண்டிருப்பவர். "தாக்கத்தி" மற்றும் "மூசாப்பும் ஒரு முழ வெயிலும்" என இரண்டு கவிதை நூல்களை வெளியிட்டுள்ளார்.

2016 ஆம் ஆண்டில் முகநூல் தளத்தில் குரலற்ற மக்களின் குரல் எனும் மகுட வாசகத்தில் வியூகம் டிவி எனும் பெயரில் ஒரு முகநூல் தொலைக்காட்சியினை நிறுவி, அதனூடாக சமூக ஊடக பரப்பில் புத்தெழுச்சியான ஊடக கலாசாரத்தினை தோற்றுவித்தவர். இவரின் முதன் முதலான- முன் மாதிரியான சமூக ஊடக பயணத்தின் எழுச்சியில் ஈர்க்கப்பட்டு தற்போது இலங்கையில் பல சமூக ஊடக சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.




வியூகம் இலங்கையில் மாத்திரம் அல்ல சர்வதேசங்களிலும் மக்களால் அதிகம் விரும்பப்படும் ஓர் சமூக ஊடகமாய் திகழ்கிறது. சர்வதேசம் எங்கும் ஒரு இலட்சத்து 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் பேசும் உறவுகள் வியூகம் முகநூல் நேரலை தொலைக்காட்சியினை பின் தொடர்ந்து வருகின்றனர்.

இலங்கையில் மாத்திரம் முடங்கி விடாமல் வெளிநாடுகளுக்கும் சென்று வியூகம் தனது சமூக ஊடக பயணத்தினை விஸ்தரித்துள்ளது. அதிலும் குறிப்பாக இந்தியா, கத்தார், துபாய் போன்ற தேசங்களுக்கு ஜனூஸ் சம்சுதீன் தலைமையிலான வியூகம் குழுமத்தினர் பயணித்து அங்கிருந்து பற்பல சமூக பெறுமானம் மிக்க நிகழ்ச்சிகள், வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தேசிய ஊடகங்கள், சமூக மற்றும் இணைய ஊடகங்கள் மூலமாக தமிழுக்கும், தமிழ் சமூகத்திற்கும் ஜனூஸ் சம்சுதீன் தன்னால் இயன்ற பங்களிப்பினை நல்கி கொண்டிருக்கின்றார். அதன் பொருட்டு தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் இவர் பல்வேறு விருதுகள், பாராட்டு சான்றிதழ்கள், சான்றோரின் வாழ்த்துரைகள் பெற்றுள்ளார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.



# கத்தாரிலுள்ள செயற்கை கிராமம் ஃபிலிம் சிட்டி

## பற்றிய உங்களுக்கு தெரியுமா?

உலகில் இருக்கும் எண்ணிலடங்கா சுற்றுலாத் தலங்களை பற்றி நாங்கள் அறிந்திருந்தாலும் கத்தாரில் இருக்கும் சுற்றுலாத்தலங்களில் ஒன்றுதான் செயற்கை கிரமாம் “ஃபிலிம் சிட்டி” அதன் அமைதியான அழகு மற்றும் அற்புதமான பாலைவன அமைப்பு சுற்றுலாப்பயணிகளை கவரக்கூடியவாறு அமைக்கப்பட்டுள்ளது. இதன் அமைப்பு பழைய கிராமங்களை நினைவூட்டுகிறது, மற்றும் வளைகுடா பிராந்தியத்தில் பண்டைய கிராம மக்கள் வாழ்ந்த விதத்திற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. இந்த கிரமாம் எவ்வாறு உருவானது என்பது இந்த இடத்தை பார்வையிட வரும் ஒவ்வொருவருக்கும் ஒரு மர்மமாகவே உள்ளது.

இது ஒரு திரைப்படம் அல்லது கத்தாரின் 2022 உலகக் கோப்பை வீடியோ விளம்பரத்திற்காகவோ அல்லது தொலைக்காட்சித் தொடருக்கான தொகுப்பாகக் கட்டப்பட்டது என்று பலர் நம்பினாலும் அது எப்படி வந்தது என்பது தெரியவில்லை. ஆயினும்கூட நகரத்தை ஆராய இங்கு வரும் பார்வையாளர்களுக்கு அதன் அமைப்பு ஆச்சரியத்தை அளிக்கிறது. உண்மையில், ஃபிலிம் சிட்டி கத்தாரின் சிறந்த சுற்றுலாத்தலங்களில் ஒன்றாக உருவெடுத்துள்ளது. இவ்வாறான விசித்திரம் நிறைந்த சுற்றுலா தளங்களைப் பார்வையிடுவது நாம் அனைவரும் விரும்பும் ஒரு விடயமாக இருந்து கொண்டிருக்கிறது, நிச்சயம் நீங்களும் கத்தாரில் இருக்கின்றீர்கள் ஆனால் அல்லது கத்தாருக்கு பயணம் செய்தீர்களானால் இந்த ஃபிலிம் சிடியை பார்வையிடாமல் திரும்பாதீர்கள்.

### எப்படி செல்வது?

டோஹாவிலிருந்து துகான் நெடுஞ்சாலையில் டி-ரிங் ரோடு வழியாக ஷாமலுக்குச் சென்று அங்கிருந்து அல் ரய்யான் இன்டர்சேஞ்சில் (4-லெவல் இன்டர்சேஞ்ச்) இடதுபுறம் திரும்புவதன் மூலம் பிலிம் சிட்டியை நீங்கள் அடையலாம். இது உங்களை துகான் நெடுஞ்சாலைக்கு அழைத்துச் செல்கிறது. ஏறக்குறைய 90 கிமீ பயணித்த பிறகு, ஜிக்ரீத் பாதை அடையாளத்தை அடைந்தவுடன் வலதுபுறம் திரும்பவும்.









ஜே.எம்.பாஸித்
ஸ்கை தமிழ்



# முடிவில்லா சீர்கேடுகள்.

முனீரா வாஹித்
சில்மியா புர

சிறுமி ஆயிஷாவின் மரணத்தைப் பற்றி அறியாதவர்கள் யாருமே இருக்க முடியாது அவளது மரணச் செய்தியைக் கேட்டு உள்ளங்கள் உற்ற கவலையினையும் அதேவேளை அவளது தாயின் கண்ணீர் துளிகளை பார்க்கும் போது எழுந்த அளவிலா துயரினையும் வார்த்தைகளால் வர்ணித்திட இயலாது.

அன்றைய நாள் அனைவரின் வார்த்தைகளிலும் இருந்த அவள் மீதான அக்கறையும் கரிசனையும் நீதிக்காக போராட எண்ணிய உத்வேகமும் இன்றும் இருக்கிறதா என்று எண்ணினால் கேள்விக்குறியாகவே இருக்கிறது.

இப்படியாக எத்தனை கொலை வழக்குகள் எத்தனை குடும்பங்களின் மன வேதனைகள் சொல்லப்படாமலே புதைந்து கிடக்கிறது. ஒரு காலம் வருகிறது யாரோ ஒருத்தனின் இழிவான செயலால் ஒரு உயிர் கொடூரமான முறையில் பறிக்கப்படுகிறது. பின்பு அவை ஒரு காலச் சம்பவமாக மாற்றப்பட்டும் மறக்கடிக்கபட்டும் விடுகிறது.

ஆனால் அந்த உயிரை பெற்றெடுத்த பெற்றோர்களின் உளக் குமுறல்கள் யாருக்கும் புரிய போவதில்லை. உண்மையில் ஆயிஷா என் பிள்ளையாக இருந்தால் அந்த வலி என் உயிர் இருக்கும் வரையில் என்னை உயிருடன் கொன்றிருக்கும். உங்கள் பிள்ளையாக இருந்தால் உங்களையும் அதே மன வேதனை தாக்கியிருக்கும். அப்படித்தானே இங்கு வாழும் ஒவ்வொரு மனிதனினதும் தனிப்பட்ட மன வலி என்பது. அதனை புரிந்து கொள்ளாத உணர்வுகளால் மரித்துப்போன ஒழுக்கச் சீர்கேடுகளால் தங்களை போர்த்திக் கொண்டிருக்கும் கயவர்களினால் தானே இந்தக் கொடூரங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

தான் ஆசிரியராகப் பணிபுரிய வேண்டும் என்ற கனவுகளுடன் பாடசாலைக்குச் சென்ற புங்குடிதீவு மாணவி வித்யா மோசமான முறையில் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட படுகொலைச் சம்பவம் அதேபோல சிறுமி ஷேயா சதௌமியின் கொலை இன்னும் பல இன்னோரன்ன படுகொலைச் சம்பவங்கள் நம் சமூகத்தில் இடம்பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன.

இவற்றுக்கெல்லாம் முழுமையான நீதி கிடைக்காதா? என்றால் இல்லவே இல்லை எனினும் இவ்வாறான வேதனை மிகு சம்பவங்கள் இடம்பெறாமல் இருப்பதற்கான சில நடவடிக்கைகளை யாவது எம்மால் முன்னெடுக்கலாம் என்ற நோக்கிலேயே இவ்வாக்கத்தை எழுதுகிறேன்.

இப்படியான பல சம்பவங்கள் நடைபெறுவதற்கு முக்கிய காரணமாக அமைபவை எவை என்றால் வீட்டுச் சூழலிலிருந்து ஒழுக்கமான முறையில் பிள்ளைகள் வளர்க்கப்படாமையும், முறையற்ற நபர்களுடனான தொடர்பாடலும் போதை வஸ்துக்கள்

மீதான விரக்தியின் வெளிப்பாடும் அதேவேளை பெண்கள் மீதான தவறான புரிதல்களும் ஆகும்.

ஒவ்வொரு பெண்ணிலிருந்தும் தானே ஒரு ஆண் பிறப்பெடுக்கிறான். அவளால் தானே பாலூட்டப்பட்டு போஷிக்கபடுகிறான். அவளது தாய்மை அங்கு எவ்வளவு போற்றப்படுகிறது. பின்னர் ஏன் தவறான முறையில் இன்னொரு பெண்ணை இச்சையுடன் நோக்கும் அளவிற்கு ஒரு கட்டத்தில் அவன் முன் வர வேண்டும். சிலரது வீட்டுச் சூழலை எடுத்துக் கொண்டால் அங்கு பெற்றோர் பிள்ளைகள் என்ற வரையறை கிடையாது. அனைவரும் கூட்டாக இணைந்து திரைப்படங்களைப் பார்ப்பது,சின்னத்திரை தொடர்கள் கண்டு களிப்பது, பாடல்களை பார்த்து ரசிப்பது இவ்வாறாக அடுக்கிக் கொண்டே போகலாம். இங்கு பிள்ளையின் வெட்கம் பறிக்கப்பட்டு விடுகிறது. அதேபோல திரைப்படங்களில் வரும் முறையற்ற காட்சிகள், போதை வஸ்துக்களின் மீதான கவர்ச்சி, மனித உணர்வுகளை தவறான சிந்தனைக்கு இட்டுச் செல்லக்கூடிய காட்சிகள் இவைகள் யாவும் ஒரு பிள்ளையின் வளர்ப்பில் பாதிப்பு செலுத்துகின்றன.

அதேபோல தனது பிள்ளையின் முன் பெற்றோர்கள் நடந்து கொள்ளும் விதமும் பிள்ளைகள் மனதில் பாதிப்பு செலுத்துகிறது ஆகவே பிள்ளைகளின் முன் பெற்றோர்கள் மிகவும் அவதானமான முறையில் நடந்து கொள்ளுதல் அவசியமாகும். வார்த்தைப் பிரயோகங்களாக இருக்கட்டும் அல்லது தங்களது செயல்களாக இருக்கட்டும் அனைத்திலும் ஒழுக்கத்தைப் பேணுதல் இன்றியமையாததாகும்.

சிலரது வீடுகளினை எடுத்துக் கொண்டால் பெற்றோர்களிடம் ஒற்றுமை என்பது காணப்படுவதில்லை. பிள்ளைகள் சிறு வயதினை உடையவர்களாக இருக்கலாம். எனினும் அந்த தாயினதும் தந்தையினதும் ஏச்சு பேச்சுக்கள் விலகல்கள் என்பன அவர்களுக்கு வார்த்தைகளால் சொல்ல முடியாவிட்டாலும் மனதிற்கு புரியும். அந்த நேரத்தில் அந்தப் பிள்ளைகளின் மனது உடைந்து போயிருக்கும் இந்த தாயிடமும் தந்தையிடமும் எமக்கான எந்த அன்பையும் எதிர்பார்க்க முடியாது என்பதை அவர்களாகவே முடிவெடுத்து விடுவார்கள். பின்னரான அவர்களது செயற்பாடுகள் தனிப்பட்ட ரீதியாகவே இருக்கம். இவ்வாறான குடும்பப் பின்னணியில் வளரும் குழந்தையின் எதிர்காலம் பயனுள்ளதாக அமையப் போவதில்லை.

அப்பிள்ளைகளின் செயல்கள் யாவும் தவிர்க்க முடியாத சமூகம் ஏற்றுக்கொள்ளாத செயல்கள் ஆகவே இருக்கப் போகிறது. ஆகவே திருமணத்திற்குப் பின் ஒரு பிள்ளை கருவுற்ற தாக ஊர்ஜிதம் செய்து கொண்டால் அன்றிலிருந்தே பெற்றோர்கள் தங்களது செயல்களை ஆரோக்கியமாக அமைத்துக் கொள்ளுதல் அவர்களது வாழ்க்கை முழுவதுமாக சிறப்பான முறையில் வாழ்வதற்கு பங்களிப்புச் செய்யும் என்பதனை நாம் ஒரு போதும் மறந்து விடக்கூடாது.

தொடரும்...

# றிஸ்வி முஸ்தபா கல்வி மற்றும் சமூக நல உதவித் திட்ட அமைப்பின் தலைவர் அவர்களை ஸ்கை தமிழ் குழுவினார் கத்தாரில் சந்தித்தனர்..!



றிஸ்லி முஸ்தபா கல்வி மற்றும் சமூக நல உதவித் திட்ட அமைப்பின் தலைவர், மயோன் குரூப் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் றிஸ்லி முஸ்தபா அவர்களை கத்தாரில் இயங்கி கொண்டு இருக்கும் ஸ்கை தமிழ் ஊடகத்தின் பணிப்பளார் ஜே.எம்.பாஸித் மற்றும் உறுப்பினர்கள் நேற்று 01.07.2022 (வெள்ளிக்கிழமை) தோஹா ராடிசன் ப்ளூ ஹோட்டலில் சந்தித்தனர்.

அண்மையில் கத்தார் விஜயம் செய்த றிஸ்லி முஸ்தபா கட்டாரில் உள்ள தொழில் வழங்குனர்கள், நிறுவனங்கள் உள்ளிட்ட பிரதிநிதிகள், கட்டாருக்கான இலங்கை தூதுவர் உள்ளிட்ட பலரைச் சந்தித்து இலங்கையை சேர்ந்த இளைஞர்களுக்கு கத்தாரில் சிறந்த தொழில் வாய்ப்பினை ஏற்படுத்தி வரும் முயற்சியை ஜே.எம்.பாஸித் வாழ்த்தினார். மேலும் தமது அமைப்பின் மூலமான சமூக செயற்பாடுகளுக்கு ஸ்கை தமிழ் ஒத்துழைப்பு வழங்கும் என்றும் தெரிவித்தார்.

# இலங்கை சாய்ந்தமருதை சேர்ந்த சிறுவன் அமாத் கத்தாரில் நடைபெற்ற தமிழ்மகன் அவார்ட்ஸ் நிகழ்வில் அக்னி சிறகு விருது பெற்றார்

திரைகடல் கடந்து சாதித்த தமிழர்களுக்கு மகுடம் சூட்டும் மகத்தான மேடை தமிழ்மகன் அவார்ட்ஸ் 2022 நேற்று கத்தார் அல் அரபி ஸ்டேடியமில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கத்தார், இந்தியா பிரபல நடிகர்கள் கலந்து கொண்டனர். இலங்கை சாய்ந்தமருதை சேர்ந்த சிறுவன் அமாத் பின் அன்வர் அவர்களுக்கு அக்னி சிறகு எனும் விருது கிடைக்கப் பெற்று கௌரவிக்கப்பட்டது.

இவ்விருது வழங்குவதற்கான காரணம்: Manchester united king football Camp நடாத்திய கால்பந்து போட்டியிலே Man of the match பட்டத்தை வென்றவர். பின்பு கத்தாரில் உள்ள Al Arabic club இல் இணைந்த இவர் தற்போது under twelve category இல் கட்டார் Sports club காக விளையாடிக் கொண்டிருக்கிறார்.














# கவலை

தாழிடப்பட்டும் அதனையும் திறந்துவிட்டு
ஒட்டிக்கொள்ளும் விருந்தாளியாய்
வரவேற்பறையில் அது.....

விரட்டவும் முடியவில்லை. அழைத்து
ஆதரிக்கவும் முடியவில்லை.

சிரித்துபேசவும் முடியாமல் விம்மிவிம்மி
அழுது ஏதோஏதோ புலம்பி தீர்த்துக்
கொட்டுகின்றேன் அதனருகே...

என்னை பாவமாகவும் பார்க்கிறது.
கொடுமையான பசியால் உண்ணும்
உணவாகவும் பார்க்கிறது.

அதனருகே நான் இருக்கும் பொழுதெல்லாம்
பதட்டமும் கோபமும் பயமும் கலந்த ஒரு
பெரும்பரவசம் என்னுள் பரவும்
சிறு புன்னகையும் பூப்பேன்.

எனக்கு இன்னும் தெரியவும் இல்லை
சற்றும்கூட புரியவும் இல்லை அதற்கு
என்மேல் காதலா அல்லது எனக்கு
அதன்மேல் காதலா என்று.

இது வரை நாங்கள் பிரிந்ததேயில்லை
பிரியாவிடை என்பது நிகழ்ந்ததுமில்லை.

நான் துரத்தும் பொழுதெல்லாம் கவரும்
காந்தமாய் என்னையும் அதனோடு
ஒட்டிக்கொண்டே ஓடுகிறது.

துளியெனும் இன்பங்களால் கூட நாங்கள்
தூரமானதேயில்லை இன்பங்கள்
எங்களிடையில் நுழைந்ததுமில்லை.
நுழைந்த இன்பங்களை
அந்த விருந்தாளி என்னை அனுபவிக்க
விட்டதுமில்லை

இத்தனைக்கும் நான் அதை
அழைத்ததேயில்லை. அழையாத
விருந்தாளியாய் என்னோடுதான் இருக்கிறது.

விருந்தே அதற்கு நானா? என்று கேள்வியும்
என்னுள் உதயமாகும்.

மனிதர்களை போல என்றால்,
பாதிலே விட்டுச்செல்லும்.
மனித குணமில்லை என்றால்,
அதனுள் நிச்சயமாக பாசம் கலந்தே
இருக்கும்...எப்படியாயினும் நிச்சயமாக
என்னை விட்டுச்செல்லும் என்ற பதிலில்
கேள்வி உதிர்ந்தே விடும்..

காத்திருந்து நாட்களை கடத்துகிறேன்!
என்னையும் பாசம்பார்த்து சந்தோசமாக வாழ
விட்டுச்செல்லும் நாளினால் மிளிரும்
காலத்தை எதிர்பார்த்த நான் நம்பிக்கையும்
தைரியமும் கலந்த வாழ்வுடன்...!



பாத்திமா சிமாறா
நிந்தவூர்

# டெடி (Daddy)

டெடி  எங்களுக்கு மட்டுமல்ல
பேரப்பிள்ளைகளுக்குமே  நீங்கள் டெடி தான்
என் பிள்ளைகளுக்கு மட்டுமே
அப்பா நீங்கள்

வெள்ளை சாரமே உடையாச்சு
வெள்ளையே உங்கள் நிறமாச்சு
வார்த்தைகளும் உங்களிடம் குறைவாச்சு
வாசிப்பே உங்கள் பொழுதாச்சு

எப்பொழுதுமே படிப்பு தான்
பேச்சாக இருக்கும்..
எங்களுக்கும் அதனையே
மூச்சாக சொன்னீர்கள் ..

ஆளுமைகளாக்க ஆசைப்பட்டீர்கள்
ஆங்கில ஆசிரியராக்க ஆசைப்பட்டீர்கள்
அத்தனையும்  நிவர்த்தி ஆச்சு
அதைப் பார்த்து உங்கள் மனம் நிம்மதியாச்சு


பொறுமையே உங்கள் குணமாச்சு
பண்பிலும் நீங்கள் உயர்ந்தவராச்சே
அத்தனை பேரும் உங்களைத்தானே
அன்பு செய்யக் காரணமாச்சு

உங்கள் உயரத்தை ரசித்தேன்
கையெழுத்தையும் தானே ரசித்தேன்
உங்கள் நேரமுகாமையும் கூட  ரசித்தேன்
இனி அவையெல்லாம் நினைவுகளே..

என்றுமே நீங்கள் அடித்ததில்லை
ஆனாலும் நாங்கள் பயந்தோம்
உங்கள் வார்த்தை கூட
எங்களை கட்டிப்போடும் மந்திரமாச்சு

உங்களின் சாயல் நான் என்றார்கள்
உங்களில்  ஒருத்தி நான் தானே
மண்ணறை வாழ்வு சொர்க்கமாக
தினமும் தொழுது கேட்கிறேன்.





ஷாமென்  நிஸாம்டீன்



# ஒழுக்கமிகு சமுதாயத்தை உருவாக்குவோம்



ஹகீமா அமீனுதீன்
ஒட்டமாவடி

சுயநலப் பிசாசுகள் கும்மியடிக்கும் இருளடைந்த
மனங்களோடு ஊனுண்ணி விலங்குகளாய்
அடுத்தவர் கதை பேசி மாமிசம் உண்டு திரியும்
ஒழுக்கமற்ற சமூகம் இது!

மனிதம் எனும் புனிதம் நீங்கி
அன்பு எனும்
பண்பு நீங்கி
பாசம் எனும்
சுவாசம் நீங்கி
ஒழுக்க விருட்சங்களால் செழித்து சிறக்க
வேண்டிய மனங்களை மலடாக்கிக் கொண்டு
மந்தம் பிடித்துத் திரியும் ஒழுக்கமற்ற சமூகம்
இது!

உயிருக்கு மேலாய் மதித்துத் போற்ற வேண்டிய
தாய்-தந்தையரை அடிமைக்கு சமப்படுத்தி
வயதினை கேலிப் பிரயோகம் செய்து முதியோர்
இல்லம் எனும் சிறையை பெற்ற பாவத்திற்காய்
பரிசளிக்கும் ஒழுக்கமற்ற சமூகம் இது!


மதுவெனும் கடலினில் மூழ்கி மாது எனும்
மீன்களை விலைபேசி கண்களாலேயே
வேட்டையாடி கேவலப்படுத்தும் ஒழுக்கமற்ற
சமூகம் இது!

ஆடைகளில் கஞ்சத்தனம் பூண்டு வீதியில்
அலங்காரக் காட்சிப் பொருளாய் உலா வரும்
அகங்காரப் பேய்களை வரமாக்கிக் கொண்ட
ஒழுக்கமற்ற சமூகம் இது!

விடியலெனும் வெற்றியை விண்ணுலகம் வரை
பெற்றுச் சிறக்க கண்ணியம் செய்யும் கலவைச்
சத்தியம் செய்யும் சலவை எனவொரு ஒழுக்கமிகு
சமூகம் இப்பாரினில் வேண்டும்!

பாரபட்சம் பாரா பண்புகளை பறைசாற்றி
உன்னதமாய் உணர்ச்சிகளை உருவாக்கி
உலகிற்கு உறுதி எழுதி ஒழுகும் ஒழுக்கமிகு
சமூகம் இப்பாரினில் வேண்டும்!

ஒழுக்கமற்ற சடமாய் வாழாது ஒழுக்கமெனும்
தவத்தை உயிராய் மதித்து மரியாதை எனும்
மாண்புமிகு பண்பை நித்தம் உணர்த்தும்
ஒழுக்கமிகு சமூகம் இப்பாரினில் வேண்டும்!
இன்றிலிருந்து உருவாக்குவோம்
எமது உணர்வாக்
உயிராக.......



"குடும்பம் தந்த கொடையே எனது ஓவியக்கலை"

# ஓவியத்திறமையில் மிளிரும் ரக்ஷானா ஷரிபுத்தீன்

**தன்னுடைய ஓவியங்களாலும் மேலும் பல ஆற்றல்களாலும் தன்னால் முடியும் என்ற முனைப்போடு சவால்கள் பலவற்றை முறியடித்து தனது திறமைகளை வெளிக்கொணர்ந்த ரக்ஷானா ஷரிபுத்தீன் அவர்களுடனான நேர்காணல்**




அஸ்ரி இப்னு அமீர்

**உங்களது குடும்ப பின்னணி பற்றிக் குறிப்பிடுங்கள்?**

எனது பெற்றோர் இருவரும் ஆசிரியர்கள். தாய் அதிபராக கடமையாற்றி தற்போது பணி ஓய்வு நிலையில் இருக்கின்றார், தந்தை காலமாகிவிட்டார். எங்கள் குடும்பத்தில் சகோதரர்கள் மூவரும் சகோதரி ஒருவருமாகமொத்தமாக ஐந்து பிள்ளைகள். எங்கள் குடும்பத்தில் நான் கடைசிப் பிள்ளை. எனது மூத்த சகோதரர் ஒரு வைத்தியர். புகைப்படக் கலையில் அதீத ஈடுபாடு கொண்ட அவர் ஒரு வனவிலங்குப்புகைப்படக் கலைஞரும் கூட வனவிலங்குப் புகைப்படங்களுக்காக பல நாடுகளின் வனாந்தரப் பகுதிகளுக்குப் பிரத்தியேகமாகச் சென்று தான் சேகரம் செய்த புகைப்படங்களோ, குறிப்பாகதென்னாபிரிக்காவின் "மசாய் மாரா" வனத்தில் தங்கியிருந்து தான் எடுத்த புகைப்படக் கோவையை உள்ளடக்கிதனது சொந்த ஊரான அக்கரைப்பற்றில் ஒரு புகைப்படக் கண்காட்சியையும் நடத்தியுள்ளார். இரண்டாவது சகோதரர் ஒரு ஆசிரியர். அரசியல் விஞ்ஞானத்தை பிரதான பாடமாகக் கற்பிக்கின்ற அவர் ஒருசிறந்த ஓவியர். மூன்றாவது சகோதரர் கணினி மென்பொருள் துறையில் பொறியியலாளராக கடமையாற்றுகின்றார். தற்போது அமீரகத்தில் வசிக்கின்ற அவர் ஓவியம் மற்றும் கவிதை எழுதுவதில் ஆர்வம் கொண்டவர்.

எனது சகோதரி ஒரு சட்டத்தரணி. எழுத்து மற்றும் ஓவியத்தில் ஆர்வமுடையவர். அவரும் தற்போது அமீரகத்திலே வசித்து வருகிறார் நான் ஒரு மனிதவள முகாமையாளர். இத்துறையில் கடந்த பத்து வருடங்களாக தொழில்துறையில் கடமையாற்றி வருகின்றேன். எனது குடும்பத்தில் அனைவருக்கும் இயல்பாக வாய்க்கப்பெற்ற கலை, இலக்கிய ஈடுபாட்டின் விளைவாக நானும், எழுத்து மற்றும் ஓவியத் துறையில் இயங்கிவருகிறேன்

**உங்களது பாடசாலை காலத்தை பற்றி குறிப்பிடுங்கள். மேலும் அக்காலத்திலிருந்தே இந்த வரைதல் திறன்வளர்க்கப்பட்டதா?**










நான் எனது ஆரம்ப கல்வியை அக்கரைப்பற்று அல் முனவ்வறா வித்தியாலயத்திலும் அதன் பின் உயர் தரம்வரை அக்கரைப்பற்று தேசிய பாடசாலையிலும் கற்றேன். ஆரம்பக் கல்வி நிலையில் இருந்தே பாடவிதானத்தைப் போலவே புறக்கீர்த்தியச் செயற்பாடுகளிலும் விளையாட்டிலும் அதிக ஈடுபாடும் செயற்பாடும்கொண்டிருந்தேன்.

மொழி, வினாவிடை, ஓவியம், விளையாட்டு என பெரும்பாலும் அனைத்துப் போட்டி நிகழ்ச்சிகளிலும் ஆர்வத்தோடு பங்கு கொள்வேன். தமிழ்மொழித் தினப் போட்டிகளில் பேச்சு, விவாதம் போன்றவற்றில் எனதுபங்கு அதிகமாக இருக்கும். ஆங்கில மொழித்தினப் போட்டிகளிலும் எழுத்து 'Creative Writing' நிகழ்வில் அதிகம் பங்கேற்பேன். அதேபோல் விளையாட்டு போட்டிகளிலும் (வலைப்பந்தாட்டம்) பங்கு கொண்டதுண்டு.

அந்தக் காலகட்டங்களில் ஓவியப் போட்டிகள் நேரடியாக நடைபெறுவது குறைவு. நடுவர்கள் முன்னிலையில்வரைந்து தேர்வுகள் இடம்பெறும் ஓவியப் போட்டிகளைத் தவிர ஏனைய போட்டிகளுக்கு எனது தாயார் என்னைஅனுமதிபதில்லை. ஆங்காங்கே நடைபெறும் ஒரு சில ஓவியப் போட்டிகள் ஒன்றிரண்டில் கலந்துகொள்வதைத்தாண்டி, ஓவியத்தில் சிறு வயதில் இருந்தே மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த நான் பெரிய அளவில்நடைபெறுகின்ற ஓவியப் போட்டிகளில் என்னை ஈடுபடுத்திக்கொண்டதில்லை. பாடவிதானம் மற்றும்அதனோடுகூடிய புறக்கீர்த்தியச் செயற்பாடுகளோடு ஓவியத்தையும் கொண்டுநடாத்துவது சிரமமாக இருந்தமைகூட இதற்குக் காரணமாக இருந்திருக்கலாம்.

## இந்த திறமை உங்களுக்கு இந்தளவிற்கு வளர்ந்தமைக்கான பின்னணி யாது?

ஓவியக்கலை நான் பிரத்தியேகமாக கற்றறிந்த ஒரு துறை அல்ல. அது எனது பரம்பரையலகுகளால் இயல்பாகஎனக்குள் ஊடுகடத்தப்பட்ட கலை. எனது தந்தைவழிப் பாட்டனார் புலவர்மணி ஷரிபுத்தீன் அவர்கள் இலக்கியத்தோடு ஓவியத்திலும் தேர்ந்தவர். உயிரோவியங்களை தத்ரூபமாக வரையும் ஆற்றல் வாய்ந்தவர்.

அதேவழியில் எனது தந்தையும் இலக்கியத்தோடு ஓவியத்திலும் தேர்ந்தவர். எனது தந்தை போலவே தாயும்வரைதல், அலங்கார வேலைப்பாடுகள், கைவினைகள் மற்றும் தையற்கலையில் சிறந்தவர். அவர்களுடைய ஆதிக்கம் பிள்ளைகளான எங்களனைவரிலும் கலையாகப் பிரதிபலித்தது என்றே சொல்லவேண்டும்.

பிள்ளை வயதில் இருந்தே எனது பெற்றோரும் சகோதரர்களும் ஓவியங்கள் வரைவதை எனது வீட்டுச் சூழலில்சாதாரணமாக நான் பார்த்து வளர்ந்திருக்கிறேன். அந்த அனுபவம் எனக்குள் இயல்பாக இருந்த ஓவியமரபணுக்களை தூண்டியிருப்பதில் எவ்வித ஐயமும் இல்லை. வீட்டில் இருக்கின்ற கரும்பலகை, காகிதங்கள், நாளேடுகள், கொப்பிகள் என கிடைக்கின்ற அனைத்திலுமே படங்களை வரைந்து தீர்ப்பது எனது வழமை. எப்போதும் படம் வரைந்துகொண்டே இருக்கின்றேன் என எனது தாயாரிடம் திட்டு வாங்குவதும் எனது வழமை.





# யார் இந்த கரீம் டைம் ?

## கரீம் டைம் உருவானது எப்படி..?






ஜே.எம்.பாஸித்
பிரதம ஆசிரியர்

## தொழிலுக்காக கத்தார் சென்று தன்னுடைய திறமையை வெளிக்காட்டி வெறுமனே தொழிலுக்காக மாத்திரம் தன்னை அர்ப்பணிக்காமல் தன்னுடைய திறமையை வெளிக் கொண்டு வந்த கரீம் அவர்கள் பற்றிய அறிமுகம்.



சினிமா நடிகராக வர வேண்டும் என்று ஆசைப்பட்டு வெளிநாட்டிற்கு வேலைக்கு சென்று எதிர்பாராத விதமாக தன் வாழ்வினை பிரகாசமாக மாற்றி அடுத்த கட்டத்துக்கு முன்னேறிய ஒரு இளைஞனின் நிகழ்வைத்தான் இவ் ஆக்கத்தின் ஊடாக உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

கரீம் டைம் பிறந்து வளர்ந்தது யாவும் திருச்சியில் தான். மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தவர். கல்வி கற்பதற்கு போதிய வசதி இன்மையால் கல்வியை தொடர முடியாமல் இடையிலேயே நிறுத்திக்கொண்டார். அவருக்கு தொடர்ந்து கற்பதில் ஆர்வம் இருக்கவும் இல்லை. குடும்பத்திற்கு போதிய வருமானம் இன்மையால், அவர் தொழிலுக்காக சென்று சம்பாதிக்க வேண்டிய கட்டாய சூழ்நிலை ஏற்பட்டது. அவரது குடும்பத்தில் ஒரு சகோதரி உட்பட இரு சகோதரர்கள் இருந்தார்கள். வீட்டில் முதல் பிள்ளையாக கரீம் இருந்ததினால் குடும்பத்தைப் பற்றிய பாரிய பொறுப்புகள் யாவும் அவரிடமே இருந்தது.

ஹோட்டல் வேலை ஏனைய வேலைகள் என்று அவர் பார்க்காத தொழிலே இருக்க முடியாது. கிடைக்கின்ற எல்லா வேலைகளையும் செய்தார். ஒரு கட்டத்தில் அவருக்கே யோசனை ஏற்பட்டது. நமக்கென்று ஒரு நிரந்தர தொழில்





இல்லையேல் இப்படியே வேலைக்கு மாறி மாறி சென்று கொண்டிருந்தால் என்னாவது என்று.

கார் ஓட்டுனராக மாறுவதன் மூலம் நமக்கென்று ஒரு நிரந்தர தொழிலை அமைத்துக் கொள்ள முடியும் என எண்ணினார். பின்னர் கார் ஓட்டுவதற்கு கற்றுக் கொண்டார். பின்பு அதனை கற்றுக் கொண்டதன் மூலம் ஒரு சூப்பர் மார்க்கெட் இல் ஆடோ ஓட்டும் வேலை கிடைத்தது. சில நாட்கள் கழித்து கார் ஓட்டுவதற்கும் வாய்ப்பு கிடைத்தது. பின்னர் சற்று காலம் கழித்து வெளிநாட்டில் ஓட்டுனராக சென்று பணிபுரியலாம் என்றெண்ணி வெளிநாடு செல்வதற்கான கடவுச்சீட்டை பெற்றுக் கொண்டார்.

தங்கைக்கு திருமணம் செய்து கொடுக்க வேண்டும் வீட்டில் வசதியற்ற நிலைமை இவ்வாறு பல குடும்ப சுமைளை நீக்க வேண்டி இருந்தது. எனினும் இவர் மனதில் ஒரு ஆசை நீண்ட நாளாக இருந்தே வந்தது.
தான் சினிமாவில் வில்லன் கதாபாத்திரத்தில் எப்படியாவது நடிக்க வேண்டும் என்று. எனினும் குடும்பம் இருக்கும் நிலைமையில் அவரால் நடிப்பா? குடும்பமா? என்று எண்ணிப்பார்த்தால் குடும்பம் தான் முக்கியம் என்று எண்ணி 2007 ஆம் ஆண்டு வெளிநாடு சென்றார்.

மொழி தெரியாமலும் எதுவுமே அறியாத ஒருவராகவும், ஒரு ஓட்டுனராக வெளிநாடு சென்றால் என்னென்ன கஷ்டம் அனுபவிக்க வேண்டுமோ அவற்றையெல்லாம் அனுபவித்தார். மூன்று வருடங்களில் கத்தாரில் ஓட்டுனராக வேலை புரிந்த பணத்தில் அவருடைய தங்கையது திருமணத்தை மட்டுமே நடத்த முடிந்தது. மூன்று வருடம் கழித்து தங்கையின் திருமணத்திற்காகவே இந்தியாவை வந்தடைந்தார். பின்னர் மீண்டும் கத்தார் செல்லும் எண்ணம் தான் அவரிடம் இருந்தது. அதே நேரத்தில் சினிமாவில் எதையாவது சாதிக்க வேண்டும் என்ற ஆசையும் இருந்தது. ஆசை மட்டும் இருந்து வேலை இல்லை அதற்கான முயற்சியும் இருக்க வேண்டும் என்று கொஞ்ச நாள் சென்னையில் தங்கி இருப்பதற்கு புறப்பட்டார்.



சின்ன சின்ன கதாபாத்திரங்களில் நடிக்கும் வாய்ப்பு அவருக்கு கிடைத்தது. எனினும் பொருளாதார நிலைமை பின்தங்கியே இருந்தது. கை செலவீனங்களுக்கு கூட பணம் இல்லாத நிலைமை. குடும்பத்தையும் சொற்ப பணத்தைக் கொண்டு நல்ல முறையில் பார்த்துக் கொள்ள முடியவில்லை. ஏன் என்றால் அவர் ஒருவர் தான் அந்தக் குடும்பத்தை கவனித்துக் கொள்ள வேண்டும் என்ற கட்டாய நிலைமையில் அவர் இருந்தார். பின்னர் அவர், நமக்கு




குடும்பம் தான் முக்கியம் சினிமாவை பிறகு பார்த்துக் கொள்ளலாம் எண்றெண்ணி மீண்டும் வெளிநாடு செல்லும் யோசனைக்கு வந்தார். டிசம்பர் 2012 மறுபடியும் கத்தார் நாட்டில் வேறு ஒரு வீட்டிற்கு வேலைக்கு சென்றார். ஒரு வருடம் எப்போதும் போல போய்க் கொண்டிருந்தது.

அவர் ஊரில் இருக்கும் பொழுது அவருடைய ஆசைக்காக சின்ன சின்ன காணொளிகள் என்பவற்றை எடுத்து ரசிப்பது உண்டு. அவர் நடிப்பது பாடுவது அவற்றையெல்லாம் எடுத்து அவருடைய மடிக்கணினியில் வைத்திருந்தார். ஓய்வாக இருக்கும் நேரங்களில் எப்போதாவது சலிப்பு ஏற்பட்டால் அந்த காணொளிகளை எல்லாம் அவராகவே எடுத்து பார்த்துக் கொண்டிருப்பார்.

கரீம் ஒருநாள் காணொளிகளை பார்த்துக் கொண்டிருக்கும் போது, அதனை அவருடைய ஓனர் பார்த்துவிட்டு "என்ன இவையெல்லாம்" என்று அவரிடம் கேட்டார். "நான் சினிமாவில் பெரிய நடிகனாக வேண்டும் என்று ஆசைப்பட்டு கொண்டிருந்தேன். அந்த நேரத்தில் ஒத்திகைக்காக எடுக்கப்பட்ட காணொளிகள் தாம் இவை" என்று காட்டினார். "அப்படி என்றால் ஏன் இங்கு வேலைக்கு வந்தீர் ஊரிலே முயற்சித்து இருக்கலாமே" என்று ஓனர் கூற அவருடைய குடும்ப நிலைமையைப் பற்றி கரீம் அவரிடம் கூறினார். இதனால் தான் தன்னுடைய ஆசையை தொடர முடியவில்லை என்றும் கூறினார். ஓனர் உடனே எதையாவது நடித்து காட்டுமாறு கரீமிடம் கூறினார். அவர் அரபியில் நடித்து பேசி பாடி காட்டி அசத்தினார். ஓனர் அதனை எடுத்து இணையதள வாயிலாக பதிவிட்டார். அந்த வீடியோ கொஞ்சம் கொஞ்சமாக கத்தாரில் வைரலாக ஆரம்பித்தது.


அது மட்டுமின்றி நல்ல பல கருத்துக்கள் அந்த காணொளிகளுக்காக வரவும் அதனை நாம் ஏன் தொடர்ந்தும் செய்யக் கூடாது என்று எண்ணினார் கரீம். அப்போதே தனக்கென்று ஒரு கணக்கை ஆரம்பித்து அவருக்கு நேரம் சரியாக இருந்ததன் மூலமாக அதற்கு வித்தியாசமாக கரீம் டைம் என்று ஒரு பெயரை வைத்தார். கத்தாரிலே காணொளிகளை எடுக்க ஆரம்பித்தார் முதலில் தனியாக நடித்து காணொளிகளை எடுத்து பதிப்பித்தார் அது நல்ல வரவேற்பை அளித்தது.

அவருக்கு அதன் மூலமாக கத்தாரில் ஒரு மேடை நாடகத்தில் நடிக்கும் வாய்ப்பும் கிடைத்தது. அங்கு நடிக்கும் போது அவருக்குக் கிடைத்த நடிகர் குழாமினரோடு தான் அவர் தற்போது காணொளிகளை தயாரித்து பதிவிட்டு வருகிறார்.

நிறைய நபர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் அவர் தான் அவருடைய ஓனர் என்று. ஆனால் அவர் ஓனர் இல்லை அவருடைய ஓனர் எப்போதுமே முகத்தை காணொளிகள் வாயிலாக காட்டியதும் இல்லை. அதன் பிறகு தலைப்புக்களை செய்து காணொளிகளை வடிவமைக்க அவரும் அவருடைய குழுவினரும் இணைந்து ஆரம்பித்தார்கள்.

வெளிநாட்டுக்கு வேலைக்கு சென்ற ஒரு கார்






ஓட்டுனரினதும் அவருடைய ஓனரினதும் கதையை தயாரித்து இணையதளத்தில் பதிவு செய்ய ஆரம்பித்தார்கள். அவை மிகவும் பெரிய அளவில் பேசப்பட்டன. இந்த மாதிரியாக வித்தியாசமாக முயற்சி செய்யலாம் என்று ஒரு குடும்ப கதையை காணொளியாக எடுக்கத் தொடங்கினார்கள். அரபுநாடுகள் முழுவதுமாக அவர்களுடைய காணொளிகளை பார்க்க ஆரம்பித்தனர். மக்களுக்கிடையே நிறைய எதிர்பார்ப்புகள் வரத் தொடங்கின. மில்லியன் கணக்கில் பார்வையாளர்களாக பின் தொடர்ந்தார்கள்.

கார் ஓட்டுனராக வேலைக்கு வந்த கரீமின் முழு வேலையாக நடிப்புத் துறையே ஆனது. அவருக்கு பதிலாக வேறு ஒரு ஓட்டுனரை வேலைக்கு அமர்த்திய அவருடைய ஓனர் அவருக்கு முழு நேர ஒத்துழைப்பையும் உற்சாகத்தையும் அளித்து வந்தார்.

ஒரு நல்ல குழாமினரை தேர்ந்தெடுத்து எல்லோருடைய ஆதரவோடும் காணொளிகளை பதிவிட்டு கொண்டு வந்தார்.ஏகப்பட்ட விருதுகள் அவருக்கு கிடைத்தது. கத்தாரில் ஏதாவது திறப்பு விழா ஏனைய விழாக்களுக்கு அவர் சிறப்பு அதிதியாக அழைக்கப்பட்டார். மேலும் அவர் செல்லும் இடங்களில் எல்லாம் ஒரு பெரிய நடிகராக வலம் வந்தார். அவரை சுற்றி பலரும் புகைப்படங்களை இணைந்து எடுத்துக் கொள்ள ஆரம்பித்தனர்.

இப்போது இவர் பலர் மனதை வென்ற சிறந்த இணையதள சாதனையாளராக திகழ்கிறார். அது மட்டுமன்றி தன்னுடைய கருத்தியலான நகைச்சுவைகளின் மூலம் மக்கள் மனதினை வென்றிருக்கிறார். இன்னும் யூடியூப் கோல்டன் விருதினை சுவீகரித்துக் கொண்டுள்ள இவர் சமூகத்தில் பல விருதுகளுக்கு சொந்தக்காரர் ஆகவும் ஆகியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.







# வாழ்க்கைப்பயணம்

**சீ.அருண் குமார்**
பொறியியலாளர் - மதுரை

நாம் தற்பொழுது நம்முடைய தேவைகளை பூர்த்திச் செய்துக் கொள்வதற்காக பலதரப்பட்ட திசைகளில், நமது பயணத்தை தொடர்ந்து கொண்டிருக்கிறோம். நம்மில் பலர் பிறந்த ஊரிலே வாழ்க்கை பயணத்தை தொடர்ந்து கொண்டிருக்கலாம். சிலர் படித்ததற்கு தகுதியான வேலையை தேடி பிறந்த, வளர்ந்த ஊரிலிருந்து குடிபெயர்ந்து வேறு ஊரில் மற்றும் வெளிநாட்டுக்கு சென்று வேலையோ – தொழிலோ செய்து வரலாம். வெளிநாட்டில் குடியுரிமை பெற்று வாழ்ந்து வரலாம். குடும்ப சூழ்நிலை காரணமாக கல்லூரி படிப்பை நிறுத்திவிட்டு சில மாணவர்கள் வேலைக்கு சென்று கொண்டிருக்கலாம். பெண்கள் திருமணத்திற்கு முன்பு பல கனவுகளுடன் இருந்திருக்கலாம். திருமணத்திற்கு பின் கணவன் மற்றும் பிள்ளைகளுக்காக கனவுகளை நிறைவேற்ற முடியாமல் இருக்கலாம். பெருவாரியாக பார்த்தால் நாம் தற்பொழுது இருக்கும் நிலைமைக்கு நாமும் தான் காரணமாக இருக்க முடியும். ஏனெனில் நம்முடைய எண்ணங்களுக்கு ஏற்ப தான் நம்முடைய சூழல் மற்றும் செயல் மலர்கிறது.

எழுத்தாளர் சிவசங்கரி, 24.12.2002 - சிங்கப்பூரில் நடைபெற்ற உன்னையறிந்தால் என்ற கருத்தரங்கில் மிக அருமையாக பேசியிருந்தார். நான் பார்த்த உதாரணத்தை சொல்ல விரும்புகிறேன் என்றார். தத்துவ அறிஞர் ஜே.கே, ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி, சென்னை வசந்த விஹாரில் நடந்த நிகழ்ச்சியில், நிகழ்ச்சி முடிகின்ற தருவாயில் கேள்வி பதிலுக்கு விளக்கம் தருவார். அப்போது 35 வயது மதிக்கத்தக்க இளைஞன் எழுந்து அவரிடம் கேள்வி கேட்டான். நான் சிறு வயதிலிருந்து ஓவியர் ஆக வேண்டும் என்ற ஆசை, ஆனால் தற்போது வரை, அது ஆகவில்லை. பெரியவர்கள், பெற்றோர்கள் ஓவியத்தில் புத்தி போடாதே என்றார்கள். கல்வியில் போடு, படிக்கணும் என்றார்கள். தொழிற்கல்வி செய், நல்ல வேலை கிடைக்கும் என்றார்கள் அதையும் முடித்தேன். நிறைய சம்பாரி என்றார்கள், சம்பாரித்தேன். நான் தற்போது பள்ளியிலே படித்து, கல்லூரி முடித்து, நல்ல வேலை மற்றும் கல்யாணம் ஆகி. வயது 35 ஆகிறது. என்றைக்கு நான் என் மனம் விரும்பிய காரியத்தை, ஓவியத்தை செய்ய போகிறேன். ஏன் நான் அடுத்தவர்களுக்காக ஏன் வாழ்ந்து கொண்டிருக்கிறேன் எனக்காக வாழக் கூடாதா? அந்த கேள்வி. நாம் அனைவருக்கும் இருக்கும் கேள்வி. நான் கேட்க வேண்டிய கேள்வி அந்த இளைஞன் கேட்டான் என்று நினைத்தேன். ஜே.கே புன்னகைத்து பதில் தந்தார். இளைஞனே நீ தூக்கம் வரும்போது தூங்குகிறாயா? ஆமாம் ஐயா தூங்குகிறேன். பசிக்கும் போது சாப்பிடுகிறாயா? ஆமாம் சாப்பிடுகிறேன். உன்னுடைய பசி வந்தால் சாப்பிடுகிறாய், தூக்கம் வந்தால் தூங்குகிறாய், உண்மையாக ஓவியம் வரைய வேண்டும் என்ற உணர்வு உன்னிடம் இருந்தால் வரைந்திருப்பாய். சாக்கு சொல்வதை நிறுத்திக்கொள் என்று சொன்னார்.

அந்த இளைஞனை போன்று. நம் மனதிலும் ஏதோ ஒரு


கனவு நம்மை துரத்தி கொண்டு இருக்கலாம். கனவு நம்மைத் தாண்டி சமுதாயத்திற்கும் நன்மை தரவல்லாததாக இருக்க வேண்டும். நான் வெளி ஊருக்கு வேலைக்கு போகிறேன் என்று சொன்னேன், உள்ளூரில் தொழில் தொடங்குறேண்ணு சொன்னேன் எங்கள் வீட்டில் கேட்கவில்லை. சிலர் வெளிநாட்டுக்கு போகமாட்டேன் என்று சொன்னேன் கேட்கவில்லை என்னை வெளிநாட்டுக்கு அனுப்பிட்டாங்க. கணவன் - மனைவியோ, மனைவி - கணவனையோ, பிள்ளைகள் பெற்றோர்களையோ - பெற்றோர் பிள்ளைகளையோ காரணம் காட்டி கொண்டு, சாக்கு சொல்லி கொண்டிருக்கலாம்.

நாம் தற்போது இருக்கும் நிலை மாற வேண்டும் அல்லது இருக்கும் தளத்திலே உயர்ந்த இடத்தை அடைய வேண்டும் என்று எண்ணலாம். நம் வாழ்க்கையில் திருப்பு முனைகள் ஏற்பட்டு விடாதா என்று காத்து கொண்டு இருக்கலாம். வீட்டில் நம்முடைய கனவு - உரிமைகளுக்காக தொடர்ந்து குரல் கொடுக்காவிட்டால். நாம் நம்முடைய சமுதாயத்திற்கு, நாட்டுக்காக எப்படி குரல் கொடுப்போம். “அழுத பிள்ளை பால் குடிக்கும்” என்ற பழமொழி இருக்கிறது. இதை “கேளுங்கள் தரப்படும்” என்று சொல்லலாம். இன்று வேண்டாம் என்று சொன்னவர்கள். ஒரு நாள் சரி என்று சொல்லலாம். அது நாளையாக கூட இருக்கலாம்.

சாலை பயணம் போகப்போகிறாம் என்றால் எங்குப்போக வேண்டும் என்ற முடிவு எடுத்தப் பின் தான் செல்கிறோம், சாலையில் உள்ள சமிக்கையில் சிகப்பு, மஞ்சள், பச்சை விளக்கு இருக்கும். அதை (நில், கவனி, செல் என்று சொல்லலாம்). அதற்கு தகுந்தவாறு நாம் சாலையில் நின்று, கவனித்து கடந்து செல்வோம். மற்றும் வழிகாட்டிகள் துணைக் கொண்டு தான் நம்முடைய இலக்கு நோக்கிச்செல்வோம், வழிதவறிவிட்டால்,அருகில் இருப்பவர்களிடம், கேட்டு நாம் நம்முடைய இலக்கை அடைவோம்.

மேலும் சொல்ல வேண்டும் என்றால், உதாரணத்திற்கு சாலை பயணத்தை எடுத்து கொள்வோம், சாலை பயணத்தில், ஆங்காங்கே போக்குவரத்து மேலாண்மைக்காக, சமிக்கை (சிக்னல்), மற்றும் வழிகாட்டிகள் வைத்திருப்பார்கள். சமிக்கையில் சிகப்பு, மஞ்சள், பச்சை விளக்கு இருக்கும். அதை (நில், கவனி, செல் என்று சொல்லலாம்). அதற்கு தகுந்தவாறு நாம் சாலையில் நின்று, கவனித்து கடந்து செல்லலாம். நாம் நம்முடைய வாழ்க்கை பயணத்தையும், ஆறு மாதம் - ஒரு வருடம் ஒருமுறை. நின்று, கவனித்து, செல்ல வேண்டும். தொடர்ந்து நேராக, வலதா, இடதா மற்றும் யூ-டர்ன் (U-Turn) என்று முடிவு செய்ய வேண்டும்.

நாமும் நம்முடைய வாழ்க்கை பயணத்தில் சரியாக போகிறோமோ? என்று தொடர்ந்து கண்காணிக்கலாம். ”தவறான பாதையில் எவ்வளவு தூரம் சென்றிருந்தாலும் சரி திரும்பி வா” என்று சொல்வார்கள். தற்போது பயணிக்கும் பாதையில், நம்முடைய வாழ்க்கை இலட்சிய கனவுக்கு தேவையான தகுதியை வளர்த்து கொண்டே வர வேண்டும். நாம் தற்போது இருக்கும் நிலையை - வந்த பாதையை கண்டு வருத்தப்பட தேவையில்லை. இது நாள் வரை கிடைத்த அனுபவத்தை, நம்முடைய இலட்சிய கனவுகளில் பயன்படுத்தி வெற்றி பெறுவோம். அனுபவமே சிறந்த ஆசான் என்பார்கள்.



தற்போது உலகம் சுருங்கிவிட்டது. நாமும் நம் மனசும் சேர்ந்து சுருங்கி விட்டது.

“நாம் கோடிக்கணக்கான மக்களைக் கொண்ட ஒரு நாட்டுக்குச் சமமாக சிந்தித்துச் செயல்பட வேண்டும். லட்சக் கணக்கான மக்களைக் கொண்ட ஒரு நாட்டுக்கு சமமாக அல்ல. கனவு காணுங்கள், கனவு காணுங்கள், கனவு காணுங்கள்”. டாக்டர் அப்துல் கலாம் ஐயா வின் பொன் மொழிகள். திருப்பு முனைகள் என்ற புத்தகத்தில் இடம் பெற்றிருந்தது.

நாம் பெரும்பாலும் குடும்பத்திற்க்காக சிந்திக்கிறோம் சுமை அதிகமா தெரிகிறது. நாம் நம்முடைய சமுதாயத்திற்கு சேர்த்து சிந்திக்கும் போது சுமை அதிகம் தான், எனினும் பலர் நன்மை அடைவதால் சுமை - மனசு ஆக மாறுகிறது, “மனம் இருந்தால் மார்க்கம் உண்டு” மனசு விரிவடையும் போது, நம்முடைய தேவைகளை எளிதில் அடைய முடியும். மற்றவர்கள் தேவையை தீர்க்க உதவ முடியும். நம்முடைய அணைத்து புற பயணமும் - கொரோனா கிருமி பரவல் காரணமாக தடைபட்டுள்ளது. வளர்ச்சிக்கு மூலம்- நம்முடைய அகம். அகத்தை அறிந்து வெற்றி கொள்வோம்.

அகப்பயணம் உடல், உயிர், மனம் (எண்ணம்) கொண்டுதான் வாழ்கிறோம். தற்பொழுது பலர் சொல்ல கேட்டிருப்போம் “எண்ணம் போல் வாழ்க்கை.” நமக்கு பல மெய்ஞ்ஞானிகள் மனம், எண்ணங்கள் பற்றி விளக்கம் தந்திருக்கிறார்கள், நமக்கு வழிகாட்டினார்கள். அதில் குறிப்பாக வேதாத்திரி மகரிஷியை குறிப்பிட வேண்டும். எண்ணம் பற்றி - எண்ணம் எங்கும் செல்லும் வல்லமையது. எண்ணத்தின் அளவையொட்டியே மனதின் தரமும், உயர்வும் அமைகின்றன. மனதின் அளவில்தான் மனிதனின் தரமும், உயர்வும் உருவாகின்றன. எனவே எண்ணத்தைப் பண்படுத்த வேண்டும். எண்ணத்திற்கு உயர்வூட்ட வேண்டும். எப்படி? எண்ணத்தைக் கொண்டு தான் எண்ணத்தைப் பண்படுத்த வேண்டும். எண்ணத்தின் தன்மையைப் பயன்படுத்தித் தான் எண்ணத்திற்கு உயர்வூட்ட வேண்டும்.

மேலும் எண்ணம் ஆறு வகையான அடிப்படையில் - தேவை, பழக்கம், சூழ்நிலை, பிறர் மனத்தூண்டுதல், தெய்வீகம் (சமுதாய) மற்றும் கறுவமைப்பு அல்லது பாரம்பரியம். எண்ணம் வரலாம் செயல்கள் மலரலாம் என்று விளக்குகிறார். தத்துவ ஞானி ஜேம்ஸ் ஆலன் சொல்லுகிறார் – “நீ இன்று இருப்பதற்கு நேற்று எண்ணிய எண்ணம், இன்று எண்ணிய எண்ணத்தின் விளைவாக நாளை அமையும்”.

தவறான எண்ணங்களையும் மற்றும் செயல்களையும் விதைத்து, ஒரு மனிதன் கடவுள் என்னை ஆசிர்வதிப்பார் என வேண்டுவது, ஒரு விவசாயி களைகளை விதைத்து, கடவுளிடம் எனக்கு கோதுமை வேண்டும் என்று கேட்பதற்கு சமம். என்று தத்துவ ஞானி ஜேம்ஸ் ஆலன் சொல்லுகிறார்


முதலில் மனிதன் தன் எண்ணங்களை மாற்றிக்கொள்ளட்டும். தன்னைச் சுற்றியுள்ள சூழ்நிலையில் எவ்வளவு வேகமாக மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன என்கிற ஆச்சரியமான விஷயத்தை அவன் தெரிந்து கொள்வான். மனிதனின் எண்ணங்களே சூழ்நிலைகளாக மாறுகின்றன.


எண்ணங்களை ரகசியமாக வைத்துக் கொள்ளலாம் என்று மனிதர்கள் நினைக்கிறார்கள். கற்பனை செய்து கொள்கிறார்கள். அது அப்படி நடப்பதில்லை, எண்ணத்தை யாரும் மறைக்க முடியாது. ஏனெனில் எண்ணம் முதலில் பழக்கமாக மாறுகிறது பின் பழக்கம் சூழ்நிலையாக உருவாகிறது.

இரு பெரும் தத்துவஞானிகளின் விளக்கங்களுக்கு இணங்க, நம்முடைய வாழ்க்கை இலட்சிய எண்ணங்களை, கனவுகளை தொடர்ந்து எண்ணி, அதற்கு உரிய சூழ்நிலை பெற்று. அக பயணத்தில் மூலமாக புறப்பயணத்தில் வெற்றி காண்போம். எண்ணத்தை பாலமாக கொண்டு அகத்தின் மூலமாக புறத்தை அடைவோம்.







துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்
@skytamil.lk
மாதந்தோறும் | இதழ் - 21 | 04 ஜூலை 2022



# கவிதையும் நானும்..!

கல்ஹின்னை
பஹ்மி ஹலீம்தீன்

என் கற்பனைகளுக்கு
சிறகு முளைக்கும் போது.
என் உணர்வுகள் ஊற்றெடுத்து
உயிர்பெறும் போது

என் கனவுகளுக்கு நிறம் தீட்டி
அழகு பார்க்கும் போது
என் சந்தோசங்களை
எழுத்துக்களால்
வடித்து வைக்கிறேன்.

என் எண்ணங்களை
எதுகை மோனையோடு
பேச வைக்கிறேன்.
என் தாய்மொழியோடு கொஞ்சம்
உறவாடிக் கொள்கிறேன்.

சில நேரங்களில்....
என் கண்ணீர் துளிகளை
மைத்துளிகளாக்கி
மனம்விட்டு அழுது கொள்கிறேன்.

எனக்குள் வரைந்த ஓவியங்களை
கடதாசித் துண்டுகளில்
கிறுக்கி வைக்கிறேன்.

எனக்குள் இருக்கும் காதலை
பட்டாம் பூச்சிகள் செய்து
பறக்க விடுகிறேன்.
எனக்குள் பூத்த மலர்கள்
வார்த்தை இதழ்களை
உதிர்க்கும் போது
வரிகள் செய்கிறேன்.

ஒவ்வொன்றும் ஒவ்வொரு வடிவில்
பிரசவிக்கும் கவிதைக் குழந்தைகள்.

ஓ...கவிதையே.

என் உள்ளத்தால் உன்னைத்
தொட்டுப் பார்க்கிறேன்.
என் சிந்தையால்
உன்னை சீண்டிப் பார்க்கிறேன்.

இஷ்டப்படும் போது
என் பேனா உன்னோடு
கைகோர்த்துக் கொள்கிறது.
நான் நிம்மதி இழக்கும் போது
எனக்கு நீ ஆறுதலாக இருக்கிறாய்.

நான் அமைதியாக இருக்கும் போது
எனக்குள் நீ நடனமாடுகிறாய்.
ஆதங்கப்படும் போது
ஆக்ரோஷமாய் சொற்களை எரிந்துவிடத்
தூண்டுகிறாய்.

சமூக அவலங்களைக்
காணும் போது சினம் கொண்டு
சீறிப் பாயச் சொல்கிறாய்.
அவ்வப்போது நீ

அன்பின் ஆதரவுக் குரலாக
அநீதிக்கு எதிரான ஆயுதமாக
உணர்வுகளின் ஊடகமாக
எனக்குள் பல அவதாரங்கள் எடுக்கிறாய்.

உன்னை நான் மிகவும் நேசிக்கிறேன்.
என் பேனா மை தீருமட்டுமல்ல.
என் உயிர் இருக்கும் வரை
எனக்குள் நீ என்றும் வாழ்வாய்.

என்றென்றும் வாழ்வாய்...!



# என்னவள்



**பதீ ஹனா**
ஓட்டமாவடி

மண்ணில் புதையுண்டு கிடக்கும் என்னுயிரே,
நீ உறங்கும் இருளில் என் உலகமே இருண்டு
கிடக்குதடி..

மார்பில் முகம் புதைத்து உறங்கிய தருணங்களில்
உன் விரல்கள் தலை கோதிய நிமிடங்கள் என்
வாழ்வில் அத்தனை இன்பமடி..

ஆடி ஓடி வேலை செய்கின்றேன்
அவசர அவசரமாய் சோலிகள் முடிக்கின்றேன்
ஒரு நிமிடம் திரும்பிப் பார்க்கையில் அங்கு
ஒன்றுமே இல்லை என முடங்கிப் போகின்றேன்..

இரண்டாம் கருவறை உன் நிழல் என பூமியில்
அடைகாத்தாய், உன் துயரம் தாழாமல் உடைந்து
போவோம் - என இதுவரை எத்தனை வலிகளைத்
தான் மறைத்திருந்தாய்..

நன்றாய் தான் பேசிக்கொண்டிருந்தோம்,
நாளை விடியலில் என்னென்னவோ
திட்டமிட்டிருந்தேன்..
ஒருபோதும் அந்நாள் அப்படியொரு சேதி
தருமென்று என்னியதில்லையே நான்..

நீயென்ற பெயரில் எனக்காய் வாழ்ந்து மடிந்த
என்னுயிரே, கடைசியில் ஒரு கோப்பை
தண்ணீரை தவிர எதைத்தான்
உனக்காய் செய்யவிட்டாய்...

உன்னையே உருக்கி சிலை வடித்திருக்கிறாய்
என்னை, நானும் கரைந்து தான் போகின்றேன்
நீ மட்டும் இல்லை நிழற்படங்கள் தானே
மீதமிருக்கின்றன...

விரும்பியோ விரும்பாமலோ
நீயில்லா இந்தத் தனிமையை
உடுத்திக்கொண்டேன்..

நிர்க்கதியாய் நிற்கும் வெறுமையை கழற்றி
வீசத்தான் மறுஜென்மம் ஒன்று வேண்டும்
எனக்கு..

எல்லாப் பயணங்களிலும்
என்னையும் அழைத்துச் செல்வாய்,
அன்று ஏனோ ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தாய்
என்னை தனியாய் தவிக்கவிட்டுச் சென்றாய்..

இடம் சென்றதும் விழித்துக் கொண்டால் பயந்து
விடாதே உயிரே உனக்காய் உயர்ந்த என்
கரங்களை ஒருநாளும் இறக்கிவிடமாட்டேன்...

எவ்வளவு தான் சமாதானங்கள் சொல்லி
முடித்தாலும் இந்த மானம் கெட்ட மனசு உடைந்து
தானே கிடக்கின்றது..

மீண்டும் ஒரு முறை
ஒரே ஒரு முறை வேண்டும் நீ எனக்கு,
என் ஆயுளும், உன் ஆயுளும்
கூட்டிப் பிரித்து இருவரும் ஒன்றாய் வாழ்ந்து
ஒன்றாய் மடிந்திடுவோம்...




# பயணம்...

## (கண்டது, கேட்டது, பார்த்தது.)



ஹுபைப் முஸம்மில்.
வடதெனிய.

அம்புலுவாவ கோபுரம் (அம்புலுவாவ பல்லுயிர் பெருக்க வளாகம்) அம்புலுவாவ மலையின் உச்சியில், கடல் மட்டத்திலிருந்து ஏறத்தாழ 1,085 மீற்றர் மற்றும் கம்பளை நகரத்திற்கு 700 மீற்றர் உயரத்தில் அமைந்துள்ளது. இது இலங்கையின் முதல் பல மத சரணாலயமாகும்.

நாத்திசைகளிலும் மலைகள் மற்றும் குளிர்ச்சியான காற்று மற்றும் மேகக்கூட்டங்களிலான இப்பகுதியில் ஒரு நிமிடம் செலவிட விரும்பாதவர் யாரும் இருக்கமாட்டார்கள் என்பது எனது அனுபவம்.

இது மன அழுத்தமான வாழ்க்கைக்கு அமைதியான உணர்வை அளிக்கக்கூடிய அழகிய இடமாகும். பிரமிக்க வைக்கும் 360 பாகை காட்சிக்கோணத்துடன், காட்சியளிக்கும் அம்புலுவாவ கோபுரத்தின் உச்சியில் ஏறும் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

அம்புலுவாவ மலைக்கு கிழக்கே பிதுருதலாகல மலை, மேற்கில் பத்தலேகல (Bible Rock) மலை, தெற்கே சிவனொளிபாத மலை மற்றும் வடக்கே நக்கிள்ஸ் மலைத்தொடர் ஆகியவை பனிமூட்டமற்ற நாட்களில் தெளிவாகத் தென்படக்கூடியதாக இருக்கும்.

இது தவிர ஹந்தான மலை, கடுகன்னாவ மலை, நெல்லிகல மலை, அலகல்ல மலை, ஹுன்னஸ்கிரிய மலை, மொனராகலை மலை (Peacock Hill) போன்ற மலைகளையும் அம்புலுவாவ மலை உச்சியில் இருந்து பார்க்க முடியும். மகாவலி ஆறும் அதை ஒட்டிய வயல்வெளிகளும், மக்கள் குடியிருப்புகளும் இந்த இடத்திற்கு அழகு சேர்க்கின்றன.

அம்புலுவாவ வனக் காப்பகத்தில் பூக்கும் தாவரங்கள், இரமுசு போன்ற உள்ளிட்ட 200 வகையான மூலிகைக் கொடிகள் மற்றும் தாவரங்கள் உள்ளன. அம்புலுவாவ ஒரு உயிரியல் பன்முகத்தன்மை வளாகமாகவும் உருவாக்கப்பட்டது. இந்த மலையானது மகத்தான உயிர் பன்முகத்தன்மை கொண்ட இடமாக அடையாளப்படுத்தப்படுகிறது. அம்புலுவாவ மலை மற்றும் அதை ஒட்டிய காடுகளுக்கு கூட வன ஒதுக்கீடு, அம்புலுவாவ ICC வன ஒதுக்கீடு என பெயரிடப்பட்டுள்ளது. இந்த மலை பெரும்பாலும் ஒரு சிறப்பு வகையான பாறைகளால் ஆனது மற்றும் பாறை அரிப்புக்கு உட்பட்டது என்று கூறப்படுகிறது.

உயிரியல் பன்முகத்தன்மை மற்றும் கற்கள் பற்றிய ஆய்வுகள் இன்னும் தொடர்கின்றன. உள்ளூர் மற்றும் வெளிநாட்டு ஆய்வாளர்கள் தங்கள் ஆய்வுகளை மேற்கொள்வதற்கு அம்புலுவாவ வளாகத்தில் வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

அம்புலுவாவ பல்லுயிர் வளாகமானது கௌரவ முன்னாள் பிரதமர் காலம் சென்ற தி.மு. ஜயரத்ன அவர்களின் திட்டமிடலுடன் நிர்மாணிக்கப்பட்டு 2006 ஆம் ஆண்டு டிசம்பர் 18 ஆம் திகதி, அப்போது இலங்கையின் ஐந்தாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால் பொதுமக்களுக்காக திறந்து வைக்கப்பட்டது. பௌத்த விஹாரை, இந்து கோவில், முஸ்லிம் பள்ளிவாயல் மற்றும் கிறிஸ்தவ தேவாலயத்துடன் கூடிய அம்புலுவாவ பல்லுயிர் வளாகம் இலங்கையின் முதல் பல மத சரணாலயமாகும். அத்துடன் பௌத்த ஸ்தூபியை ஒத்த பெரிய முறுக்கு கோபுரம் அம்புலுவாவ கோவில் வளாகத்தை தனித்துவப்படுத்துகிறது. முன்னாள் பிரதமர் தி. மு ஜயரத்ன அவர்களின் கல்லறையும் இந்த வளாகத்தினுள்தான் (2019) அமையப்பெற்றுள்ளது.

அம்புலுவாவ கோபுரம் சிங்களத்தில் “கோவி ஜன சேயா” (கமநல சேவை) என்று அழைக்கப்படுகிறது. 48 மீற்றர் உயரமுள்ள கூம்பு வடிவ அமைப்பானது, கோபுரத்தின் உச்சிக்கு நடந்து செல்ல அமைக்கப்பட்டுள்ளது அற்புதமான அமைப்பாகும்.



கோபுரத்தின் உச்சிக்கு நடந்து செல்லும் போது அம்புலுவாவ மலையின் உச்சியில் மட்டுமே காணக்கூடிய பிரமிக்க வைக்கும் சூழலைக் காண பல கண்காணிப்பு தளங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. படிக்கட்டுகளில் ஏறும் போது, படிக்கட்டுகளின் அகலம் குறைந்து, சுழல் வடிவம் பெறுகிறது.

**அம்புலுவாவ வரலாறு.**

அம்புலுவாவ மலை இலங்கையின் பழைய தலைநகரான (கி.பி. 1345-1408) கம்பளையில் அமைந்துள்ளது. மன்னர் 4ம் புவனேகபாகு கம்பளை இராச்சியத்தை உருவாக்கினார், மேலும் அம்புலுவாவ சிகரம் இராச்சியத்தின் மையமாக இருந்ததாக கூறப்படுகிறது. ஆனால் வரலாற்று அல்லது தொல்பொருள் மதிப்புகள் எதுவும் இல்லை. இருப்பினும் கி. பி. 14 ஆம் நூற்றாண்டின் சிங்கள மொழி கவிதை ஒன்றை இந்த பாறையையும் அதன் சுற்றுப்புறத்தையும் சித்தரிக்கிறது என கூறப்படுகின்றது.

"விண்மீன்கள் வானத்தில் தங்கள் நிலைகளில் மங்கத் தொடங்கும் போது, பூக்களின் மென்மையான வாசனை இலைகளின் மீது மென்மையாக வீசும் போது சூரியன் முதலில் உதயமாகி, கிழக்கு சிகரங்களில் தனது கதிர்களை வீசும்போது மகிழ்ச்சியான இதயத்துடன் அம்புலுவாவிலிருந்து செல்லுங்கள்." (மயூர சண்டேசா - வசனங்கள் 25 ரூ 26)

**அம்புலுவாவவிற்கு செல்லக்கூடிய வழிகள்.**

1.கொழும்பில் இருந்து பயணிப்பீர்களானால், மாவனல்லையில் இருந்து அம்புலுவாவவிற்கு கினிஹப்பிட்டிய, ஹெம்மாதகம ஊடாக 28.1 கி.மீ ஒரு பாதை உள்ளது, அல்லது பேராதனை மற்றும் கம்பளையை கடந்து 43 கி.மீ. ல் அடைய மிகவும் எளிதானது.

2. கொழும்பில் இருந்து ரயிலில் வரும்போது, வழியில் உள்ள அழகிய சூழலின் அழகை ரசித்துக் கொண்டு கம்பளை ரயில் நிலையத்தில் இறங்கலாம். கொழும்பில் இருந்து பேருந்து மூலமாகவும் கம்பளையை அடையலாம்.


3. கண்டியில் இருந்து அம்புலுவாவ வரை 24.8 கி.மீ. பொதுப் போக்குவரத்தில் வந்தால் முதலில் கம்பளையை அடைய வேண்டும். கம்பளையில் இருந்து அம்புலுவாவ வரை 5.2 கி.மீ. முட்சக்கர வண்டி, பேருந்து என்பவற்றின் மூலமும் செல்லலாம்.

**அம்புலுவாவ திறக்கும் நேரம்.**

வாரத்தின் ஒவ்வொரு நாளும், பிரதான வாயில் காலை 8.30 மணிக்கு திறக்கப்பட்டு மாலை 6 மணிக்கு மூடப்படும். நுழைவாயிலுக்கும் மலை உச்சிக்கும் இடையே உள்ள தூரம் ஏறத்தாழ 2.5 முதல் 3 கி.மீ. நுழைவாயிலில் இருந்து கோபுரத்திற்கு மோட்டார் சைக்கிள், முட்ச்சக்கரவண்டி, கார் அல்லது நான்கு சக்கர வண்டி களை ஓட்டிச்செல்லலாம். அல்லது நடந்தும் செல்லாம். நடந்து செல்லும்போது இளைப்பாறுவதற்கு என இடையிடையே சிறு இளைப்பாறும் இடங்களும் அமைக்கப்பட்டுள்ளன. பேருந்து மற்றும் பெரிய வாகனங்கள் நுழைவாயில் வரையில் மாத்திரம்தான் செல்லலாம்.

அம்புலுவாவ கோபுரத்தைப் பார்வையிட காலை நேரம் மற்றும் மாலை 4 மணிக்கு பிந்திய நேரம் சிறந்த நேரமாகும். நீங்கள் கூட்டத்திலிருந்து தப்பிக்க வேண்டுமென்றால் காலை நேரம் மிகப்பொருத்தமான நேரமாகும். இது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பார்வையாளர்களுடன் பெருகி வழிகின்ற இடமாகும்.

அம்புலுவாவ கோபுரத்திற்கான படிக்கட்டுகளின் உச்சியில் உள்ள மூலையானது சுழல் வடிவில் காணப்படுகின்றமையால் உயரம் செல்ல செல்ல அகல இடைவெளி குறைந்துகொண்டே செல்லும், உயரம் உங்களுக்கு பரிச்சயமற்றதாக இருந்தால் மிக அவதானத்துடன் செல்வது கட்டாயமாகும்.





# கத்தாரில் நடைபெற்ற தமிழ்மகன் அவார்ட்ஸ் 2022 நிகழ்வில் சுகந்தி பிரேம் குமார் Health & Wellness Icon விருது பெற்று கொண்டார்.



திரைகடல் கடந்து சாதித்த தமிழர்களுக்கு மகுடம் சூட்டும் மகத்தான மேடை தமிழ்மகன் அவார்ட்ஸ் 2022 நேற்று கத்தார் அல் அரபி ஸ்டேடியமில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கத்தார், இந்தியா பிரபல நடிகர்கள் கலந்து கொண்டனர்.

சென்னையை சேர்ந்த சுகந்தி பிரேம் குமார் அவர்களுக்கு Health & Wellness Icon எனும் விருது கிடைக்கப் பெற்று கௌரவிக்கப்பட்டது.

இவர் கத்தார் மற்றும் இந்தியாவில் தனது சேவையை செய்து வருகின்றார். மேலும் கத்தாரில் பெட்மிட்டன் குழுவை ஆரம்பித்து செயற்பட்டு வருகின்றார்.






துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்
@skytamil.lk
மாதந்தோறும் | இதழ் - 21 | 04 ஜூலை 2022



# போதை எனும் மாயை



**முஹம்மட் அசாம்**
**சாய்ந்தமருது**

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். உடல் மற்றும் மனதை செம்மையாக வைத்து வாழ்வதே நல்வாழ்க்கையின் பயன் இப்படி எல்லாம் என்னதான் சொன்னாலும் நாங்க கேட்கமாட்டோம். பணத்தை இழந்தால் சம்பாதிக்க முடியும். உடல் நலத்தை இழந்தால் அவ்வளவுதான். போதை வஸ்துக்கள் உடல் நலத்தையும் அதனால் ஏற்படும் நஷ்டத்தையும் தனிமனிதனுக்கு மட்டுமின்றி வீட்டிற்கும் நாட்டிற்கும் தருகிறதே. பல ஆண்டுகளாக நாட்டில் நோய்களும், தற்கொலைகளும், போதை மருந்துகளின் நடமாட்டத்தால் அதிகரித்திருப்பது தாங்க கவலை தரும் விஷயம்.

போதைப் பொருட்களில் மதுபானம், புகையிலை, அபின், ஹெராயின், கஞ்சா, பான் மசாலா, போதை தரும் இன்ஹேலர்கள் என பல வகைகள் அடங்குதுங்க. மக்கள் சமுதாயத்திற்கும், ஆரோக்கியத்திற்கும் எதிராக உலகளாகிய அளவில் எழுந்திருக்கும் பிரச்சனைதான் இந்த போதைப்பொருட்கள்.

போதைப் பொருட்களினால் தனிமனிதன், குடும்பம், சமுதாயம் என எல்லா வகைகளிலும் பாதிப்புகளே ஏற்படுகின்றன.தன் சிந்தனையை போதையில் புதைத்து மன மயக்கத்தையும், குழப்பத்தையும் தன்னைத்தானே மனிதன் ஏற்படுத்திக் கொள்கின்றான்.

பள்ளிப் பருவத்திலோ அல்லது கல்லூரிகளிலோ படிக்கும் போது தீய நண்பர்களோடு ஏற்பட்ட பழக்கங்களினாலும் மற்றும் பொழுதுபோக்காகவும் பழகி கொண்ட பழக்கத்தை இன்று வரை விட்டு மீளமுடியவில்லை என வருத்தப்பட்டுக் கொள்பவர்களும் இருக்கிறார்கள். பலமுறை இத் தீய பழக்கங்களை விட்டொழிக்க வேண்டும் என முயற்சி எடுத்து தோற்றுப் போனவர்களும் இருக்கிங்க. ஒன்றைத் தவிர்க்க மற்றொன்றை பயன்படுத்தி அதையும் சேர்த்து அடிமையாகிக் கொண்டவர்களும் இருக்காங்க. கடின வேலை செய்பவர்கள் தங்கள் உடல் வலி மறந்து இருக்கவும் போதையைப் பயன்படுத்துகிறோம் என்றும் சொல்லுறாங்க. நிச்சயம் ஒரு நாள் மரணம் உண்டு, இதை விட்டு ஒழித்தால் மட்டும் மரணமின்றி வாழ்ந்துவிடலாமா? என தனக்குத் தானே ஆறுதல் கூறிக்கொண்டு தொடர்பவர்களும் இருக்கிறாங்க.

இத்தகைய போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்களின் குடும்ப வாழ்க்கை, சமுதாய அந்தஸ்து, அலுவலக வேலை, நட்பு, உறவினர்கள் மற்றும் தொடர்புகள் என எல்லாவற்றிலும் விரிசல் ஏற்பட்டுவிடுகிறது. போதைக்கு அடிமையாகி இளமையிலேயே இறந்துவிடும் குடும்பத் தலைவனால் அக்குடும்பமே சிதைந்து சீரழிந்து போகுதுங்க. குழந்தைகளுக்கு அன்பு, அரவணைப்பு மற்றும் வழிகாட்டுதல் கிடைக்காமல் அவர்களின் எதிர்காலமும் கேள்விக் குறியாகிவிடுகிறது .

என்ன சொல்லுறீங்க இவ்வளவு பிரட்சனையும் நமக்கு தேவையா? இனியாவது இத அடியோட விட்டுவோமா ?



# யார் சிறந்த நண்பர்கள்? யார் போலி நண்பர்கள்?



ரவீனா ரவிச்சந்திரன்
நுவரெலியா

இக்காலத்தில் உள்ள இளைய சமூகத்துக்கு நட்பு வட்டாரங்கள் அதிகமாகவே உள்ளது என்றால் அது நிதர்சனமான உண்மை ஆகும். ஆனால் எல்லா தோழர்களும் நல்ல நேர்மையான நிஜமான நண்பர்களா என்று ஒரு வினா எழுப்பினால் அதற்கு விடையாக பெரும்பாலும் அமையுவது "இல்லை" அல்லது "யாருக்கு தெரியும்" என்றே கூறுவார்கள். சரி நான் நேராக விடயத்துக்கு வருகின்றேன். இக்கால சகோதர சகோதரிகளுக்கு கீழே குறிப்பிடும் விடயங்கள் மிகவும் உதவியாகவும் பயனுள்ளதாகவும் இருக்கும் என நம்புகிறேன்.

**யார் சிறந்த நண்பர்கள்?**

1, நம்முடைய இலட்சியத்தை அவர்களின் இலட்சியமாக எடுத்துக்கொண்டு நமக்கு எல்லா வழிகளிலும் உதவியாக இருப்பார்கள்.

2, பெரியோர்கள் கூறுவார்கள் அரசவைக்கும், மயான இடத்துக்கும் யார் வருகிறாரோ அவரே சிறந்த நண்பர்கள் என்பார்கள். அதாவது நம்முடைய இன்பம், துன்பம் எந்த நிலையிலும் அவர்கள் கூடவே இருப்பார்கள். எல்லா கஷ்ட நஷ்டத்திலும் பங்கு கொள்வார்கள்.

3, நாம் முதலில் தோழர்களை தேர்வு செய்யும் பொழுது நம் கலாச்சாரத்துக்கும், பழக்க வழக்கத்துக்கும் பொருந்தி போகிறவர்களாக இருப்பவர்களை மட்டும் தெரிவு செய்ய வேண்டும்.

4, நாம் நம்மை அறிதோ அல்லது அறியாமலோ செய்யும் தவறுகளை கூட நல்ல தோழர்கள் நல்ல ஆசாணை போல நம் பக்கம் இருந்து நமக்கு புத்தி சொல்லி சரியான பாதைக்கு அழைத்துச் செல்வார்கள்.

5, எச்சூழ்நிலையிலும் பிறரிடம் நம்மை விட்டு கொடுக்காமல் பேசி சரி என்ற நேரத்தில் நமக்காக அவர்களும் போராடுபவர்களாக இருப்பார்கள்.

6, நாம் ஒரு முக்கியமான ரகசியத்தை நம் தோழர்களிடம் கூறினால் அதை உயிர் போகும் நேரத்திலும் காப்பாற்றி தன் இதயத்துக்குள் பூட்டி வைக்க கூடியவர்களாக இருப்பார்கள்.

7, உயரிய சிந்தனைகளையும் பெறுமதியான கருத்துக்களையும் வழங்குபவர்களாக அவர்கள் இருப்பார்கள்.

8, வாழ்வில் மனம் உடைந்து நாம் போகும் பொழுதும் கூட" இதுவும் கடந்து போகும். எப்பொழுதும் நான் உன் கைகளை பிடித்துக் கொண்டு உன் கூடவே இருப்பேன். உனக்காக பிரார்த்திக்கிறேன். உன்னால் மீள வெற்றி பெற முடியும். நீ சாதிப்பாய்" என்று ஆறுதல் வார்த்தைகள் கூறி அந்த பிரச்சினையில் இருந்து வெளியே கொண்டு வருபவர்கள்.

9, நம்மை பற்றி நம் தோழரும் நம் தோழரை பற்றி நாமும் நன்றாக புரிந்து நடக்க கூடியவர்களாக இருப்போம்.

10, நம் உடல் அழகை பார்த்து பழகுபவர்களை விட உள்ளத்தழகை பார்த்து பழகுபவர்களே சிறந்த தோழமை ஆகும். அவர்கள் ஒரு பொழுதும் நம் குறைகளை பேசி மனதை உடைத்து சிரித்து ரசிக்க மாட்டார்கள். மாறாக நம் திறமைகளை இனங்கண்டு சரியான பாதையை அமைத்து கொடுப்பார்கள்.

11, திக்கற்று நாம் தனிமையில் நிற்கும் பொழுது நம் அறிவே நமக்கு நண்பனாகுகிறது.

12, நாம் நோயுற்று படுக்கையில் உள்ள பொழுது நம்மை யார் அதிகமாக அன்போடு பார்த்துத்துக்கொள்கிறார்களோ அவர்கள் தான் அவ்விடத்தில் நமக்கு சிறந்த நண்பர்கள் ஆகுகிறார்கள்.

13, மரணத்துக்கு பிறகு நாம் செய்த நல்ல பெறுமதியான தர்மங்களே நமக்கு சிறந்த நண்பர்கள் ஆகுகிறது.

14, எது எவ்வாறாக இருந்தாலும் ஒரு மனிதனின் தலை சிறந்த நண்பர்கள் அவருடைய பத்து விரல்களே ஆகும் என்கிறார் ஜேம்ஸ் ஆலன்.

**யார் போலியான நண்பர்கள்?**

1, அவர்களுடைய தேவைக்கு மட்டுமே நம்மை நாடுவார்கள். அவர்கள் தேவைகள் தீர்ந்த பின் நம்மை விட்டு தூரமாக விலகியே இருப்பார்கள். பிறகு யாதாயினும் தேவைகள் நேரும் பொழுது நம்மை தேடி வருவார்கள். இதுவே அவர்கள் பழக்கமாக இருக்கும். அதாவது சந்தர்ப்ப வாதிகளாக காணப்படுவார்கள்.

2, நாம் என்ன நல்ல விடயங்கள் செய்தாலும் அதில் ஒரு குறைக் கூறி நம் மனதை அதிகமாக நோகடித்து ரசித்து மறை முகமாக நாம் அழும் முகத்தை பார்த்து சிரிப்பார்கள்.

3, நம் வார்த்தைகளுக்கு மதிப்பு கொடுக்காமல் அலட்சியம் செய்து நகைப்பர்கள். கேலி பேசுவார்கள்

4, நம்மிடம் பிறரை பற்றி அதிகம் குறை பேசுவார்கள். அதே போல நம்மை பிறரிடம் சென்று அதே போலவே குறை பேசுவார்கள். நாம் அவர்களிடம். ஒரு ரகசியம் பேசினால் அதை யாரிடமும் கூற மாட்டேன் என்று நம்மிடம் போலியாக உறுதி செய்து விட்டு அவ் ரகசியத்தை அனைவரிடமும் வெளிப்படுத்தி விடுவார்கள். ஆனால் நம்மிடம் அதை தான் சொல்லவே இல்லை என்று வீண் வாதம் புரிவார்கள்.

5, நாம் சாதிக்கும் பொழுது எல்லோரும் பாராட்டுவார்கள். ஆனால் நாம் தோழர் என்று நினைத்து கொண்டிருப்பவர்களோ சாதாரணமாக ஒரு வார்த்தையில் வாழ்த்துவார்கள். அல்லது நம் வெற்றியை பொறுத்துக் கொள்ள முடியாமல் வேறொருவரை நம்முடன் ஒப்பிட்டு நம்மை தாழ்த்தி பேசுவார்கள்.

6, நாம் மகிழ்ச்சியாக இருக்கும் பொழுது நம் போலியான தோழர்கள் வேண்டும் என்றே நம் கடந்த கால கசப்பான விடயங்களை நினைவுப்படுத்தி நம்மை கவலையடையச் செய்வார்கள்.

7, நாம் கவலை அடையும் பொழுது அவர்கள் மனதுக்குள் மகிழ்வார்கள். ஆனால் வெளியில் போலியாக நடிப்பார்கள்.

8, நாம் ஒரு நாள் பாடசாலைக்கு போக வில்லை என்றாலும் அல்லது வேலைக்கு போக வில்லை என்றாலும் அன்று நடந்த சம்பவங்கள் அல்லது முக்கியமான தகவல்களை நமக்கு முழுமையாக வழங்க மாட்டார்கள். குறைவான அல்லது போலியான தகவல்களை மட்டுமே வழங்குவார்கள்.

9, நாம் அவர்களை விட அதிகமாக வேலை செய்து விட்டாலோ அல்லது உயர் அதிகாரியிடம் பாராட்டு பெற்று விட்டாலோ நம் நண்பர் என்று சிந்தித்து வைத்துள்ள போலியான தோழர்கள் நம் மீது கோபம் கொள்வார்கள். அல்லது நம்முடன் பேசாமல் அமைதியாக இருந்து விடுவார்கள். இனி வரும் காலத்தில் இது போன்று இவரை வெற்றி பெற விட கூடாது என்று நினைத்து நம்மை வேறு வித பொழுது போக்குகளில் ஈடுபட வைத்து விட்டு அவர்கள் நம்மை விட முன்னோக்கி செல்ல திட்டம் போடுவார்கள்.

10, நாம் சிறு தவறு செய்தாலும் நம் கூடவே இருந்து கொண்டு மறைமுகமாக பிறரிடம் நம்மை வெளிப்படுத்தி காட்டி கொடுப்பார்கள்.

11, கூடாத வார்த்தைகளை நமக்கு வார்த்தை மூலமோ அல்லது செயலின் மூலமோ சொல்லி காட்டி நம்மையும் அதற்கு அடிமையாக்குவார்கள்.

12, நம்மை நன்றாக நம்ப வைத்து இறுதியில் நமக்கு மிகப்பெரிய ஏமாற்றத்தை கொடுத்து விட்டுச் செல்வார்கள்.

எனவே நண்பர்கள் எல்லோருக்கும் அமைவது பொதுவான விடயம் தான் ஆனால் சிறந்த தோழர்கள் நமக்கு அமையுவது என்ம்பது மிகப்பெரிய பரிசு ஆகும். நாம் தேர்ந்தெடுக்கும் ஒவ்வொரு நண்பர்களும் நம் வாழ்வின் ஒவ்வொரு புத்தகம் ஆவார்கள். ஆகவே சிறந்த தோழர்களை நாம் தெரிவு செய்து வாழ்வின் வெற்றி சிகரத்தை பெறுவோம். சிந்தித்து செயல் படுவோம்.

நன்றி.



# வசந்தம்

பூக்களுக்கு வசந்தம் பிறந்தது தூறும்
மழையினிலே....
பூமகளுக்கு வசந்தம் பிறந்தது பூவது
மலர்கையிலே....

இரவுக்கு வசந்தம் பிறந்தது நிலவின்
வருகையிலே....
நிலவுக்கு வசந்தம் பிறந்தது பௌர்ணமி
வருகையிலே....

உழவனுக்கு வசந்தம் பிறந்தது பாரிய
மழையினிலே....
உலகத்தவருக்கு வசந்தம் பிறந்தது உழவனது
உழைப்பினிலே....

கடலுக்கு வசந்தம் பிறந்தது நுரைகொண்ட
அலைகளினாலே....
கரையிற்கு வசந்தம் பிறந்தது அலை கொண்டு வரும்
முத்துக்களினாலே....

தாயிற்கு வசந்தம் பிறந்தது சேயினது
புன்சிரிப்பினிலே....
சேயிற்கு வசந்தம் பிறந்தது தாயினது
அரவணைப்பினிலே....

ரசிகனுக்கு வசந்தம் பிறந்தது கவிஞனின்
கவிதைகளை படிப்பதினாலே...
எனக்கு வசந்தம் பிறந்தது கவிதையதை
எழுதுவதினாலே....

**பாத்திமா ரிஸ்மினா**
கொழும்பு பல்கலைக்கழகம்

# பொருநை நதியின் கரைதனிலே

சலசல என ஓடியதே பொருநை நதி
பொல பொல வென விடிய ஆரம்பிக்க
தகதக வென தகித்ததே ஆதவன்
அட அட இது எத்தனை அழகு. !

கலகல என சிரிப்பொலி கேட்க
கடகட என திருப்பிப் பார்க்க
ஜல்ஜல் என சலங்கை ஒலியுடன்
தள தள என தோழி வரவுமே !

சரசர வென ஊர்ந்த பாம்பை
விறுவிறு வென விலகிச் சென்றே
கடகட வென்றே ஆற்றில் இறங்கி
வழு வழு வென்ற கூழாங்கல் மிதித்து
நடுநடுங்கி குளிர் நீரில் குளித்தேனே !

**கவிஞர்.நா. வளர்மதி அசன்**
தலைமை ஆசிரியை
கல்லிடைக்குறிச்சி

# நெஞ்சம் மறப்பதில்லையே..!

கூத்து.. ஆதி கிழக்கு பாடி சொல்ல பாட்டி
சொன்ன கதை போல் காட்சி காணும் கண்கள்
காலம் கரைந்து ஓடினாலும் அப்போது கண்
கண்ட விம்பத்தை சீக்கிரம் மறந்து விடுமா...

காட்டு வழி வரை மேலே நாற்று வைத்த
வாழையை சுற்றி ஊராரும் விழித்து கொள்ள
கூத்து குதுகளாமாய் நடக்குமே
நாட்டிய பாதங்கள் இன்னும் என் நெஞ்சில் சல
சல வென தாளம் போடுகிறதே...

சேலை சிகை அலங்காரம் வாய்மேல்
கைவைத்து வளந்தோர் புறம் பேசி காட்டு
கடுவனை போல சிறு எரும்புகள் சுத்தி திரிய
நெற்றி மீது பட்டு கட்டி எட்டு கட்டையில் பாட்டு
படிப்பார் கத்தி....

மார்கழி தொடங்கும் கூத்தினிலே மன்மதன்
போல் எவர் உண்டோ ஊர் பழி சொல்ல ஓர்
பழியோடு கதை முடிவுருமே முன் பள்ளி
செல்வோரும் கண்ணீர் விழி வருமே....

பாரதி கண்டால் போதும் புது கூத்து புராணம்
படைத்து இருப்பார் மலைய மக்களுக்கு
மலையக பாரதியாய் ஒரு
காட்சி சிந்தனை....

கவிஞர்.
**ரா.லோககிருஸ்ணகுமார்**
புஸ்ஸல்லாவ

# இன்றே துணிந்தெழு

உளி கண்ட பாறை வழிகளை தாங்கி
பொறுமை கொண்டதால் தான்,
அது கூட ஒரு நாள்
அழகான சிற்பமாய் வடிவமைகிறது
வானை நோக்கி ஆகையால், உன்னை!,
நாளை மண்ணில் விதைக்க
பொறுமை கொண்டு போராட
நீ இன்றே துணிந்தெழு

தாழ்த்தி பேசுபவனும் வீழ்ச்சி செய்பவனும்
எம்மை சுற்றி ஏராளம், ஆகையால்,
காய்க்கும் மரங்களுக்கே கல்லடி ஆயின்,
தலைகுனிந்து ஏமாறாமல்
தாழ்த்தி பேசுபவனின் தலையை கிள்ளி
உன் வாழ்வில் நிமிர்ந்தெழ
நீ இன்றே துணிந்தெழு

சுடர் விடும் தீப்பொறியில் விழுந்து தண்ணீரில் மூழ்கி
குளித்தெழுந்தால் தான் பொன் கூட நகையாய்
மாறுகின்றது ஆகையால் வலிகளை வீழ்தெரிந்து
தரையில் தனியாய் முளைத்தெழு
நாளை உனக்கான மாலையை நீ சூட காத்து ...,
நீ இன்றே துணிந்தெழு

தன் அலகை உடைத்து அதன்,
தடித்த இறகை கிழித்து
தானே மறுபிறவி கொள்ள
வேதனையையும் சோதனையையும் சாதனையாக்க
துடிக்கும் கழுகிடம் கற்றுக்கொள்
தன்னம்பிக்கையை ஆகையால்,
வெற்றிப்பாதையை தேடி
துணிச்சலுடன் செல்ல
நீ இன்றே துணிந்தெழு

**சௌம்யா ஷா**
மாவத்தகம,குருணாகல.



# வா எழுந்திடு

உனக்காக வாழ இங்கு உன்னால் மட்டுமே முடியும், உன் இலக்குகளை அடைய உன்னால் மட்டுமே முடியும், வா எழுந்திடு, உன்னுடன் சிரித்தவர்கள் எவரும், உன்னுடன் சேர்ந்து அழப் போவதில்லை,

உனக்காக ஒரு போதும் இந்த காலமும் காத்துக் கிடக்கப் போவதில்லை, வா எழுந்திடு, கடந்து வந்த பாதையை திரும்பிப் பார்க்காமல், கடக்கப் போகும் பாதையை எட்டிப் பார்.


உன்னை உற்சாகப்படுத்தியவர்களை விட்டு விட்டு, உன்னை உதாசீனப்படுத்தியவர்களை எண்ணிப்பார். வா எழுந்திடு,கதைக்க இங்கு ஆயிரம் வாய்கள் இருந்தாலும்,அடி வைத்து அடி நகர இங்கு ஒரு கால்கள் கூட கிடையாது.

துரத்த இங்கு பல உள்ளங்கள் இருந்தாலும், வரவேற்க இங்கு ஒரு உள்ளம் கூட இருக்காது. வா எழுந்திடு, கனவுகள் மட்டும் காண்பது போதுமா? அதை நிஜமாக்கிட வேண்டாமா நீ.

உன் கனவுகளையெல்லாம் காட்சிப்படுத்த, உன் நினைவுகளையெல்லாம் நியாயப்படுத்த என்றும் உன்னால் மட்டுமே முடியும்.

வா எழுந்திடு, வறுமை நோய் உன்னை பீடித்துக் கொண்டதா? இங்கு ஜெயித்தவர் எல்லோரும் அதை வென்றவர்கள் தான்.

வா எழுந்திடு, உனக்காக இங்கு நீ மட்டுமே உண்டு, எழுந்து உன் இலக்கை அடைந்திடு வா.



**அகீப் நஸீர்**
கொழும்பு

# சிந்தனைக்கு ஓர் நீர்த்துளி

ஒரு துளி நீர் அது
நிலத்தில் வீழ்ந்தால்
மண் பற்றிக்கொள்கிறது.

அதுவே இலையில்
விழுந்தால் இரசிக்கப்படுகிறது!

மண் தன்னை
தன்மை படுத்த
தனதாக்கிக் கொள்கிறது
அந்த ஒரு துளி நீரை
சுயநலவாதியாய்!

ஆனால் இலையோ
துளியை தாங்கிப்பிடித்துத்
துணிக்கை ஆக்கி
உலகுக்கு அறிமுகப்படுத்தி
இரசிக்க உதவுகிறது.

மனிதர்களும் அவ்வாறுதான்

தாங்கிப்பிடிக்கும்
பொதுநலவாதிகளாக
சிலர் இலையைப்போல்
தட்டிப்பறிக்கும்
சுயநலவாதிகளாக
பலர் மண்ணைப்போல்.

விழும் இடம்
சரியாக இருந்தால்
எழும் இடம்
சிறப்பாக இருக்கும்.



**முஜீபா**
நிந்தவூர்



# புகைப்படத் தொகுப்பு

புகைப்படக் கலைஞர்களுக்கான களம்

## இந்த மாத சிறந்த புகைப்படம்



Fatima Samsudeen - Sainthamaruthu



Zainab Najmudeen
muruthagahamula.



JM.Azeem
Eravur, Batticaloa.



Zeenathul Husniya,
Mavadichenai



M.U.M. Waseem - Thoppur

# இந்த மாத சிறந்த புகைப்படம்



Rikas Kaleel.
Kekunagolla.



Jawsan Ahamed M J
MARUTHAMUNAI



Fathima Rema
Akkaraipattu



F.Binth Al Hudha
Sammanthurai



A.B.Hathil Ahamed
Sammanthurai.



Nufail Ahamed
Nintavur



Jazeel Sameema Farwin
Kanthale




Shamra aneez
Hemmathagama



Hafsah Nawfal
Uyanwatta



# பெண் (பிள்ளை)களும் இன்றைய சமூகமும்



சிறகின் மொழி
ஷிஹானா நௌபர்...

இன்றைய காலகட்டத்தில் சமூகத்தில் அதிகரித்து வரும் பெண்கள் மீதான துஷ்பிரயோகங்களுக்கான காரணம் என்ன என்பதை சமூகம் என்ற வகையில் நாங்கள் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டிய ஒரு விடயமாக இருந்து கொண்டிருக்கும் அதே நேரத்தில் சமூகத்தில் நடக்கக்கூடிய இந்த மாற்றங்களை எதிர் நோக்கக் கூடிய சவால்களுக்கு தனிநபராக எங்களுடைய பங்களிப்பு எந்த வகையில் ஏற்படுகின்றது என்பதையும் நாங்கள் தெரிந்திருக்க வேண்டும்.

பெண் என்பவள் யார் என்று கேட்கும் போது வெறும் கவிதையிலும் பாடல் வரிகளிலும் அவளை மென்மையாக எடுத்து கொள்ளவதை நாங்கள் கவனித்து வருகிறோம் ஆனால் இயல்பான வாழ்க்கையில் ஒரு பெண் எவ்வாறு பார்க்கப்பட்டு வருகின்றாள் என்பதை நாங்கள் பார்ப்போமானால் கவலைக்குரிய விடயமாக இருந்து கொண்டிருக்கின்றது...

ஒரு பெண்ணினுடைய இந்த நிலைக்கு தனிப்பட்ட முறையில் ஒரு பெண் காரணமாக அமையும் அதேவேளை அவளுடைய வளர்ப்பு அவளுடைய பெற்றோர் அவளுடைய சகோதரன் என்று எல்லோருமே உள்வாங்கப்படுகின்றனர்.

முன்னைய காலங்களில் பெண் பிள்ளைகள் பொத்தி பொத்தி வளர்க்கப்பட்டார்கள் தனிமையில் விடப்படவில்லை எப்பொழுதும் ஒரு பெண் பிள்ளையுடன் வயதான ஒருவர் அல்லது அவருக்கு பாதுகாப்பு ஒருவர் இருந்து கொண்டே இருந்தார், அது அவள் மேல் கொண்டிருக்கும் அவ நம்பிக்கைக்காக அல்ல அவளுக்கு வழுங்கப்பட்ட ஒரு பாதுகாப்பாகும் ஆனால் இன்றைய காலகட்டத்தை பார்ப்போமானால் பெண் சுதந்திரம் ஆண்களுக்கு சமமான சம உரிமை பெண்களுக்கு வழுங்குதல் போன்ற கருத்துக்களை முன் வைத்துக் கொண்டு அவர்களை வரையறையின்றி எல்லையற்ற ஒரு வாழ்க்கை பயணத்தை தொடர்ந்து கொண்டிருக்கின்றார்கள். அவரவருக்கு ஏற்றவாறு வாழ்க்கை யாருக்கும் இருக்கலாம் ஆனால் அந்த சுதந்திரமே எங்களுக்கு ஒரு சவாலாக அமையுமாக ஆக இருந்தால் அந்த சுதந்திரம் கேள்விக்குறிதான்.

இன்று பெண்களுக்கான துஷ்பிரயோகம் என்று நோக்கும்போது பிறந்த பெண் குழந்தை முதல் மூதாட்டிகள் வரையும் இந்த சவாலுக்கு முகம் கொடுத்து வருகின்றார்கள்.

சுதந்திரம் என்பது எங்களுடைய மனதளவில் இருக்க வேண்டியதே ஒழிய நாங்கள் நினைப்பது போன்று

ஆண்களுக்கு சமமாக வெளியே செல்வது ஆண்களுக்கு சரிசமமாக அவர்களுடன் பழகுவது ஆண்கள் செய்யக் கூடிய எல்லா வேலைகளையும் எங்களால் செய்ய முடியும் என்று நிரூபிக்க போவது அல்ல சுதந்திரம் உண்மையான சுதந்திரம் எது என்றால் ஒரு மனிதனுடைய உள சுதந்திரமே உண்மையான சுதந்திரமாக இருந்து கொண்டிருக்கிறது ஒரு பெண் பிள்ளைக்கு உள சுதந்திரம் இருக்கும்போது அவள் தன்னுடைய இலக்கை அடைவதற்கு உறுதுணையாக அமைகின்றது. ஆனால் இன்று சுதந்திரம் என்ற பெயரில் அவர்கள் தனக்கு நினைத்ததை செய்வது என்று எண்ணிக் கொண்டிருக்கின்றனர்.

பெண்களுக்கு சம உரிமை இருக்க வேண்டும் அவர்களுக்கும் லட்சியங்கள் கனவுகள் ஆசைகள் வாழ்க்கையில் இலக்குகள் அவர்களுடைய வாழ்க்கைக்கு ஒரு அர்த்தம் தேடிக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு இருக்கும் நிச்சயமாக அதை அடைய வேண்டும் ஆனால் அதை அடைவதற்கு சில வழிமுறைகள் இருக்கின்றன எப்படியும் வாழலாம் என்று வாழ்க்கை அல்ல வாழ்க்கை இப்படித்தான் வாழ வேண்டும் என்று அழகான நெறிமுறைகள் இருக்கின்றன.

கலாச்சார மாற்றம், கலாச்சாரத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் என்ற பெயரில் கலாச்சாரம் என்ற வார்த்தையை அழிந்து போகும் அளவிற்கு இன்றைய நவீன விடயங்கள் அமைந்திருப்பது கவலைக்குரிய விடயமாக இருந்து கொண்டிருக்கின்றது. எத்தனையோ புதுமைகள் தோன்றியுள்ளன புதியவையாக மாறி உள்ளன எனினும் இந்த நிலையில் சில விடயங்கள் பழைய விடயங்களை கடைபிடிப்பதில் ஒரு பாதுகாப்பான அழகான ஒரு வாழ்க்கை இருக்கின்றது என்பதை இன்றைய பெண் பிள்ளைகள் உணர்வதில்லை..

ஒரு பெண் பிள்ளையின் வளர்ப்பு அவள் பிறந்தது முதல் துவங்குகின்றது பெற்றோராக எங்களுக்கு பெண் பிள்ளைகளின் வளர்ப்பில் ஒரு பாரிய கடமையும் பொறுப்பும் காணப்படுகின்றது என்பதை நாங்கள் உணர வேண்டும் பெண் பிள்ளைகளை உயிருடன் குழி தோண்டிப் புதைக்கப்பட்டனர் ஆனால் பெண்ணும் ஒரு உயிர்தான் என்று மதிக்கப்பட்டு அவருக்கும் மதிப்பளித்து இந்த சமூகத்தில் ஒரு இடம் கொடுத்து அவருடைய உணர்வுகளுக்கும் ஆசைகளுக்கும் இடமளித்து அவளை சமூகத்தில் ஒருவராக ஏற்று நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த காலகட்டத்தில் மீண்டும் பெண் எவ்வாறு நோக்க படுகிறாள் என்பது கேள்விக்குறியாக மாறி வருகின்றது.

அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு என்ற குணங்களை எல்லாம் பெண்ணுக்கு வர்ணனைக்கு மாத்திரமே கூறிக் கொண்டு இருக்கின்றோம் நாம்,ஆனால் அந்த அத்தனை அம்சங்களும் ஒரு பெண்ணுக்கு எவ்வளவு அழகு சேர்க்கின்றது ஒரு பெண்ணை எவ்வாறு எடுத்துக் காட்டுகின்றது என்பதை இன்றைய பெண்கள் இழந்துள்ளார்கள் என்பதே நிதர்சனமான உண்மையாக இருந்து கொண்டிருக்கின்றது.

(தொடரும் )



துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்
@skytamil.lk
மாதந்தோறும் | இதழ் - 21 | 04 ஜூலை 2022




ஷிஹானா நௌபர் B.Sc. in Psychology UG (IOU) துணிந்தெழு - நிர்வாகக் குழு உறுப்பினர்

# சமாதான நகரமும் எமது பாடசாலையும்

## பண்டாரவளை சேர் ராசிக் பரீட் மகா வித்தியாலயத்தின்

## அண்மைக்கால வளர்ச்சிப் படிகள்... (ஒரு சுருக்கப் பார்வை)







பண்டாரவளை மாநகரத்தில் முஸ்லிம் சமூகத்தின் கல்வி வளர்ச்சிக்காக தனியொரு பாடசாலையின் அவசியத்தை உணர்ந்த அக்கால முஸ்லிம் தலைவர்களால் (1952ம் வருடம்) வித்திடப்பட்டு, படிப்படியாக எழுந்து தற்போது ஒரு தேசிய பாடசாலையாக வளர்ந்து நிற்கின்றது அன்றைய சாஹிரா பாடசாலையான இன்றைய சேர் ராசிக் பரீட் மகா வித்தியாலயம். பண்டாரவளை ஜும்மா பள்ளிவாயலுக்குச் சொந்தமான காணியில் முன்னாள் கௌரவ அமைச்சர் அல்ஹாஜ் T.P. ஜாயா அவர்களால் அடிக்கல் நடப்பட்டு 1952ம் ஆண்டு எண்பத்தாறு மாணவர்களுடன் அல்-மதரஸதுல் சாஹிரா எனும் பெயரில் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையின் முதல் தலைமை ஆசிரியராக (1952/09/08) உடதலவின்னவைச் சேர்ந்த M.A.Z. ஆப்தீன் அவர்கள் நியமனம் பெற்றதுடன் முதலாவது ஆசிரியராக அல்ஹாஜ். உபைதுல் சத்தார் (அஸ்ஹரி) அவர்களுடன் எஸ்.மரியம்மாள் என்பவரும் நியமனம் பெற்றிருந்தனர்.

இக்காலகட்டத்தில்... இலங்கை சோனகர் சங்கத்தின் தலைவரும் முது பெரும் அரசியல் வாதியுமான அல்ஹாஜ். சேர் ராசிக் பரீட் அவர்களின் சிபாரிசின் பேரில் 1956ம் ஆண்டு உதவி நன்கொடை பெறும் பாடசாலையாக அங்கீகரிக்கப்பட்டதுடன் சாஹிரா ஆரம்பக் கலவன் பாடசாலை என்று பெயர் மாற்றமும் பெற்றது. இதன் போது பாலர் வகுப்பு முதல் 7ம் வகுப்புவரை வகுப்புக்களும், அதிபருடன் ஐந்து ஆசிரியர்களும் கடமையாற்றி வந்துள்ளனர்.

1963களில் சாஹிரா முஸ்லிம் வித்தியாலயமாக உயர்வு பெற்றுள்ள இப்பாடசாலையில் கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டு பௌதிக மற்றும் ஆளணியினர் கணிசமான அளவு உயர்வடைந்துள்ளமை வரலாற்று தரவுகளிலிருந்து தெரியவருகின்றது.

1972ம் ஆண்டு இந்த சாஹிரா பாடசாலை வெளிமடை வீதிக்கு இடமாற்றம் பெற்று புதிய கட்டிடம், தளபாட மற்றும் மலசலகூட வசதிகளுடன் புதிய பெயருடன் தொடங்கி வைக்கப்பட்டது. அன்றைய கல்வியமைராகவிருந்த அல்ஹாஜ். கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத் அவர்களால் புதிய கட்டிடம் திறந்து வைக்கப்பட்டு சேர் ராசிக் பரீட் முஸ்லிம் வித்தியாலயமாக பெயர் சூட்டப்பட்டது.

1982ம் ஆண்டு இப்பாடசாலையின் அதிபராகக் கடமையேற்ற அல்-ஹாஜ். M.L. தாஜுதீன் அவர்களின் காலம் இப்பாடசாலை வரலாற்றில் பல்வேறு திருப்பங்களையும் மாற்றங்களையும் ஏற்படுத்திய பொற்காலமாகப் போற்றப்படுகிறது.

2006ம் ஆண்டு தாபிக்கப்பட்ட கணனி வளநிலையம், 2007ல் நடைமுறைபடுத்தப்பட்ட JICA செயற்றிட்டம் போன்றவை... ஒருவகையில், இப்பாடசாலையின் எழுச்சிக்கான உந்து சக்திகளாக அமைந்து வந்துள்ளன. மேலும் "நவோத்யா பாடசாலை" – "அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை" போன்ற செயற்றிட்டங்களுக்குள்ளும் காலத்திற்குக் காலம் இப்பாடசாலை உள்வாங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பூர்த்திக்கப்படாத ஏராளமான வளத் தேவைகளுக்கு மத்தியிலும்.... படிப்படியாக எழுந்து, நடந்து வந்துள்ள இப்பாடசாலையின் வளர்ச்சிப் பாதையில், அரசாங்க மற்றும் அரசியல்வாதிகளின் அனுசரணைகளுக்கப்பால்... காலத்திற்குக் காலம் பல்வேறு அதிபர்களும் ஆசிரியர்களும் பெற்றோர் மற்றும் நலன் விரும்பிகளும் தங்களாலான முயற்சிகளோடும் அர்ப்பணிப்புகளோடும் இப்பாடசாலையைப் படிப்படியாக வளர்த்தெடுக்கப் பாடுபட்டுள்ளார்கள்.

இவ்வாறு, இப்பாடசாலையின் வரலாற்றுப் பின்னணி பற்றியும் அதற்காகப் பங்களித்தவர்களின் தியாகங்கள் பற்றியும் இன்னும் நிறையவே எழுதலாம்... இருப்பினும் இப்பாடசாலையின் அண்மைக்கால முன்னேற்றங்கள் பற்றிய விடயங்கள் இங்கு பிரதானமாக சுட்டிக் காட்டத்தக்கவை...

•தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின் படி, 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள் 2016 – 2021 காலப் பகுதியில் 78% இலிருந்து 95% ஆக அதிகரித்துள்ளதுடன், சித்தி பெறும் (Qualified) மாணவர்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்வடைந்துள்ளமை.

•G.C.E. (O/L) பரீட்சைப் பெறுபேறுகளின் படி, ஒட்டுமொத்த சித்தி வீதம் 2016 – 2020 காலப் பகுதியில் 48% இலிருந்து 65% ஆக அதிகரித்துள்ளமை.

•G.C.E. (A/L) பரீட்சைப் பெறுபேறுகளின் படி, ஒட்டுமொத்த




சித்தி வீதம் 2016 – 2020 காலப் பகுதியில் 67% இலிருந்து 81%ஆக அதிகரித்துள்ளதுடன் மாணவர்களின் பல்கலைக்கழகப் பிரவேசம் எழுச்சி கண்டுள்ளமை.

•பண்டாரவளை வலயக் கல்விப் பணிமனையின் வெளியக மதிப்பீடுகளின்படி, பாடசாலையின் பண்புத்தரச் சுட்டெண் 2016ம் ஆண்டு 49% இலிருந்து 2020ம் ஆண்டு (Covid 19 பரவல் தாக்கத்திற்கு மத்தியிலும்) 72%மாக வளர்ச்சி கண்டுள்ளமை.

•பாடசாலையின் மாணவர் எண்ணிக்கைக் கட்டமைப்பு 2016 – 2021 காலப்பகுதியில் சுமார் 21% அதிகரிப்பைக் காட்டியுள்ளமை.

•2018ம் ஆண்டு தேசிய உற்பத்தித் திறன் விருதுப் போட்டிகளில் பங்குகொண்டு முதல் தடவையிலேயே தேசிய ரீதியில் விசேட பாராட்டு விருதினைப் (Special Commendation Award) பெற்றுக் கொண்டதுடன் 2021 தேசிய உற்பத்தித் திறன் விருதுப் போட்டியில் தேசிய ரீதியில் மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டமை.

•2016 – 2020 காலப் பகுதியில் பல்வேறு கலை – கலாசார – விளையாட்டு நிகழ்ச்சிகளில் மாகாண, தேசிய ரீதியான பரிசில்கள், விருதுகளைப் பெற்றுக் கொண்டுள்ளமை.

•பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பாரிய முயற்சியுடனும் பங்களிப்புடனும் 2018ம் ஆண்டு பாடசாலையின் காரியாலயம் முழுமையாக நவீனமயப்படுத்தப்பட்டுள்ளமை.

•SDS மற்றும் PPA பங்களிப்புனும் அனுசரணையுடனும் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு நோக்கம் கருதி பாடசாலை முழுவதும் CCTV Cameraக்கள் பொருத்தப்பட்டுள்ளமை.
•ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு இடைநடுவே கைவிடப்பட்டிருந்த உயர்தர விஞ்ஞான – கணிதப் பிரிவுகள் 2019இல் மீள ஆரம்பிக்கப்பட்டு 2021ம் ஆண்டு முதல்

தொகுதிப் பிள்ளைகள் பரீட்சைக்குத் தோற்றியுள்ளமை.

•2018ம் ஆண்டு பழைய மாணவர் சங்கம் மீளமைக்கப்பட்டதுடன் மாபெரும் வருடாந்த ஒன்று கூடல்கள் கிரிக்கட் சுற்றுப் போட்டிகள் நடாத்தப்பட்டமை.

•2019/2020 உயர்தர மாணவர் செயற்றிட்டத்தின் கீழ் பாடசாலை நுழைவாயிலில் வளைவுப் பெயர்ப்பலகை (Arch Name Board) பொருத்தப்பட்டமை மற்றும் 2021/2022 உயர்தர மாணவர் செயற்றிட்டத்தின் கீழ் பாடசாலையின் விளையாட்டு முற்றம் புனரமைக்கப்பட்டுள்ளமை.

•பாடசாலையில் சிறந்த நூலகக் கட்டமைப்பு, Smart Classroom என்பன முழுமையான மாணவர் பாவனைக்கு விடப்பட்டுள்ளமை.

•கடந்த Covid முடக்க நிலைமைகளின் போது, பாடசாலை நிருவாகமும் PPAயும் இணைந்து வறிய மாணவர்களின் சுமார் 200 குடும்பங்களிற்கு மூன்று சுற்றுக்களில் உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டதுடன்... மாணவர்களின் Online மூலமான கற்றல் – கற்பித்தல் நடவடிக்கைகளுக்காக Smart Phones மற்றும் Internet Data வசதிகள் ஏற்பாடு செய்து வழங்கப்பட்டமை.

•பாடசாலையின் முஸ்லிம் மஜ்லிஸ் வலுவாகக் கட்டமைக்கப்பட்டுள்ளதுடன் அதனூடாக Ramazan வினா விடைப் போட்டிகள் மற்றும் மாணவ – மாணவிகளின் ஒழுக்க மேம்பாடு கருதி Girls/Boysக்கான Islamic Guide நிகழ்ச்சிகள் தொடர்ச்சியாக நடாத்தப்பட்டு வருகின்றமை.

•கல்வித் திணைக்களம், அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், உயரதிகாரிகள் மற்றும் சமூக – சமய நிறுவங்களுடன் வலுவான ஒத்துழைப்புக் கட்டமைப்புக்கள் உருவாக்கப்பட்டுப் பேணப்படுகின்றமை.

•சுகாதார மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சினால் 2019ம் ஆண்டு நடாத்தப்பட்ட "டெங்கு நுளம்புகள் பரவுவதற்கான வாய்ப்பற்ற பாடசாலைகள்" தெரிவுப் போட்டியில் கோட்ட மட்டத்தில் முதலிடம் பெற்றமை...

•பாடசாலை முழுவதும் பொலித்தீன் அற்ற அழகிய சூழல் பேணப்பட்டு வருகின்றமை.

•அரசாங்கத்தின் "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைத் திட்டத்தின் நாடுமுழுவதும் 1000+ தேசிய பாடசாலைகளை நிறுவும் திட்டத்தின் கீழ் பண்டாரவளை நகரின் தேசிய பாடசாலையொன்றாகத் எமது பாடசாலையும் தரமுயர்த்தப்பட்டுள்ளமை.

இந்த அர்ப்பணிப்புமிக்க நீண்ட பயணத்தில் என்னுடன் இணைந்து, பாடசாலையின் வெற்றியையே தமது பிரதான குறிக்கோளாகக் கொண்டு அர்ப்பணிப்போடு செயற்படும் பிரதி






– உதவி அதிபர்களுட்பட அனைத்து ஆசிரியர்கள், ஒத்துழைப்பும் புரிந்துணர்வுமுள்ள பெற்றோர், ஆர்வமுள்ள மாணவர்கள் என்ற பலமான உள்ளகக் கட்டமைப்புடன்...

நிருவாகத்துடன் இணைந்தும் இணங்கியும் செல்லுகின்ற, பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் ஆக்கபூர்வமான மற்றும் வீரியமான செயற்பாடுகளுக்கப்பால்... பழைய மாணவர் சங்கம், பண்டாரவளை ஜும்ஆப் பள்ளிவாசல், சமூக நிறுவனங்கள், ஏனைய சகோதரப் பாடசாலைகள் போன்றவற்றின் ஒத்துழைப்பும் இந்தப் பாரிய வெற்றிகளின் முதுகெலும்பாய் அமைந்துள்ளன.

இந்த சந்தர்ப்பத்தில்... எமது பாடசாலையின் இலக்கு நோக்கிய இந்தச் செயற்பாடுகளுக்கு எப்போதும் கைகொடுத்து ஊக்கமளிக்கின்ற மாகாண – வலய – கோட்டக் கல்விப் பணிமனையின் அதிகாரிகள் அனைவரையும் நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

**தகவல்:**

M.A.C.M. Munawwer – JP.
(BBA, PGDE,SLPS,MEd.-Reading)
Principal,
B/Sir Razik Fareed Maha Vidyalaya (National School)
Bandarawela.

துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்
@skytamil.lk
மாதந்தோறும் | இதழ் - 21 | 04 ஜூலை 2022






# இரண்டரை வயது மின்ஹத் லமியின் உலக சாதனை!

தனது இரண்டரை வயதில், 02 நிமிடங்களில் 120 உலக நாடுகளின் தலை நகரங்களை பிழையின்றி மிக வேகமாகச் சொல்லி உலக சாதனைப் புத்தகத்தில் தன் பெயரை மருதமுனை பகுதியைச் சேர்ந்த மின்ஹத் லமி என்ற சிறுமி பதித்துள்ளார்.

இவ்வுலக சாதனைக்கு அயராது பாடுபட்டவர்கள் மின்ஹத் லமியின் பெற்றோர் அர்ஜூன் அர்மல் – பாத்திமா நுஸ்ஹா ஆவார். மின்ஹத் லமியிட்க்கு இலச்சினை, பதக்கம் மற்றும் சான்றிதழ்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நான்கு வயதிலேயே மிகப்பெரும் சாதனையின் சொந்தக்காரி

எட்டு மாதங்களுக்கு முன்பு உலக அளவில் சாதனை படைத்த, அனத் ஜிதாஹ் அவர்களை அண்மையில் ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பு மற்றும் துணிந்தெழுவின் பணிப்பாளர் ஜே.எம் பாஸித் அவர்கள் சந்தித்து அவருக்கான விருதினையும் பரிசினையும் வழங்கியிருந்த வேளை எடுக்கப்பட்ட புகைப்படம்








# Japanese Language

**OUR SERVICES :**

- → Writing Practice
- → Listening Practice
- → Spoken Practice
- → Japanese Culture
- → Interview Practice
- → JLPT N5 Exam Paper Discuss
- → 04th of December 2022 JLPT Exam Target
- → Online and Offline Classes

**Book your seats now**

**More Details:**
**0772745752**

துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்
@skytamil.lk
மாதந்தோறும் | இதழ் - 21 | 04 ஜூலை 2022







# மாற்றம் எங்கிருந்து தொடங்க வேண்டும்
## (வைரல் புகைப்படம் தொடர்பாக கருத்து பகிர்வு)




முபஸ்ஸிரா அஸ்வர்
கொழும்பு பல்கலைக்கழகம்
துணிந்தெழு ஆசிரியர் குழு


"வாழ்க்கையில் ஒற்றுமையை அனுபவிப்பவன் எல்லா உயிர்களிலும் தன் சுயத்தையும் எல்லா உயிர்களையும் தன் சுயத்திலும் பார்க்கிறான். எல்லாவற்றையும் ஒரு பாரபட்சமற்ற பார்வையுடன் பார்க்கிறான்." என்ற புத்தரின் கூற்றுடன் சமீப காலமாக வைரலாகிய இப்புகைப்படத்திற்குரிய சொந்தக்காரியாகிய நான் சில கருத்துக்களை பகிர்ந்து கொள்ளலாம் என நினைக்கின்றேன். கடந்த ஏப்ரல் மாதம் கொழும்பு பல்கலைக்கழக மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட அரசாங்கத்திற்கெதிராக நடந்த போராட்டத்தில் எதிர்பாராத விதமாக முகம் தெரியாத நபரொருவரால் இப்புகைப்படம் எடுக்கப்பட்டுள்ளது. இப்புகைப்படத்திற்கு பின்னால் இருக்க கூடிய சில விடயங்களை பகிர்ந்து கொள்கின்றேன்.

தற்போது பல்கலைக்கழகத்தில் மூன்றாம் வருட கற்கை நெறியை தொடரும் எனக்கு சகோதர மொழி பேசக்கூடிய நண்பர்களே அதிகம். எனக்கு சிங்களவர்கள் என்று அழைப்பதில் துளியும் உடன்பாடு இல்லை. அதனால் என் தாய்மொழிக்கு அடுத்ததாக சகோதர மொழி பேசக்கூடிய அவர்களை "சகோதர மொழி பேசக்கூடியவர்கள்" என்று குறிப்பிடுகின்றேன். அவர்களோடு பழகுவதிலும் அவர்களின் கலாசாரங்களை பற்றி தெரிந்து கொள்வதில் அதீத ஆர்வம். Don't Judge the book by its cover என்பார்கள். அதுபோல் நாம் நம் சகோதர மொழி பேசக்கூடியவர்களை ஒரு வட்டத்திற்குள் இருந்து ஒரு கண்ணோட்டத்தில் பார்க்கின்றோமோ என்று தோன்றுகிறது. நான் அவர்களோடு பழகியதிலிருந்து பெற்ற அனுபவங்கள் சிலவற்றை பகிர்ந்து கொள்கின்றேன்.

எங்களுடைய கலாசாரத்தையும் மதத்தையும் வெளியிலிருந்து பறைசாற்றுவதற்கும் ஒன்றாக பழகி தெளிவுபடுத்துவதற்கும் உள்ள வித்தியாசத்தை நான் உணர்ந்தேன். என் நண்பர்கள் கேட்பார்கள் நீங்கள் ஏன் தலையை மறைத்து முந்தானை அணிகின்றீர்கள்? நீங்கள் ஏன் முழுகைசட்டை அணிகின்றீர்கள்? ஹலால் என்றால் என்ன? இவ்வாறு பல கேள்விகள் கேட்பார்கள். அதற்கான விளக்கங்களை கூறும் போது புரிந்து கொள்வதோடு அதற்கான மதிப்பையும் தருவார்கள். எந்தளவென்றால் அவர்கள் வீட்டிலிருந்து கொண்டு வரும் எனக்கான உணவில் அசைவமே கலந்திருக்காது. எனக்கான பல்கலைக்கழக டீசேர்ட் முழு நீள கை வைத்த சட்டையாக தைத்துக் கொடுக்கப்பட்டது. நான் அணிந்து செல்லும் முந்தானை இடைவேளையின் போது அவர்களை அழகுபார்க்கும்.


அந்த புரிதலும் அன்பும் ஒவ்வொருவர் மனதிலும் விதைக்கப்படுமாயின் மதங்களுக்கிடையிலான முரண்பாடு இருக்காது என்பது என் எண்ணம். நோன்பு காலங்களில் எங்களை பார்த்து ஆச்சரியப்படுவார்கள். ஆனால் அதற்கான காரணங்களை விளக்கியதும் அதன் மகிமையை போற்றுவார்கள். சில சமயங்களில் பெண்கள் பள்ளிக்கு அனுமதிக்காமை, ஆண்கள் நான்கு திருமணம் செய்து கொள்ளல் போன்ற தலைப்புக்களோடு வாதிடுவார்கள். ஆனால் அவ்வாதங்கள் சண்டைகளாகவோ மனக்கசப்பாகவோ முடிந்ததில்லை, மாறாக அவர்கள் இக்கருத்தில் கொண்டுள்ள புரிந்துணர்வு அளவே வெளிப்படும் .எங்களது ஓய்வு நேரமானது எனக்கு சிங்களம் கற்பிப்பதிலும் நான் அவர்களுக்கு தமிழ் வார்த்தைகள் கற்பிப்பதிலும் வார்த்தை விளையாட்டுக்களாகவும் சிரிப்பும் மகிழ்ச்சியுமாகவே கழியும். சில வேளைகளில் பிரியாணி செய்முறையிலும் பொலஸ் கறியும் மீன் புளிதீயல்

செய்முறையிலும் கழியும்.
எம் பல்கலைக்கழகத்தில் நடக்கும் சகல மத ஆராதனைகளிலும் கலந்து கொள்வது என் வழக்கம். அவர்களுக்கான போதனை நடக்கும் போது நான் அவ்விடத்தில் நின்று வேடிக்கை பார்ப்பேன். எதுவும் புரியாவிட்டாலும் அவ்விடத்தில் அமர்ந்திருப்பேன். என்னிடம் வந்து உங்களுக்கு ஏதும் புரிகிறதா? என வினவுவார்கள். “எனக்கு எதுவும் புரியவில்லை. ஆனால் உங்கள் முகங்களை பார்க்கும் போது ஏதோ நல்ல விடயம் தான் போதிக்கப்படுகின்றது என்று புரிகிறது. எந்தவொரு மதமும் யாருக்கும் தீங்கு விளைவிக்குமாறு கூறவில்லை. நான் உங்களோடு அமர்ந்திருக்கின்றேன்“ என்பேன். Give respect and take respect என்பது போல் எதையும் கொடுத்தால் தான் எங்களும் மீண்டும் அது கிடைக்கும் என்பதில் நம்பிக்கையுடையவள் நான்.

எங்களோடு படிக்கும் பிக்குவை பற்றி நான் குறிப்பிட்டேயாக வேண்டும். ஐந்து விரலும் ஒன்றல்ல என்பது போல எல்லா பிக்குகளும் ஒரே மாதிரியல்ல. நான் பிக்குகளுக்கு கொடுக்கும் மரியாதையை பார்த்துள்ளேன். அவர்களின் சம்பாஷனை வித்தியாசமானது. அவர்கள் பிக்குகளை சாப்பிட அழைக்கும் போது “கன்ன“ என்ற வார்த்தையை உபயோகிக்க மாட்டார்கள். “ஹாமதுருவனே வலதன்ன வடின்ன“ (பிக்குவே சாப்பிட வாருங்கள்) என்பார்கள். நான் பிக்குகளோடு பேசும் போதும் அவர்கள் என்னோடு பேசும் போதும் சாதாரண சிங்கள மொழியிலேயே பேசுவோம். அத்தோடு கொஞ்சம் கொஞ்சமாக பிக்குகளின் மொழியையும் கற்றுத் தருவார்கள்.

மாற்றம் எங்கிருந்து ஆரம்பிக்க வேண்டும்? அது எங்களிலிருந்தே ஆரம்பிக்க வேண்டும். எங்களுடைய குழந்தைகளை சகோதர மொழி பேசக்கூடியவர்களோடு பழகவிட வேண்டும். அப்பொழுது தான் இருவருக்கிடையிலான உணர்வு புரிந்துணர்வாக மாற்றமடையும். மதம்சார் முரண்பாடுகளுக்கு அடிப்படை காரணம் புரிந்துணர்வின்மையே. குறிப்பிட்ட மதம்சார்பற்ற பாடசாலைகள் தோற்றம் பெறுமாயின் நிச்சயமாக மதவெறியர்கள் உருவாக மாட்டார்கள். ஒவ்வொரு பெற்றோரும் தன் குழந்தைகளுக்கு நல்ல பழக்கவழக்கங்களை கற்றுக் கொடுப்பத்தில் சகோதர





மொழியினருடன் நட்புறவு கொள்ளுவதையும் ஒரு பங்காக சேர்த்து கொள்ளுங்கள். என் கையில் ஒரு பொருளை மறைத்து வைத்து நானொரு பரிசு வைத்துள்ளேன் என்றால் அப்பரிசை பார்க்கும் வரை மற்றவர்கள் எவ்வளவு போராடுவார்ளோ மற்றவர்கள் என் கையை பற்றியிழுத்து என் பரிசை பார்க்க முயற்சிப்பார்களோ அதுபோலவே நம் கலாசாரத்தையும் கருத்துக்களையும் வெளிப்படுத்தாமல் விளங்கப்படுத்தாமல் மறைத்து வைத்தால் போராட்டங்கள் வெடிக்கத்தான் செய்யும்.

இறுதியாக புகைப்படத்திற்கு வருகின்றேன். மேலே நான் கூறிய, நான் அனுபவித்த சில பழக்கவழக்கங்களே என்னை பிக்கு மழையில் நனையாமல் என் கையிலிருந்த போராட்ட வாசகப் பதாதையை பிடிப்பதற்கு காரணமாய் இருந்தது. எங்கள் இரத்தத்தில் ஊறியிருக்க கூடிய சில பழக்கவழக்கங்கள். நாம் மீண்டும் மீண்டு பார்க்கக்கூடிய விடயங்கள் ஏதோவொரு சந்தர்ப்பத்தில் எங்களை அறியாமலே வெளிப்படும். இந்நிகழ்வின் பின் பல இளைஞர்கள் சிறுவர்களின் சில கருத்துக்களை பார்த்த போது நம் சமுதாயம் கொஞ்சம் கொஞ்சமாக மாற்றமடைந்து வருகின்றது என்பதை நான் உணர்ந்தேன். மாற்றத்தை எங்களிலிருந்தே ஆரம்பிப்போம்.



**இவர் கொழும்பு மாவட்ட ஸ்கை தமிழ் ஊடகத்தின் ஒருங்கிணைப்பாளர் மற்றும் துணிந்தெழு ஆசிரியர் குழு உறுப்பினர் ஆவர்.**

துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்
@skytamil.lk
மாதந்தோறும் | இதழ் - 21 | 04 ஜூலை 2022

# எரிபொருளுக்காக வீதியில் காத்திருக்கும் மக்கள் வாசிப்பில் ஆர்வம்..
















நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் மற்றும் எரிவாயு தட்டுப்பாடு காரணமாக தினசரி மக்கள் நாள் கணக்கில் நீண்ட வரிசையில் காத்திருக்கும் அவலம் நாளுக்கு நாள் தொடர்ந்துகொண்டே இருக்கிறது.

இவ்வாறான பிரச்சினைகளால் தொழில்களை இழந்து தனது குடும்பங்களை பிரிந்து ஊண்இஉறக்கம் இன்றி வீதிகளில் பல நாட்களாக காத்திருக்கும் மக்கள் மன ரீதியாக மிகவும் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில் அவர்களுக்கு மிகப் பெரும் பொழுது போக்கு மற்றும் ஆறுதல் பத்திரிகை மற்றும் புத்தகம் வாசித்தலாகும்.

அந்த வகையில் மட்டக்களப்பு ஆரையம்பதி மண்முனைப்பற்று பிரதேசத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் ஐந்து நாட்களுக்கு மேலே எரிபொருளுக்காக வரிசையில் காத்திருந்த மக்கள் பத்திரிகை மற்றும் புத்தகம் வாசிப்பதில் ஆர்வம் கொண்டிருப்பது எமது கமெராவில் பதிவானது..



எம்.பஹ்த் ஜுனைட்
(ஊடகவியலாளர்)
ஆசிரியர் குழு

# அனைத்து பதிப்புகளும் டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் உங்கள் கைகளில்...






## துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

இணையதளத்திற்கு பிரவேசியுங்கள்

**www.skymediasl.com**

@skytamil.lk



skytamil.lk@gmail.com

**துணிந்தெழு இதழில் உங்கள் விளம்பரங்களைப் பிரசுரிக்க**

தொடர்புகளுக்கு

**077 639 11 88**

**075 7000 791**

9 772792 102002